ஆகாயச் சிறகுகள்

மேலாண்மை பொன்னுசாமி

கங்கை புத்தக நிலையம்

ஆகாயச் சிறகுகள்

(முழு நாவல்)

மேலாண்மை பொன்னுச்சாமி

கங்கை புத்தக நிலையம்

23, தீனதயாளு தெரு,
தி.நகர், சென்னை-17.

முதற் பதிப்பு : நவம்பர், 1996
இரண்டாம் பதிப்பு : டிசம்பர், 2004

© உரிமை : ஆசிரியருக்கு

விலை ரூ. 35.00

- Title AGAYA CHIRAGUGAL
- Author MELAANAMAI PONNUSAMY
- Subject NOVEL
- Edition Second Edition, December - 2004
- Pages 136
- Published By Gangai Puthaga Nilayam
  T.Nagar, Chennai-17.
- Price Rs. 35.00

Laser Typeset by: Brilliant Graphics, Ph.: 22452912

Printed at : Nathan & Company, Chennai - 42.

சமர்ப்பணம்

மாதர்களும் சமமே என்கிற தன்னுணர்வை மாதர்களிடம் ஏற்படுத்தி... தமிழக மனித உரிமைப் பிரச்னைகளை நேருக்கு நேராக சந்தித்து... மாதர்களுக்குப் பாதுகாப்பு வழங்கி... மாதர்களுக்குள் மாபெரும் விழிப்புணர்வை ஏற்படுத்தி யிருக்கிற மிகப் பெரிய சமுதாயப் பணியாற்றியிருக்கும் 'தமிழக ஜனநாயக மாதர் சங்கத்தை' நிறுவியவர்களில் முக்கியமானவரும் -

சகலராலும் 'அம்மா' என்று அர்த்த பூர்வமான அன்போடு அழைக்கப்பட்டவரும் -

தேச சுதந்திரப் போராட்டங்களிலும், சுதந்திரப் பாரதத்தில் ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்காகவும் ஓயாமல் உழைத்தவரும் -

உயிர் பிரியும் வரை மார்க்ஸீய இயக்கத்தோடு தன்னை முழுமையாக ஐக்கியப்படுத்திக் கொண்டவருமான...

கே.பி. ஜானகியம்மாளுக்கு...

என்னுரை

எப்பொழுது என்று துல்லியமாக ஞாபகமில்லை. பத்துப் பதினைந்து வருடங்களுக்கு முன்பு. இன்னும்கூட சில வருடங்கள் கூடுதலாக இருக்கக்கூடும்.

நான் அப்போது ஆரம்ப நிலை எழுத்தாளன். செம்மலரில் மட்டுமே ஒரு சில கதைகள் பிரசுரமாகியிருந்தன. அப்போது -

ஓர் அரங்கக் கூட்டம். கட்சி ஊழியர்களுக்கான பேரவை. அதில் நானும் ஓர் ஊழியன்.

முக்கிய தோழர். தற்கால அரசியல் நிலவரம் பற்றிய ரிப்போர்ட்டை வழங்கிய பிறகு... 'மாதர் சங்கத்தை கட்டுவதற்கு கட்சித் தோழர்களும் ஒத்துழைக்க வேண்டும்' என்று வேண்டுகோள் விடுத்துப் பேசினார்... 'அம்மா' கே.பி. ஜானகியம்மா.

'கட்சித் தோழர்கள் தத்தம் மனைவியர்களை இயக்கத் துக்குக் கொண்டு வர முதலில் முனைய வேண்டும்' என்றார்.

அப்போது -

ஒரு சம்பவம் சொன்னார். "ஓர் இளம் தோழர் ஆர்வக் கோளாறு காரணமாக மனைவியை நிர்ப்பந்தப்படுத்தியதால்... அந்தப் பெண் இயக்கத்தின் மீது வெறுப்பு கொண்டவராக மாறிப் போனார்" என்பதை நாலு வரி செய்தியாக போகிற போக்கில் சொன்னார்.

அந்த நாலு வரிச் செய்தி மற்ற கட்சி ஊழியர்களிடம் என்ன விளைவித்ததோ எனக்குத் தெரியாது. ஆனால், எனக்குள் அந்தச் செய்தி ஓர் ஆல விதையாக விழுந்தது.

அந்த ஆல விதைதான்... இத்தனை ஆண்டுகள் கடந்த பின்பு... என்னுள்ளிருந்து 'ஆகாயச் சிறகுகளாக...' 'கல்கி'யில் 15 வாரங்கள் ரெக்கையடித்தது.

பொதுவாக... ஒரு நூலுக்கு அணிந்துரை என்பது நூலாசிரியரின் மதிப்புக்குரிய பெரியவரிடம்தான் கேட்டுப் பெறப்படும்.

ஆனால்... இந்த நூலுக்கு வாசகர்களே அணிந்துரை வழங்கியிருக்கின்றனர். 'ஆகாயச் சிறகுகள்' தொடராக வந்த சமயத்தில் 'கல்கி' அலுவலகத்துக்கு வந்து சேர்ந்த கடிதங்களே... இங்கு அணிந்துரையாக அலங்கரிக்கின்றன.

வாசகர்கள் என்பவர்கள் எழுத்தாளன் எழுதிப் போட்டதை வாசித்து முடிப்பவர்கள் மட்டுமல்லர்; என்னைப் பொறுத்தவரை. வாசகர்கள், படைப்பாளியை விடவும் அறிவாளிகள். வாழ்க் கையை காகிதங்களிலல்ல; களத்திலேயே வாழ்ந்து அனுபவிப் பவர்கள். அனுபவங்களை வாழ்க்கையிலிருந்து சொந்தக் கைகளால் அள்ளிச் சேகரிப்பவர்கள். சொந்த மனசால் அனுபவங்களை அலசுபவர்கள். வாசித்தவற்றை சுய அனுபவங் களோடு உரசிப் பார்ப்பவர்கள். உரசிப் பார்த்த பிறகு... தங்கமா, பித்தளையா என்று தரம் பிரித்துச் சொல்லத் தகுதியானவர்கள். இலக்கிய விமர்சகர்களின் மதிப்பீடுகளை விடவும் வாசகர்களின் மதிப்பீடுகள் அசலானவை; நம்பத் தகுந்த நிஜமானவை; நேர்மையானவை. ஏனெனில், அவர்கள் சுயமானவர்கள்.

எழுத்தாளனை இயக்குகிற வலிமை, வாசகர்களுக்கு உண்டு என்று உறுதியாக நம்புகிறேன். எழுத்தாளனை வசக்குகிற ஆற்றல் உண்டு. எழுத்தாளனின் கையிலுள்ள எழுதுகோலின் திசையை தீர்மானிக்கும் வலிமை உண்டு.

இது வெறும் புகழ்ச்சி வார்த்தைகளன்று; நிரூபிக்கப்பட்டு விட்ட உண்மை. மறுக்க முடியாத நிஜம்.

ஆதாரம் வேண்டுமா?

எதை எழுதுவது; எப்படி எழுதுவது என்கிற இலக்கிய சுதந்திரத்தை முழுக்க தன் பேனாவில் வைத்திருந்தவர், புகழ்மிக்க எழுத்தாளர் ஜெயகாந்தன். வெளிச் சக்திகளின் நிர்ப்பந்தத்திற்கு அசைந்து கொடுக்காத இலக்கியத் தன்னுரிமையைக் காப்பாற்றுகிற மனவலிமை மிக்கவர்.

அவர் 'அக்கினிப் பிரவேசம்' என்றொரு சிறுகதை எழுதினார். வாசகத்திரளுக்குள் ஓர் அதிரடியாக வந்து விழுந்த சிறுகதை... அது. அதிர்ந்து போன வாசகர்கள் ஆரவாரமாய் வரவேற்கவும் செய்தனர்; ஆவேசமாகக் கண்டிக்கவும் செய்தனர்.

கண்டனங்களின் வெக்கையும், ஆதரவுகளின் குளுமையும் அளவுக் கூடிக் கொண்டே போயிற்று.

சலனப்படாமல் பதில் சொல்லிப் பார்த்தார், படைப்பாளி. ஆயினும்... கண்டனங்களும், ஆதரவுகளும் வந்து கொண்டே இருந்தன.

வந்த எதிரும் புதிருமான வாதப்பிரதி வாதங்களுக்கு படைப்பு மூலமாகவே பதில் சொல்ல வேண்டிய நிலைமை.

அந்தச் சிறுகதை முடிந்த இடத்திலிருந்து... அதே பாத்திரங்களை (பிரபு - கங்கா) இயங்க விட்டுக் காட்டினார். அதுதான் 'சில நேரங்களில் சில மனிதர்கள்' என்ற நாவலாக முடிந்தது.

அந்த நாவலின் முடிவு மீதும்... ஏகப்பட்ட அபிப்பிராயங்கள். வாசகக் கருத்துகள். அடர்ந்து தொடர்ந்த ஆட்சேபங்களும் ஆதரவுகளுமாய்...

படைப்பாளியின் மூடிய பேனா மீண்டும் திறக்க வேண்டிய நிலைமை.

'கங்கை எங்கே போகிறது' என்ற நாவலாக நீண்டு முடிந்தது.

ஆம்... 'அக்கினிப் பிரவேசம்' எழுதியது மட்டுமே ஜெயகாந்தன். அதன் தொடர்ச்சியான இரு நாவல்களை படைத்தவர்கள் வாசகர்கள்தான். ஜெயகாந்தன் மூலமாக வாசகர்களே படைத்தார்கள்.

இப்படிப் பல ஆதாரங்களைச் சொல்லிக் கொண்டே போக முடியும். வாசகர்கள் ஆற்றல் மிக்கவர்களாக இருப்பதன் காரணம், அவர்கள் வெறும் ரசிகர்கள் மட்டுமல்லர்; சிருஷ்டிப்புத் தன்மை மிக்க மக்கள் திரளின் ஒரு பகுதி அவர்கள். படித்த பகுதி.

மக்கள் இலக்கியம் படைக்கிற முற்போக்காளர்கள். மக்களே இலக்கியம்தான் என்றும் நம்புகிறார்கள்; நேசிக்கிறார்கள்; மதிக்கிறார்கள்.

இந்த நம்பிக்கையும், நேசமும் மதிப்பும் அசலானவை; ஆழ்ந்த நிஜங்களில் வேர்விட்ட வலுவானவை.

ஆகவே... சரித்திரச் சக்கரத்தைச் சுழற்றும் ஆற்றல் மிக்க மக்கள் சக்தியின் ஒரு பகுதியான வாசகர்களின் கருத்துகளே எனது நூலின் அணிந்துரையாக அமைந்திருப்பது ரொம்பப் பொருத்தம்; ரொம்பப் பெருமை எனக்கு.

உண்மையில் இந்த நாவல் எழுதுகிறபோது 'கல்கி'யில் பிரசுரமாகும் என்றே நான் நினைக்கவேயில்லை. இதை பதிப்பகத்திற்கு நேரடியாகத் தர வேண்டும் என்ற நோக்கில்தான் எழுதினேன்.

ஒரு முரட்டு தைரியத்தில்... ஒன்பதாம் அத்தியாயம் எழுதி முடித்தவுடன் 'கல்கி' அலுவலகத்துக்கு அனுப்பி வைத்தேன். அப்போதும் பிரசுரமாகும் என்ற நம்பிக்கை என்னிடமில்லை. 90 சதவிகிதம் அவநம்பிக்கையே என்னுள் இருந்தது.

எனது தொண்ணூறு சதவிகிதம் நம்பிக்கையின்மையை தூள் தூளாக்குகிற மாதிரி, 'கல்கி' ஆசிரியரிடமிருந்து வந்த கடிதம், வரவேற்பான கடிதம்.

இதில் 'கல்கி' ஆசிரியரின் கண்ணியமும் அன்பும் முழுசாக வெளிப்பட்டது. என் எழுத்தில் ஒற்றை எழுத்தைக் கூட அவர்கள் மாற்றவில்லை.

இத்தனை வாரத்திற்குள் முடித்தாக வேண்டும் என்கிற நிர்பந்தமோ கட்டாயமோ துளிக்கூட இல்லை. முழுமையான சுதந்திரம் தந்தார்கள் என்பதே நூறு சதவிகித உண்மை.

ஆனால்... நாவலின் உச்சகட்டத்தை இதற்கு மேல் விரிப்பது, இலக்கிய நேர்மையன்று; நீர்த்துப் போகிற ஆபத்தும் உண்டு என்று மனதாரக் கருதினேன்.

'இன்னும் முடியலியா...' என்ற சலிப்பு வந்த பிறகு நிறுத்துவதை விட 'அதற்குள் முடிந்து விட்டதா?' என்ற ஆச்சர்யத்தோடு நிறுத்தியதே... நாவலின் கட்டமைப்பு உரிய கச்சிதத்தோடு வெற்றி பெற்றதற்கான ஆதாரமாக நான் நினைக்கிறேன்.

இந்த இருபதோராம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் - மனித உரிமை குறித்த பிரச்னை, உலக அரசியல் பிரச்னையாக முன்னுக்கு வந்திருக்கிற இந்நாளிலும் 'பெண்ணுரிமை தேவையா' என்ற குரல் ஒலிப்பது ஆச்சர்யமான வேதனை.

ஒரு நல்ல சமுதாயத்தின் ஆரோக்கியமான செயல்பாட்டுக்கு ஆணும் பெண்ணும் இரண்டு கால்களாக இருக்க வேண்டும். இரண்டு கால்களும் சமத்துவ வலிமையோடும், தோழமை யோடும், ஒற்றுமையோடும் இருந்தால்தான்... பயணம் முழு வெற்றி பெறும்.

பெண்ணை மட்டும் ஒடுக்கி, அடுப்பங்கரைப் பிராணியாகவும், படுக்கையறைப் பொருளாகவும் மட்டுமே சிறுமைப்படுத்தி அடிமை செய்தால்... என்னவாகும்?

சமூகமே ஒன்னரைக்கால் நொண்டியாகத்தான் கெந்திக் கெந்தி நடக்க வேண்டும். சமூகமே ஊனச் சமூகமாக பலவீனப்பட்டு விடும்.

ஆகவேதான்... சமுதாய மாற்றம் குறித்து சிந்தித்த பாரதி போன்ற மகாகவிகளும், அறிவியலாளர்களும், சிந்தனாவாதிகளும் பெண்ணுரிமை குறித்தும் போராடியிருக்கின்றனர். அந்தத் தடத்தில் நானும், எனது 'ஆகாயச் சிறகுகளும்' சரி... முழு வடிவம் பெற்ற நூலாக உங்களிடம் வருகிறது.

தொடராக வெளியிட்ட 'கல்கி' ஆசிரியருக்கும், அணிந்துரை வழங்கி உற்சாகமூட்டிய ஆக்கபூர்வ வாசக அறிஞர்களுக்கும், நூலை நன்கு அச்சிட்டு வெளியிடும் புகழ் மிக்க 'கங்கை புத்தக நிலைய' அதிபர் அவர்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றிகள்.

நாவல் உங்கள் கையில். வாசித்த மனநிலையோடு ஓர் அஞ்சல் போடுங்கள்.

உங்கள் பாராட்டுகள் என் பேனாவுக்கு மையூற்றும்; உங்கள் விமர்சனமும் என் பேனாவை இன்னமும் கூர்மையாக்கும்.

நன்றி.

மேலாண்மறைநாடு
626127
காமராசர் மாவட்டம்

என்றும் உங்கள்
மேலாண்மை பொன்னுச்சாமி

விமர்சனப் பூக்கள்

☐ திரு. மேலாண்மை பொன்னுச்சாமியின் 'ஆகாயச் சிறகுகள்' அருமையான படைப்பு. கூட்டுப் புழுவாய் வீட்டிற்குள் முடங்கிக் கிடக்க விரும்பிய பிரேமா 'ஆகாயச் சிறகுகள்' பெற்று, புதுமைப் பெண்ணாக நாட்டு வானில் பறக்கும் நிலையை எட்டியதை, அழுத்தமான நடையில், கிராமியப் பின்புலத்தில் சிறப்பாகத் தீட்டியுள்ளார். திடீரென்று முடிந்து விட்டது போல் தோன்றினாலும் முத்திரை பதித்த சிறந்த நாவலை வழங்கியுள்ளார். பாராட்டுகள்; வாழ்த்துகள்.

திருச்செந்தூர் **டாக்டர் மா.பா. குருசாமி**

☐ திரு. மேலாண்மை பொன்னுச்சாமி அவர்கள் எழுதிய 'ஆகாயச் சிறகுகள்' என்னும் குறுநாவல் மிகவும் சிறப்பாகவும் யதார்த்தமாகவும் இருந்தது. 'தங்கம்மாள்' என்னும் பாத்திரம் சிறந்த போராட்ட வீராங்கனையாகவும், பெண்களின் முன்னேற்றத்திற்கு பாடுபட்ட முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திருமதி கே.பி. ஜானகி அம்மாளை (மதுரை) என் போன்ற வாசகர்களுக்கு நினைவு படுத்தியது.

சாதாரணப்பட்டிக்காட்டு பெண் எவ்வாறு போராட்டத்திற்கு தயாராகிறாள் என்பதைக் கருக் கொண்டு இந்நாவல் மிகவும் விறுவிறுப்பாக இருந்தது. நன்றி.

சேலையூர் **ஜி. மாரியப்பன்**

☐ ஒரு கணவன் மனைவியையோ, ஒரு மனைவி கணவனையோ நல்வழிப்படுத்த அடிப்படையாக அன்பு, அரவணைப்பு, வெளிப்படையான பேச்சு, மனித நேயம் எல்லாவற்றுக்கும் மேலாக விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை இவையே மிகவும் உயர்ந்தது என்பதை ஒரு சமுதாய கண்ணோட்டத்தோடு தெளிவாக 'ஆகாயச் சிறகுகள்' மூலம் சொல்லப்பட்டுள்ளது. தீர்க்கமான நடை. ஒவ்வொரு வாரமும் மிகவும் ஆவலோடு படித்த அனுபவம். இப்படியொரு சிறப்பான வாய்ப்பைத் தந்த மேலாண்மை பொன்னுச்சாமிக்குக நன்றி கலந்த பாராட்டுகள்.

அம்பத்தூர் **ஐ. சாந்து உஸ்மானி**

☐ வீடே உலகமென்று முடங்கிக் கிடக்கும் பெண்கள், ஊரிலுள்ள வீடுகளின் பிரச்னைகளுக்கு குரல் கொடுக்க வர வேண்டிய கட்டாயத்தை உணர்வுகளின் கலவையாய் தந்த மேலாண்மை பொன்னுச்சாமியின் 'ஆகாயச் சிறகுகள்' போல் இன்னும் பல சிறகுகளை 'கல்கி' பிரசுரிக்கட்டும். சமுதாயம் விழிக்கட்டும்.

விருதுநகர் **பி. மகாலிங்கம்**

☐ மாருதி அண்டை வீட்டு பிரேம(ா) பறவை சிறகு கோதிய விதமும், கூண்டை விட்டுப் பறந்த வேகமும், பெட்ரோல், கேஸ் (Gas) விலை உயர்வைப் போல் அபாரமாய் இருந்தாலும் மேலாண்மையுடன் ரசிக்க முடிந்தது.

மண்ணில் தோன்றும் ஒவ்வொரு உயிருக்கும் போராடுவது என்பது இயற்கை குணம் என்ற கதையின் உள்ளடக்கம் மனத்தில் பதிந்தது.

'கம்யூனிஸம்' மறக்கப்பட்டும், மறுக்கப்பட்டும் வரும் இந்த காலக் கட்டத்தில் இம்மாதிரி கதைகள் நிச்சயம் வரவேற்கப்பட வேண்டும் என்பதை தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மதுரை **என். ரேவதி**

☐ 'ஆகாயச் சிறகுகள்' தொடர்கதை 'ஆனந்தச் சிறகுகள்' விரித்துப் பறப்பதாக அமைந்திருந்தது. மனத்திற்கு இதமளித்த நல்லதொரு நெடுங்கதை படித்த சந்தோஷம். நன்றி கல்கி. நன்றி திரு. மேலாண்மை பொன்னுச்சாமி.

சுப்பராயர்புரம் **'மணி மதியண்ணன்'**

☐ ஆண்களுக்கு எந்த விதத்திலும் பெண்கள் சளைத்தவர்கள் அல்லர் என்பதை நிரூபித்ததாய் அமைந்திருந்தது மேலாண்மை பொன்னுச்சாமியின் 'ஆகாயச் சிறகுகள்'. ஆசிரியரின் கை வண்ணமும் மாருதியின் ஓவியமும் மனத்தில் 'பன்ச்' ஆகி விட்டன. பாராட்டுகள்.

விசலூர் **ஜி.ஜி. கிருஷ்ணன்**

☐ பதினைந்து வாரங்களாக எங்கள் மனத்தை இதமாக வருடி வந்த 'ஆகாயச் சிறகுகள்' இன்னும் சில வாரங்களுக்குத் தொடராதா என்று ஏங்க வைத்து விட்டது.

திருநெல்வேலி - 7 **என். பாஸ்கர்**

☐ ஆகாயச் சிறகுகளில் விரிவான அடித்தளமிட்டு கதையைத் தொடங்கியவர்; பொசுக்கென்று முடித்து விட்டாரே இந்த மேலாண்மை பொன்னுச்சாமி. ஏதேனும் நிர்பந்தம் காரணமாக இருக்குமோ?

என்போன்ற அவரின் நீண்ட நாளைய வாசகர்களுக்கு இது பெரிய ஏமாற்றம்தான்.

புதுவை - 4 **ஆர். தாமோதரன்**

☐ மேலாண்மை பொன்னுச்சாமி அவர்களின் 'ஆகாயச் சிறகுகள்' உதிர்த்த 'பொல்லாதவங்களைக் கொண்டாடுற முட்டாள் தனத்தை விட, நல்லவங்களைக் கொண்டாடாம இருக்குற

மொராட்டுத்தனம்... ரொம்ப கொடுமையானது' எனும் கருத்து ரொம்ப அருமையானது ஸார்.

புருஷானூர் **பா. திருவேங்கடம்**

☐ மேலாண்மை பொன்னுச்சாமியின் 'ஆகாயச் சிறகுகள்' கதை 15 வாரங்கள்தான் வந்ததென்றாலும் மிக நன்றாக, யதார்த்தமாக, அருமையாக இருந்தது. இன்னும் சில வாரங்கள் தொடரக்கூடாதா என்ற ஏக்கத்தை ஏற்படுத்தியது இக்கதை.

கோவில்பட்டி **மோ. ஸ்டாலின்**

☐ மேலாண்மை பொன்னுச்சாமியின் 'ஆகாயச் சிறகுகள்' என்றென்றும் எங்கள் இதயக் கூட்டுக்குள் சிறகடித்துக் கொண்டே யிருக்கும்.

சேலம் - 9 **மு. இரவிச்சந்திரன்**

☐ காந்தத்தைப் பற்றிக் கொள்ளும் இரும்புத் துகள்களுக்கும் காந்தத்தின் தன்மை வந்துவிடுவது போல பால்ச்சாமியின் பொதுநலத் தொண்டு பிரேமாவையும் தொற்றிக் கொள்வதில் வியப்பேதும் இல்லை. கூச்சம் என்னும் சிறையில் தன்னைத் தானே அடைத்துக் கொண்டு சிறைப் பறவையாய் வாழ்ந்த பிரேமா, சுதந்திரப் பறவையாக தனது ஆகாயச் சிறகுகளோடு பறக்கும் போது, இக்கதையைப் படிப்பவர்களின் உள்ளமும் சிறகடித்துப் பறக்கத் துவங்குகிறது.

தஞ்சாவூர் **வெ. முருகானந்தம்**

☐ மேலாண்மை பொன்னுச்சாமி தனது 'ஆகாயச் சிறகு'களை 15 வாரத்துக்குள் வெட்டி விட்டாரே... மேலும் சில வாரங்கள் பறக்க விட்டிருக்கலாமே...?!

சேலம் - 2 **சூர்யநிலா**

☐ நம் இந்தியப் பெண்களுக்கே உரிய கூச்ச, அடக்க சுபாவத்தை பிரேமா மூலம் எடுத்துக் காட்டி அந்த பெண்மையும் தன் கணவன் பெயருக்கு ஓர் அவமானம் என்று வந்தபொழுது எப்படி வீறு கொண்டு எழுகிறது என்று தமக்கே உரிய பாணியில் எடுத்துக்காட்டிய ஆசிரியர் - மேலாண்மை பொன்னுச்சாமிக்கு எங்கள் வாழ்த்துகள். வெளியிட்ட 'கல்கி'க்கும் எங்கள் பாராட்டுகள்.

சென்னை - 59 **ரொசாரியோ ரவிச்சந்திரன்**

☐ ஆகாயச் சிறகுகளுக்கு ஏன் இந்த சினிமாத் தனமான முடிவு? எழுதியது யார்? மேலாண்மை பொன்னுச்சாமியா? நம்பவே முடியவில்லை.

திருவெண்ணெய் நல்லூர் **பா. சித்ரா**

☐ மேலாண்மை பொன்னுச்சாமியின் 'ஆகாயச் சிறகுகளை'ப் படித்தபோது நம்மை ஒன்றிவிட செய்து விடுகிறார். பிரேமா போன்ற பெண்ணை இனிமேல் கதைகளில் மட்டுமே பார்க்க முடியும் என நினைக்கையில் ஏதோ அடைக்கிறது. கடைசியில் பிரேமாவையும் சாவனிஸ்டாக காட்டி விடுகிறார் ஆசிரியர். நளினத்தை விட்டு விட்டு ஆகாயத்தில் பறக்க தொலைத்து விட்டாரோ? ஒருநாள் இந்த உண்மையின் தீவிரம் புரியும். அப்போது எல்லா பெண்ணும் ஆணும் முரணாகவே இருப்பர். இனி மேலாவது விழித்துக் கொண்டிருப்பவர்களை 'விழித்துக் கொள்' என்று கூறாமல் இருந்தால்தான் ஓரளவாவது Manage செய்ய முடியும் என நினைக்கிறேன்.

திப்பிராஜபுரம் **தா. ராஜேந்திரன்**

☐ மென்மையான - பூவாய் பொலிந்திருப்பவர்கள், சமூகத்தில் சிறுமையைக் கண்டு அஞ்சாது, போரிட்டு புரட்சிப் பெண்ணாக

தொடருக்குள் வீறு நடைபோட்ட 'பிரேமா' போல் பல பெண்கள் உருவாகியிருந்தால் நாடு முன்னேறியிருக்கும். 15 வாரங்களாக 'புயலுக்கு நடுவே பூவின் போராட்டம் கூட முயற்சியை நம்பிக்கை கொண்டு வெல்வது' என்ற அருமையான கண்டிப்பான கேரக்டர் கொண்டு மேலாண்மை பொன்னுச்சாமி தொடரில் லயிக்கச் செய்து விட்டார். 'ஆகாயச் சிறகுகள்' அற்புதமான படைப்பு. பாராட்டுகள்.

விழுப்புரம் - 2 **வை. சண்முகவேல்**

☐ நடைமுறை வாழ்க்கைக்குச் சம்பந்தமில்லாத சிறுகதை களையும், தொடர்கதைகளையும் படித்து, அலுத்துப் போன போது, 'ஆகாயச் சிறகுகள்' உண்மையிலேயே கால் கொண்டு பூமியின் மீது நடக்க வைத்ததோடு மட்டுமின்றி, பொய்யான மாயத் தோற்றங்களில் இருந்து விடுபட்டு, நிஜத் தோற்றத்தை, நிஜ வாழ்க்கையை நிஜக் கண்களால் காண வைத்தது.

சென்னை - 97 **சு. பட்டாபிராமன்**

☐ 'ஆகாயச் சிறகுகள்' அற்புதமான படைப்பு. ஒரு பெண்ணின் அறிவு, பூ மலர்வது போல் மலர்ந்து மணம் வீசுவதாக சித்திரித் திருப்பது மிகவும் சுவாரஸ்யமாக இருந்தது.

சென்னை **சரளா**

☐ மேலாண்மை பொன்னுச்சாமி 'ஆகாயச் சிறகுகள்' தொடரை இவ்வளவு விரைவில் முடித்து விடுவார் என எதிர்பார்க்கவில்லை. பாரதி கண்ட 'நிமிர்ந்த நன்னடையும், நேர் கொண்ட பார்வையும் நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும், திமிர்ந்த ஞானச் செருக்கும்' உடைய புதுமைப் பெண்ணாக பிரேமாவை மாற்ற பால்ச்சாமி வித்திட்டபோதும், அவன் ஊரில் இல்லாதபோது நடந்த சம்பவங்களே நீரூற்றி, அவனது இலட்சியங்களை அவளிடத்தில்

வேரூன்ற வைத்தன. கணவன் மேல் அவள் கொண்ட இயற்கையான ஆழ்மனக் காதலும் அதற்கு உரமிட்டன என்பது மறுக்க முடியாதது! மேலாண்மை பொன்னுச்சாமிக்கு மனமார்ந்த வாழ்த்துகள்.

மதுரை **ரோகிணி சபாபதி**

☐ 'கம்யூனிஸ்ட் பால்ச்சாமி'யை பதினைந்து வாரம் சுதந்திரமாக உலவ விட்டதின் மூலம் தனது நடுநிலைமைப் பதாகையை உயர்த்திப் பிடித்துள்ளது 'கல்கி'. ''நாம் தழுவியிருக்கின்ற கொள்கைகளுக்கு முரணான ஒரு கொள்கையை மற்றவர் தழுவியிருக்கலாம். ஆனால் அதற்காக அவர்களுடைய மனோ தர்மத்தையும் அந்தரங்கச் சுத்தியையும் சந்தேகிப்பது தவறு'' என்ற பரந்த மனோபாவம் இல்லாமல் இது சாத்தியமாகாது! மேலாண்மை பொன்னுச்சாமியும் தன் பங்குக்குக் குறை வைக்காமல் கண்ணியமான, அற்புதமான ஒரு கதையைத் தந்திருக்கிறார். பாராட்டுகள்.

சேலம் **எஸ். முரளி**

ஆகாயச் சிறகுகள்

மேலாண்மை பொன்னுச்சாமி

*பா*ல்ச்சாமி கொதிக்கிற பாலமாக மனசுக்குள் பொங்கிப் போயிருந்தான். நுரை நுரையாக பொங்கித் திமிறிய மகிழ்ச்சிப் பிரவாகம். வெள்ளை வேட்டியும் வெள்ளைச் சட்டையும் பளிச்சென்றிருந்தது. ரத்தம் கொப்பளிக்கிற மாதிரியான சிவப்புத் துண்டு இடது தோளில் கிடந்தது.

ஆள் பார்க்க புது மாப்பிள்ளை போலிருந்தான். உள்ளுக்குள் மாப்பிள்ளை முறுக்கான மகிழ்ச்சிக் கொந்தளிப்பு. இதுவரை காணாத குதூகல மலர்ச்சி. மனசின் மகிழ்ச்சி முகத்தின் வெளிச்ச மாக...

சங்க அலுவலகத்துக்கு முன் தோழர்கள் கடப்பாறையும் கையுமாகப் பரபரத்தனர். ஒரு தோழர் குழி தோண்ட... ஒருவர் மண்டியிட்டு மண்ணை அள்ள... மற்றொருவர் கம்புகள் ஊன்ற... கொடியைக் கட்ட... தோரணம் கட்ட... என்று வேலைகள் இறக்கைக் கட்டிப் பறந்தன.

மைக்செட் பெரு முழக்கமாக அந்தச் சந்திப்புச் சாலையை மூழ்கடித்துக் கொண்டிருந்தது. இரண்டு தோழர்கள் நீள நீளப் பெஞ்சுகளாக நாலு தூக்கிக் கொண்டு வந்து ஒன்று போல போட்டனர். நொடியில் மேடை ரெடி! அதன் மேல் நாலைந்து சேர்கள். ஒரு மேஜை. அதன் மேல் ஒரு சிவப்புத் துணிவிரிப்பு. மேடையின் பின்புறமாக ஒரு சிவப்புப் பேனர். டியூப் லைட் வெளிச்சத்தில் ரத்த நிறம் செம்பொன்னாகப் பளீரிட்டது.

பால்ச்சாமிக்கு இன்று பாராட்டு விழா. மாநில அளவிலான மறியல் போராட்டத்தில் பங்கெடுத்து, சிறை சென்று, பதினான்கு நாள் சிறைக் கைதியாக இருந்து வந்தவன். அவனுக்கு இங்கே இந்தத் தொழிற்சங்கம் பாராட்டு விழா நடத்திக் கௌரவிக்க இருக்கிறது.

அதற்கான தடபுடல் ஏற்பாடுகள். பால்ச்சாமியைப் போலவே உற்சாகப் பெருக்கில் தத்தளித்தனர் தோழர்கள். கல்யாண வீடு போல கேலியும் கிண்டலுமாய் சிரிப்பு தூள் பறந்தது.

''நம்ம பால்ச்சாமியைப் பாரப்பா... 'ஒயிட் அண்ட் ஒயிட்'லே 'ஜம்ம்'னு இருக்கான். புது மாப்பிள்ளை கணக்கா...''

''பாராட்டு விழா இல்லே? இன்னைக்கு அவனை 'வானத்துச் சந்திரன், ஆகாயச் சூரியன்'னு ஆளுக்கு ஆள் தூக்கிப் பந்தாடுவாகளே...''

''பாராட்டலாம்லே? போலீஸ் ஸ்டேஷனைக் கண்டாலே, நமக்கு தொடையெல்லாம் நடுங்குது. அடி வவுறு கலங்குது. அவன் ஜெயிலுக்கு போய்... பதினாலு நா இருந்துருக் கானே...''

''அச்சடிச்ச களியும், அவுன்ஸ் கிளாஸ் சாம்பாரும் வேப்ப மரத்து நெழலும், வெண்ணையெடுக்காத மோரும் பதினாலு நா குடிச்சதுலே... பால்ச்சாமி ஒரு சுத்து பெருத்துட்டானப்பா. ஆளே... பளபளப்பாயிட்டான்.''

''பெறகு...? வ.உ.சி. மாதிரி செக்கிழுத்து ஜெயிலுக் குள்ளே சாகச் சொல்றீயா, நம்ம பால்ச்சாமியை? வெண் ணெய் எடுக்காத மோருக்கு நீ போயிருக்கக் கூடாது? போகலேல்லே...?''

''போன பால்ச்சாமியும்... தியாகம் செய்ஞ்சு, ரெத்தம் செத்து, எலும்பும் தோலுமா வந்துட்டானாக்கும்?''

''சும்மா... 'வாய் புளிச்சதோ, மாங்கா புளிச்சதோ'ன்னு சொல்லாதே. பொண்டாட்டி, புள்ளைக, வீட்டு வேலைகளைப் போட்டுட்டு தைரியமாப் போகணும்லே?''

வேலை வேலையாக இருந்தாலும் பேச்சும் சிரிப்பும் தூள் பறந்தது. 'இவருக்கெல்லாம் பாராட்டு விழாவா' என்று நக்கலடித்த தோழர் கூட, பால்ச்சாமியைப் பார்த்து கண்ணடித்துக் குறுநகை செய்து கொண்டார். 'சும்மா வேடிக்கைப் பேச்சுத்தானப்பா... வருத்தப்படாதே' என்று சொல்லாமல் சொல்லிக் கொள்கிற கண்ணடிப்பு.

விழாவின் ஆரம்பக்களை. பரபரப்பு.

சிறப்புரையாற்ற வந்திருந்த மாவட்டச் செயலாளர் மேடையேறினார். ஜிப்பாவும் வழுக்கைத் தலையும், முதுமைக்குரிய மரியாதைத் தோற்றம் தந்தது. ஆனால் முகத்தில் இயல்பான இளமை. நாற்பதுக்கும் உட்பட்ட வயது.

கூட்டம் 'ஜே ஜே' என்று கூடியிருந்தது. மாவட்டச் செயலாளர், பால்ச்சாமிக்கு சிவப்புத் துண்டை விரித்து அணிவிக்க... கைதட்டல்...

இவனுக்கு மாலைகளும் துண்டுகளும் போர்த்தி மகிழ... உள்ளூர்த் தோழர்கள் காத்திருந்தனர். அதோ ஒரு பெண்... கையில் மலர் மாலையுடன்.

அவள், இவனைப் பார்த்து அங்கிருந்தபடியே புன்னகைத்தாள். இவன் அவளை பெருமிதமும் பூரிப்பும் ததும்பப் பார்த்தான். இன்றைக்குத்தான் புதுசாகப் பார்ப்பதுபோல வியப்பும் பிரமிப்பு மாகப் பார்த்தான்.

பார்வை அவள் மீது நங்கூரமிட... மனசுக்குள் மாலை மாலையாக நினைவுகள். நாலு கண்களின் பின்னல்.

அப்போது -

பால்ச்சாமிக்கு கட்சியும் கல்யாணமும் ரொம்பப் புதுசு. அதிலும் கல்யாணம் ரொம்பப் புதுசு. நடந்து நாலு மாசம்தான் ஆகியிருந்தது. கல்யாண மாலை இன்னும் வீட்டில் தொங்கு கிறது. அதன் நார்களின் ஈரநிறம் இன்னும் மாறவில்லை. மயிரிழையாக பின்னப்பட்டிருந்த ஜரிகையின் பளபளப்பு இன்னும் புத்தம் புதுசாகவே மங்காமலிருந்தது.

பால்ச்சாமி கட்சிக்குள் வந்து ஒரு வருஷம் ஆகிறது. வாலிபர் சங்கத்தில்தான் சேர்ந்தான், முதலில். அப்புறம்தான் கட்சி.

வாலிபர் சங்கத்தில் சேர்கிறபோது கூட... முழுசாக விவரம் அறிந்தோ அதன் கொள்கையால் ஈர்க்கப்பட்டோ சேரவில்லை. ஒரு விளையாட்டுப் போல் ஒரு பிரமிப்பில் - சேர்ந்தான்.

பால்ச்சாமிக்கென்று ஒரு சுபாவம். ஏகமான துறுதுறுப்பு. எதில் கால் வைத்தாலும் அதில் முழுசாக முங்கிக் கரைகிற தீவிரம். வாலிபச் சுறுசுறுப்பு. துடிப்பு. பாம்பையும் தாண்டுகிற துணிச்சலான துடிப்பு.

எதிலுமே அவன் அப்படித்தான். அவசரத் தீவிரம்.

ரொம்ப நாள் நீச்சல் தெரியாமலிருந்தான். கிணற்றுக்குள் இறங்கிக் குளிக்கவே மாட்டான். மோட்டால் ஓடினால் தலையை கொடுப்பான். இல்லையென்றால் வீடு வந்து விடுவான். கிணற்றில் தண்ணீர் மூலைப்படி வரை 'கெத்து கெத்'தென்று கிடக்கும். தேங்காய்ப்பாலென தித்திப்பு. பச்சைப் பசேலென்று மின்னித் தளும்புகிற தண்ணீர்.

இவனை விட வயசில் சின்னப் பயல்களெல்லாம் குதித்து விளையாடுவார்கள். பம்ப் ஷெட் ரூமின் உச்சியில் ஏறி நின்று கூட குதிப்பார்கள். காடே அதிர்கிற மாதிரியான சத்த அதிர்வு. கிணறே ஆடிக் குலுங்குகிற மாதிரி தள்ளாடும். மேலேறித் தெறிக்கும் நீர்த் திவலைகள் சூரிய ஒளிபட்டு, வெள்ளித் துண்டுகளாக மின்னும்.

இவன் ஏக்கமாய்ப் பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருப்பான். 'நமக்கு நீச்சல் தெரியவில்லையே' என்று உள்ளுக்குள் வெம்பிக் குமைந்து போவான். பயல்கள் காட்டுக் கூச்சல் போடுவார்கள். கும்மாளமும் குதூகலமுமாய் விளையாட்டு வெறிக் கூச்சல். குறுகலான கிணற்றுக்குள்ளேயே 'தொட்டுப் பிடித்து' விளையாடு வார்கள். கண்ணாமூச்சி விளையாடுவார்கள்.

பால்ச்சாமி, சுண்டக் காய்ச்சிய பாலாக உள்ளுக்குள்ளே குமைந்து குமைந்து அடங்குவான்.

கிணற்று விளிம்பில் தவளைபோல உட்கார்ந்து வேடிக்கை பார்ப்பது, வெட்கமாகவும் கூட இருக்கும்.

நீச்சல் பழக வேண்டுமென்று ஆசைப்பட்டான். 'முடியுமா, நடக்குமா, சாத்தியப்படுமா' என்ற சந்தேகமோ, சஞ்சலமோ எட்டிக்கூடப் பார்க்கவில்லை. உள்ளிருந்து நின்ற நிலையில் நீந்திக் கொண்டே ஒருவன் அண்ணாந்து பார்த்தான்.

''டேய்... பாலு! நீ நீச்சல் பழகுறீயாடா?''

''ம்.''

''குதிக்குறீயா?''

''ம்.''

''பயமாயில்லியா? தண்ணியைக் குடிச்சு, முங்கிட்டீன்னா... மஞ்சத்தவக்கா (சாவு) பிடிச்சிருவே. பாத்துக்கடா...''

''பரவாலே...''

''அப்பக் குதி...''

சட்டையின் பட்டன்களை விடுவித்தான். உரித்து கீழே போட்டு விட்டு எழுந்து நின்றான்.

''குதிக்கட்டா?'' என்று துடித்தான்.

''சித்தே பொறு...'' என்றவன், தன்னைச் சுற்றிலும் நீருக்குள் அலைந்து கொண்டிருந்த பையன்களை ஒதுங்கச் சொல்லி... களத்தை சுத்தப்படுத்தி விட்டு,

''ம்... இப்பக் குதி'' என்றான்.

நடுக்கமோ... பயமோ... தயக்கமோ கூட இல்லாமல் குதித்தான். நீருக்குள் அமிழ்ந்தான். தன்னைச் சுற்றிலும் பச்சைக் கண்ணாடியாய் நீரின் இயக்கம். லட்சக்கணக்கில் மரகத மணிகளாக துளிகளின் பாய்ச்சல். இவனுக்குள் பதற்றமில்லாத பிரமிப்பு.

தன் போக்கில் கால்கள் நீரை உதைக்க, வலையில் சிக்கிய பறவையின் றெக்கையடிப்பாக கைகள் 'தடபுட'வென்று தாறுமாறாக அடிக்க...

நீரின் மேல் தளம் வந்து சேர்ந்தான், பால்ச்சாமி. அவனை 'கப்'பென்று பிடித்துக் கொண்ட சிநேகிதன்... நீச்சலைப் பற்றி மெல்லச் சொன்னான்.

'கையும், காலும் தானாக தண்ணீரைப் பின்னோக்கித் தள்ளினால்... போதும்' என்பதை விளக்கினான்.

அன்றைக்கு -

சாயங்காலம் வரைக்கும் தொடர்ந்த நீச்சல் பயிற்சி. கண்ணெல்லாம் சிவந்திருந்தது, ரத்தமாக. காதுகளுக்குள் 'ங்ஙீங்'கிற இரைச்சல்.

மறுநாள் -

பால்ச்சாமி முழுசாகத் தேறி விட்டான். அவனும் பம்ப்செட் ரூமின் உச்சியிலிருந்து குதித்தான், பல்டியடித்துக் கொண்டே குதித்தான். தலை கீழாக, அம்பாகக் குதித்தான்.

முங்கு நீச்சலில் மீனை விட லாகவமாய் விரைவின் வீச்சாய்...

கூட இருந்த பையன்களெல்லாம் பிரமித்தனர்.

''ஒரே நாள்லே... இம்புட்டுத் தேர்ச்சியா?''

''ஆர்வந்தான்... முயற்சிதான்...''

''அதெல்லாத்தையும் விட... ஓங்கிட்டேயிருக்கிற தீவிரம்தான் இந்த வேகத்துக்குக் காரணம்...''

அதுதான் பால்ச்சாமி. பால்ச்சாமியின் சுபாவம். இந்தச் சுபாவம்தான், இவனைப் பல சிரமங்களுக்குள் தள்ளவும் செய்தது.

2

வாலிபர் சங்கத்தில் சேர்வதற்கு முன்பு, பால்ச்சாமி தீவிரமான கமல் ரசிகன். ஒரு டூரிங் தியேட்டரில் அவன் முதன் முதலாகப் பார்த்த கமல் படம், 'சலங்கை ஒலி'. திருவேங்கடத்தில் ஒற்றையாளாக நின்றான். சைக்கிளும் இல்லை. ஊர் போக வழியுமில்லை. ஊர் - மூன்று மைல் எப்படி போக? 'சினிமா தியேட்டருக்கு நம்ம ஊர் ஆட்கள் யாரும் வந்திருக்கக் கூடும்' என்ற நினைப்பில் வந்தான். ஆள் துணைக்காகத்தான் தியேட்டருக்கு வந்தான்.

வந்து பார்த்தால் தியேட்டர் காற்றாடியது. கூட்டமே யில்லை. சும்மா பத்துப் பதினைந்து பேர்கள்தான், அழுக்கான

குண்டு பல்ப் வெளிச்சத்தில் உலவினர். இத்தனைக்கும் படம் நேற்றுதான் போட்டிருக்கிறார்கள்.

ரெண்டாம் நாளிலேயே, கூட்டம் இல்லாமற் போய் விட்டது. 'அப்படீன்னா... படம் படு குப்பையாயிருக்குமோ?'

இருந்த ஆட்களில் யாரும் இவன் ஊரைச் சேர்ந்தவர் களில்லை. 'அடச்சே' என்றாகி விட்டது.

கற்றையாக வந்து தாக்கிய ஏமாற்றம். அத்துடன் ஒரு குப்பைப் படத்துக்கு வந்து சிக்கிக் கொண்டோமே என்கிற எரிச்சல் வேறு.

முள் மேலே உட்கார்ந்திருப்பது போல, கூட்டி வைத்திருந்த மணலில் உட்கார்ந்திருந்தான். குண்டு பல்பும் கண்ணை மூட... அறுந்து அறுந்து ஓடிய நியூஸ் ரீல். மந்திரிகள் வருகைகள். அடிக்கல் நாட்டு விழாக்கள். தையல் மிஷின் வாங்கும் அபலைகள். பட்டா வாங்கும் வேட்டிகள்.

படம் துவங்கியது. எரிச்சல் போன இடம் தெரிய வில்லை. 'சலங்கை ஒலி'யின் ஆரம்பமே களை கட்டியது. தண்ணியடித்து விட்டு வயோதிக முதுமையோடு தடுமாறிய கமல். நடன நிகழ்ச்சி பற்றிய பத்திரிகை விமர்சனம். சொன்ன குறை தாளாமல் கொதித்துப் போய் வந்த நாட்டியப் பெண்ணிடம் தொண்டை செருமச் செருமப் பேசிய கமல். சீண்டப்பட்ட ஆவேத்தால் பாட்டு வரிகளுக்குரிய பாவனை களை ஆடிக் காட்டிய ஆவேசம். நிஜமான நடனக் கலைஞனின் ஆத்ம துடிப்பாக இருந்த அந்த நடனத்தின் அசலான உயிர்ச்சுடர்.

படம் முடிந்தபோது... இவன் படத்திலிருந்து மீள முடிய வில்லை. ஊர் திரும்ப மனமுமில்லை. வழியுமில்லை. 'இரண்டாவது ஷோ'விற்கும் உள்ளே போனான்.

மனசுக்குள் கொஞ்சுகிற சலங்கையொலிகள்.

கொட்டும் மழை. வட்டக் கிணற்றின் விளம்பில் நின்று நடனமாடிய முதிய கமல். போதையின் தள்ளாட்டத்திலும் பாவனையோ முத்திரையோ பிசகாத நடன நளினம். குறுக்கில் கிடக்கும் கம்பியிலும் நடனம். நடனம் மட்டுமில்லை. நடிப்பும் மனசைப் பின்னியது.

பால்ச்சாமிக்குள் பிரமிப்பு. 'கமல்... சராரி நடிகனல்ல. அதையும் தாண்டியவர்' என்ற பிரமிப்பு.

கமல் - ரசிகனாகவே மாறி விட்டான். 'கமல், கமல், கமல்' தான். மூச்சு முழுக்க கமல்தான். அவனுக்கேயுரிய தீவிரத்தில் - வேகத்தில் - ஆர்வப் பரபரப்பில் கமல் ரசிகனானான்.

ரசனையோடு பார்க்கத் துவங்கிய பிறகுதான்... கமலின் அருமையே தெரிந்தது. நடிப்புக்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டிருக்கிற சிறப்பையும், நடிப்புக்காக நடப்பிலிருந்த இமேஜ்களை உடைத்து வந்த துணிச்சலையும் உணர்ந்தான்.

அப்புறமென்ன...

கமல் நின்றால் அழகுதான். நிமிர்ந்தால் வீரம்தான். திரும்பினால் ஸ்டைல்தான். நடந்தால் நடனம்தான். ஒவ்வோர் அணுவிலும் அசைவிலும் மயங்கினான். 'உடல் மண்ணுக்கு, உயில் கமலுக்கு' என்றாகி விட்டது.

எப்பப் பார்த்தாலும் கமலைப் பற்றித்தான் பேச்சு. டீக்கடைகளில் - மடத்தில் - நண்பர்கள் கூடுமிடமெல்லாம்... கமல் உச்சாடனம்தான். கமலுக்கான வாதாட்டம்தான். பால்ச்சாமி வாதாடினால்... தீப்பொறி பறக்கும். தேடாமல் வார்த்தைகளை அள்ளி வீசுவான். வார்த்தைகள் மட்டுமா? புள்ளி விவரமும்தான்.

கமல் நடித்த படம் எத்தனை? எந்தெந்தப் படம் எந்தெந்த நாளில் வெளியாறிற்று? எந்தெந்த நகரில் என்னென்ன தியேட்டர்? தியேட்டர்களின் அமைப்பு.... ஓடிய நாட்கள்... காட்சிகள்... வசூலான தொகை:.. பைசா உட்பட!

இன்னும் ஏராளமான கேள்விகளுக்கு நாக்கு நுனியில் துல்லியமாக விவரங்கள் வைத்திருந்து, வீசியெறிவான். ஊரில் பால்ச்சாமிக்கு ஒரு பட்டமே கிடைத்து விட்டது. 'கமல் கிறுக்கன்'.

அவன் தீவிரத்துக்குக் கிடைத்த கிரீடம்.

ஆனால், பால்ச்சாமிக்கு 'கட்டவுட்டு'க்கு பூஜை பண்ணுவது... சூடம் கொளுத்துவது... பிற நடிகரின் ரசிகர்களுடன் வெட்டு, குத்து நடத்துவது... மூடத்தனமாய் கிறுக்குப் பிடித்துப் போய் கமல் பஜனை செய்வதெல்லாம் உள்ளூரப் பிடிக்காது. மனசுக்குள் வெறுத்தான்.

அவ்வப்போது, கமல் விடுகிற அறிக்கைகள் விழாக்களில் ரசிகப் பண்பு குறித்து பேசுவது - 'கண் மூடி ரசனைக் கூடாது' என்று கூறுவது - ரசிகர்களின் குடும்பக் கடமையையும், சமுதாயக் கடமையையும் வலியுறுத்துவது... இதெல்லாம், அவனது ஆத்ம பிரதிபலிப்பாகவே இருக்கும். அவன் உள்மனத் துடிப்பாகவே ஒத்துப் போகும்.

அப்படித்தான்...

'கமல் ரசிகர் நற்பணி மன்றம்' சமுதாயக் கடமையாக ரத்ததானம் வழங்கலாம் என்று முடிவு செய்தது. மும்முரமாக அந்தப் பணியில் தீவிரமானான்.

அந்தச் சமயத்தில்தான்... வாலிபர் சங்கச் செயலாளர் ராஜேந்திரன் வந்து, பால்ச்சாமியைப் பார்த்தான்.

ராஜேந்திரனைப் பற்றி பால்ச்சாமிக்கு நன்கு தெரியும். கட்கத்தில் டைரியை இடுக்கிக் கொண்டு திரிவான். டைரியும் வெறும் டைரியாக இருக்காது. கர்ப்பஸ்திரீ மாதிரி புடைத்துக் கொண்டு இருக்கும். ஊரில் அகப்பட்ட எல்லா பிரச்னைகள் குறித்தும் விண்ணப்பக் காகிதங்கள்... கார்டுகள்... கணக்கு விவரங்கள்... வாலிபர் சங்கப் பதிவு போன்ற விவரப் பேப்பர்கள் என்று கத்தை கத்தையாக காகிதங்கள், டைரிக்குள் கர்ப்பமாய் இருக்கும்.

ராஜேந்திரன் இளமையான ஆள்தான். அலைச்சலில் - ஒட்டபாட்டத்தில் - சளைக்காத இளமை இருக்கும். ஆனால் இளைஞனுக்குரிய பாமரத்தனம் இருக்காது. துள்ளல் இருக்காது. வெள்ளந்தித்தனம் இருக்காது.

ஒரு முதிய மனிதருக்குரிய கனிந்த பேச்சு. காரியார்த்தமான அணுகுமுறை. ஆழ்ந்தமைந்த நிதானத்துடன் கூடிய பழக்க வழக்கம். சாமர்த்தியமான நடைமுறை.

தீவிரம் இருக்காது. பரபரப்பு இருக்காது. இளமைக்குரிய வெடிப்பும் துடிப்புமான வேகம் இருக்காது.

ஆர்ப்பாட்ட ஊர்வலங்களுக்கு தலைமை தாங்கிச் செல்வான். தர்ணா போராட்டங்களில் வாழ்த்திப் பேசிக் கொண்டிருப்பான். மத்திய, மாநில அரசுகளை வார்த்தையால் கொத்திக் குதறுவான்.

போலீஸ் ஸ்டேஷனில் அதிகாரிகளுடன் காரசாரமாய் சண்டை போடுவான். தாலுகாபீஸில் பெரும் பெரும் பஞ்சாயத்துகளை நடத்துவான். கலெக்டர் கூட்டுகிற கூட்டங் களில் பிரமுகர்களுக்கு இணையாக உட்கார்ந்திருப்பான்.

ஆங்... அதுதான் விஷயம். இளைஞனுக்குரிய சுறுசுறுப் பில் செயல்பட்டாலும்... செயல்களில் பிரமுகருக்குரிய முதிர்ச்சி இருக்கும். அதுதான் பால்ச்சாமிக்கு நெருடும்.

'இதென்ன... இந்த ஆளு இம்புட்டு வறட்சியா யிருக்காரு...' என்று தோன்றும். நெருங்க விடாத நெருடல். அந்நியமாக நினைக்க வைக்கிற பிரமுகர்த்தனம்.

இளைஞன் என்றால், வாலிபச் சேட்டைகள் செய்ய வேண்டும். காதல் குறும்புகளில் காலை நுழைக்க வேண்டும். அர்த்தமற்ற கேலி, கிண்டல்களில் ஈடுபட்டு 'கெக்கே, பிக்கே' என்று சிரிக்க வேண்டும்.

பெரிய மனிதர்கள் சற்றே இளக்காரமான அருவருப்போடு பார்க்கிறமாதிரி... கூச்சநாச்சமற்ற துள்ளலில் திரிய வேண்டும்.

இம்மாதிரியான 'இளமைப் பண்புகள்' எதுவுமில்லாமல், பிரமுகர்த்தனமாக அலைகிற ராஜேந்திரனைத் தான்... 'வறட்சியான ஆள்' என்று மதிப்பிட்டிருந்தான். ஒரு சினிமா கிடையாது. கமல் - ரஜினி தெரியாது. கலை புரியாது. கலை இலக்கிய உணர்ச்சியே புரியாது. 'இவரெல்லாம்.. மனித ஜென்மமோ' என்றே நினைத்தான்.

அப்படிப்பட்ட ராஜேந்திரன் எதற்காக இவனைத் தேடி வர வேண்டும்? என்ன அவசியம்? அதுவும் 'நடிகனுக்கு ரசிகனாக' இருப்பதையே இழிவாக நினைத்து, ஏளனமாய் கடைக்கண்ணால் பார்க்கிற இவர் எதுக்கு தேடி வரணும்? என்ன காரணம்? 'உடல் மண்ணுக்கு, உயிர் கமலுக்கு என்றால்... பெத்து வளர்த்த தாய் தகப்பனுக்கு இந்த இளைஞர்கள் என்னத்தை மிச்சமாய் வைத்திருந்து தரப் போகிறார்கள்' என்று மேடைகளில் எச்சில் துளி தெறிக்கப் பேசுகிற இவர் எதுக்கு வரணும்? என்னத்துக்காக?

இவனுக்குள் ஏகப்பட்ட குழப்பம். நெருடலான நினைவு கள். ராஜேந்திரன் நெருங்கி வந்து புன்னகை செய்தான்.

''என்னங்க... டீ சாப்புடுவமா?'' என்று பால்ச்சாமி உபசரித்தான்.

''ஓ... சாப்புடலாமே...''

டீக்கடை நோக்கி இருவரும் நடந்தனர்.

''என்ன விஷயமா என்னைப் பார்க்கணும்?''

''ஒரு பொது ஜோலியாத்தான்.''

''ம்... அப்படியா? யேய்... ரெண்டு டீ போடப்பா. நல்ல ஸ்ட்ராங்காப் போடு... தூள் மாத்தி.''

''கமல் நற்பணி மன்றம் சார்பா... ரத்ததானம் வழங்குறதுன்னு முடிவு பண்ணியிருக்கீங்களாமே...?''

''ஆமா...''

''என்ன 'டேட்'லே?''

''டேட் இன்னும் முடிவாகலே?''

'' 'டைஃபி' சார்பாகவும் ரத்ததானம் வழங்குறதுன்னு முடிவு பண்ணியிருக்கோம்.''

'' 'டைஃபி'ன்னா?''

''டெமாக்ரடிக் யூத் பெடரேஷன் ஆஃப் இந்தியா. அதாவது இந்திய ஜனநாயக வாலிபர் சங்கம்.''

''ஓகோ...''

''அதுக்கு நா செயலாளர்.''

''தெரியும்...''

''இப்ப நா வந்தது எதுக்குன்னா... கமல் மன்றமும் டைஃபியும் இணைஞ்சு... ஒரு மூவ்மெண்டாக நடத்தி ரத்ததானம் தரலாமேன்னு யோசிச்சோம்...''

''மூவ்மெண்ட்னா...?''

''நம்ம மெம்பர்ஸ் மட்டும் குடுக்குறது ஒருவகை. நோட்டீஸ், வால் போஸ்டர் போட்டு... நம்ம மெம்பர் அல்லாத வாலிபர்களையும், ஜனங்களையும் திரட்டி... நம்ம தலைமையிலே ரத்ததானம் குடுக்க வைக்குறது. அதுதான் மூவ்மெண்ட். இயக்கம்.''

''செய்யலாமே... இது நல்ல ஐடியாவா இருக்கே...''

அப்படித்தான்... கூட்டு இயக்கமாக நடத்தி ரத்ததானம் வழங்க முடிவு செய்தனர். 'மளமள'வென்று பணிகள் நடந்தன. 'தேவர்மகன்' மீசையுடன் கூடிய கமல் போட்டோவுடன் வால் போஸ்டர்கள். ரத்ததானம் வழங்க வருமாறு அறைகூவல். கீழே... 'இவண் - இந்திய ஜனநாயக வாலிபர் சங்கம், கமல்ஹாசன் நற்பணி மன்றம்' என்ற இரு அமைப்புகளின் பெயர்கள்.

'ஜே ஜே' என்று நடந்தது, ரத்ததானம். இவன் வழங்கினான். ரத்தத்தை தானம் செய்த பால்ச்சாமியின் ரத்தத்திற்குள் ராஜேந்திரன் அணுக்களாக பரவிப் படர்ந்தது... தனிக்கதை.

அன்றைய சந்திப்பிலும், நட்பார்ந்த நெருக்கமான மனப் பகிர்விலும் பால்ச்சாமியின் மனசுக்குள், நிறைய மாற்றங் களுக்கான விதைகள் விழுந்தன.

3

கமல் ரசிகர்களும் வாலிபர் சங்கத் தோழர்களும் மிகுந்த தோழமையுடன் இயங்கினர். அன்றைக்குத்தான் ரத்ததானம். பஸ்களில் வந்து கொண்டிருந்தார்கள் இளைஞர்கள், குழு குழுவாக.

இங்கும் பெரிய க்யூ. நீண்ட வரிசை. முதல் ஆட்களாக ராஜேந்திரனும் பால்ச்சாமியும் ரத்ததானம் வழங்கினர்.

வெளியே வந்தனர். வரிசையில் நின்ற எல்லா இளைஞர் களிடமும் புன்னகையும், பேச்சுமாக உற்சாகப்படுத்தி விட்டு, ஒரு வெத்தலை பாக்குக் கடைப் பக்கமாக வந்தனர். சிவப்பு பார்டர் போட்ட வெள்ளைப் பாலியஸ்டர் வேட்டியும், வெள்ளைச் சட்டையுமாக ராஜேந்திரன் ஜொலித்தான். கொத்து மீசை.

'ரெண்டு டொரினோ குடுங்க'' என்றான் ராஜேந்திரன்.

ரெண்டு பேரும் குடித்தார்கள். கடையின் நிழலில் கிடந்த பெஞ்சில் உட்கார்ந்தனர். ராஜேந்திரனின் பார்வை, இளைஞர்கள் மேல். ரத்ததானம் வழங்கக் காத்திருக்கும் இளைஞர்களின் உற்சாகத்தையே கவனித்தான்.

பால்ச்சாமி, ராஜேந்திரனையே பார்த்தான். மனசுக்குள் முண்டிக் கொண்டிருக்கிற நினைவுகள். நாக்கு வரை வந்து விட்டு, நின்று கொள்கிற கேள்விகள். தயக்கமும் தடுமாற்றமுமாய்... பால்ச்சாமி.

''என்ன பாலு... என்னமோ கேக்கணும்னு நெனைக்குறீங்க. என்ன விஷயம்? சும்மா கேளுங்க.''

பால்ச்சாமி, ''ஒண்ணுமில்லே!'' என்று மென்று விழுங்கினான். திடீர் தைரியத்தில் கேள்வி, குபீரென்று பாய்ந்தது.

''நீங்க சினிமா பார்ப்பீங்களா?''

அவன் தயங்கிய நீட்சியையும் கேள்வி கேட்ட குபீர்த் தன்மையையும் பார்த்து... அவன் முகம் நோக்கிச் சிரித்தான். ''இதைக் கேட்கவா பாலு, இம்புட்டுத் தயக்கம்?'' என்ற ராஜேந்திரன், பதிலையே ஒரு கேள்வியாகச் சொன்னான்: ''ஏன்... சினிமா பாக்குறது கிரிமினல் குற்றமா, சமூக விரோத காரியமா?''

''இல்லே... உங்களுக்கு டயம் கெடைக்காதே...''

''ஏன்? நானும் சாப்புடுறேன். கல்யாணம் செய்திருக்கேன். குடும்பம் நடத்துறேன். வாழ்க்கையை ஒரு பிழைப்பாகச் சிறுமைப்படுத்தாம... வாழ்க்கையை வாழ்க்கையாகவே வாழ நெனைக்கிறேன். வாழறேன். இதெல்லாம் நடக்குறப்ப, சினிமா பார்க்கவா டயமில்லாமப் போயிரும்?''

அடுத்த கேள்வியை கேட்க விடாமல் உள்ளுக்குள் ஒரு கேள்வி தடுத்தது. ராஜேந்திரனின் பேச்சு, இயல்பாக வந்தது. வார்த்தைக்காகத் தேடிக் காத்திருக்காமல்... சுவாசத்தின் சுபாவமாய்... தானியப் பெட்டியைக் கவிழ்த்தவுடன் சரியும் தானியத்தைப் போல... மனசின் உண்மையாக...

அதிலும் ஒரு வாக்கியம், இவனுள் ஒரு முடிச்சாக இறுக்கியது. 'வாழ்க்கையை ஒரு பிழைப்பாகச் சிறுமைப் படுத்தாம... வாழ்க்கையை வாழ்க்கையாகவே வாழ நெனைக்குறேன்.'

அப்படீன்னா... வாழ்க்கை வேறு, பிழைப்பு வேறா? பிழைப்பு என்றால் சிறுமையா? எது பிழைப்பு? எது வாழ்க்கை? இரண்டுக்கும் என்ன வித்தியாசம்?

இந்த ஒரு வாக்கியமே அவன் மனக் குளத்தில் ஒரு கல்லாக விழ... வட்ட வட்டமாய் எழுகிற எண்ணற்ற எண்ண அலைகள்.

''ஹ்ம்?'' என்ற கேள்விக்குறியோடு, கேள்வியை எதிர்பார்த்த சப்த தீண்டலில் விழித்தான், பால்ச்சாமி.

ஒரு சின்ன பிரமிப்போடு ராஜேந்திரன் முகத்தை ஏறிட்டுப் பார்த்தான். அவன் பார்வையில், இயல்பான மரியாதை உணர்ச்சி.

''நாங்க கமல் ரசிகங்க. நீங்க கமல் படம் பார்த்துருக் கீங்களா? கமலைப் பத்தியும், கமல் ரசிகர்களைப் பத்தியும் நீங்க என்ன நெனைக்கறீங்க?''

''மொதல்ல... பாலு, நாம இயல்பாப் பேசுவோம். நீங்க ஏதோ என்னைப் பேட்டி காண்ற மாதிரி கேள்வி கேட்க, நா ஏதோ தேவலோகப் பிரமுகர் மாதிரி பதில் சொல்ல... இந்த செயற்கைத்தன்மை வேண்டாம். நீங்களும் நானும் ஒரே ஊர்க்காரங்க, ப்ரெண்ட்ஸ்ங்கிற லெவல்லேயே பேசுவோமே...''

''ம்... அதுவும் சரிதான்!''

''சரி... நீங்க கேட்ட கேள்விக்கு இப்ப நா வாரேன். சினிமா பாக்குற பழக்கம் உள்ளவன் நா. கமல் சினிமாவும் பாத்துருக்கேன். பாக்குறேன். நல்ல சினிமாவை ரசிக்குற - உருவாக்குற - சமூகப் பொறுப்போட ரசிகர்கள் இருக்கணும்னு நெனைக்குறேன். கமல் ரசிகர்களைப் பத்தி நா என்ன நெனைக்குறேன்னு கேட்டீகளே... பதில் சொல்றேன். 'சகலகலா வல்லவன்' கமல் ரசிகர் மன்றத் தலைவனாக இருந்தவன் நா...''

''நீங்களா...? கமல் ரசிகர் மன்றத் தலைவராகவா?''

''ம்... என்னோட சின்னஞ்சிறு கடந்த காலத்துலே அதுவும் ஒரு நெஜம்.''

பால்ச்சாமியின் நெஞ்சுக்குள் ஐஸ்கட்டி விழுந்த மாதிரியிருந்தது. சட்டென்று தீயாகப் பற்றிக் கொண்ட மகிழ்ச்சிப் பரவசம். வியப்பும் ஆனந்தப் படபடப்புமாக... முகமெல்லாம் மலர்ந்து விரிந்தது. ''நெஜமாவா?'' என்று அடக்கிக் கொள்ளவே முடியாத ஆர்வக் கிளர்ச்சியோடு பிரமித்தான், பால்ச்சாமி.

''ம்'' என்று தலையசைத்த ராஜேந்திரன் உதடுகளில் பூத்தது ஒரு புன்னகை. பெருந்தன்மைப் பேரழகோடு சிரித்த புன்னகை.

''நெஜந்தான்'' என்றான். பால்ச்சாமியின் முகத்தில் பளிச்சிட்ட ஒளிச் சிரிப்பு. வியப்பில் விரிந்த உதடுகளும் கண்களும் அப்படியே உறைந்து போனதைப் போல் நிலைத்து ஒளிர்ந்தன. இதையெல்லாம் பார்த்து, உள்ளுக்குள் ததும்பினான் ராஜேந்திரன்.

'கமல் ரசிகனாக இருந்தவன்' என்ற நிஜம், பால்ச்சாமிக்குள் வெப்பத்தைச் செலுத்தியது. அவன் முழுக்க இனித்தான். இனிமைப் பரவசத்தில் பொங்கி நுரை வழிந்தான்.

ராஜேந்திரனுக்கும் தனக்குமாய் இடையில் இருந்த மரியாதையான தூரத்தை, பொங்கி வழிந்த நேசம், முழுக்க அழித்து விட்டதை மனசுக்குள் உணர்ந்தான், பால்ச்சாமி. அவன் கையைப் பிடித்துக் குலுக்குகிற ஆர்வத்தைக் கட்டுப்படுத்திக் கொள்ளவே முடியவில்லை, அவனால்.

ராஜேந்திரனை பால்ச்சாமியின் பரவசத் தத்தளிப்பு மீண்டும் தீண்டியது. சீண்டியது. தன்னை வெளிப்படுத்தும் படி தூண்டியது.

''கமல் ரசிகர் மன்றத் தலைவனா இருந்ததுதா... கடந்த காலம். கமலை இப்பவும் நேசிக்கிற கலை நேசனாகத்தான் இருக்குறேன். நிகழ் காலத்துலேயும் கமலை நா ரொம்ப மதிக்கிறேன்...''

''எப்படி, எப்படி?''

''இப்ப இருக்குற சினிமா நடிகர்களிலேயே கமல் ஒருத்தர்தான் சினிமாவைத் தொழிலா கருதாம, கலையா கருதுறாரு. தொழிலா அதை மதித்து ஈடுபாட்டோட நடிக்குற

நடிகர்கள் இப்பவும் இருக்காக. கமல் ஒருத்தர்தான் கலையா நெனைக்குறாரு. அது மட்டுமில்லே...''

''ம்... சொல்லுங்க...''

பால்ச்சாமிக்குள் பால் வார்த்த மாதிரியிருந்தது. பரவசத் ததும்பல்.

''தமிழ் சினிமாவை கமல் அசல் தன்மையோட நேசிக்கிறாரு. ஆத்மார்த்தமா நேசிக்கிறாரு. தமிழ் சினிமாவோட தரத்தை சர்வ தேச லெவலுக்கு ஒசத்தணும்னு ஆசைப்படுறாரு. 'ஆர்ட் பிலிம் தரத்துலேயே தமிழ் ஜனங்க ரசிக்கிற மாதிரி படம் பண்ணணும்'னு ஆசைப்படுறாரு. அது வெறும் ஆசை மட்டுமில்லே. லட்சியம். நோக்கம். குறியீடு. அதனாலதா அதுக்காக உழைக்கறாரு. சினிமாவோட சகல பிரிவுகளிலும் தன்னோட தெறமைகளை வளர்த்துக்குறாரு. கத்துக்கிடுறாரு...''

''ரைட்... ரைட்... நீங்க சொல்றது முழுக்க கரெக்ட்.''

''சகலகலா வல்லவன், சிங்கார வேலன் மாதிரியான கமர்ஷியல் குப்பைகள்லே நடிக்குறாரு. பணத்தையும் பார்க்குறாரு. ஆனா, அவரு சொந்தமா தயாரிச்ச படங்கள் பூராவும் தமிழ் சினிமாவைத் தாண்டி, பத்து வருஷத்துக்கு அப்பாலே நின்னுச்சு. அந்தக் காலத்துலே 'உணர்ச்சிகள்', இந்தக் காலத்துலே 'மகாநதி' எல்லாமே தமிழ் சினிமா லெவலை, பத்து வருஷத்துக்கு கடந்து நின்னுச்சு... தமிழ்ச் சினிமாவுக்கு கமல், புதுப்புதுக் குறிக்கோளை உருவாக்கி வைக்கிறாரு. இது எவ்வளவு பெரிய விஷயம்?''

பேசப் பேச... பரவசமானான், பால்ச்சாமி. அவனுக்குள் அரூபமாய் அலைந்த உணர்வுகளுக்கெல்லாம்... வடிவமும் வார்த்தைகளும் தந்து வெளிப்படுத்திய மாதிரியே இருந்தது.

பிரமிப்பாக இருந்தது.

உலர்ந்து போனவரைப் போல தோற்றமளித்த ராஜேந்திரனக்குள், இத்தனை நுட்பமான கலைப் பார்வையா? இத்தனை வளமான விவரங்களா?

வறட்சியானவரில்லை, இந்த ஆள். ஆழ்ந்து அடங்கி உறைந்து போன வண்டல் இவர். வளமும் அழகும் உள்ளடக்கிய வண்டல்.

நிழல் குறைந்து, பால்ச்சாமி உட்கார்ந்த இடம் வெயிலாகி விட்டது. வெயிலை வெயிலின் வெக்கையை உணரவேயில்லை அவன்.

ஆச்சர்யத்தில் தத்தளித்தான். ராஜேந்திரனுக்கு ரசிகனாகவே ஆகி விட்டான்.

ராஜேந்திரனைப் பற்றியேதான்... எந்நேரமும் பேச்சு. யாரிடமும், எதற்கு வாயைத் திறந்தாலும் ராஜேந்திரனைப் பற்றிய புகழ்ச்சிதான்.

மறுமாதம் -

அந்த ஊரில் வாலிபர் சங்கம் சார்பாக ஒரு பேரவை. க்யூபா என்ற வெளிநாடுகளுக்கெல்லாம் போய் வந்த மாநிலத் தலைவர் பேச வருகிறார்.

கேள்விப்பட்ட பால்ச்சாமி, பேரவையில் கலந்து கொள்ள ஆசைப்பட்டான். வெளிநாட்டுச் சுற்றுப் பயணங்களெல்லாம் செய்த பிரமாண்டமான அந்தத் தலைவரைக் கண்களால் பார்க்க வேண்டும். நெருங்கி நின்று காண வேண்டும். தொட்டுப் பார்க்க வேண்டும் என்றெல்லாம் ஆசைப்பட்டான்.

ராஜேந்திரனைத் தேடித் தேடியலைந்தான். பிடித்து விட்டான்.

''என்ன பாலு... எதுக்குத் தேடுனீக?''

''உங்க பேரவையிலே நா கலந்துக்கலாமா?''

''ஓ... கலந்துக்கலாமே...? ஆசைப்பட்டா வாங்க.''

''அந்தத் தலைவரோட என்னை அறிமுகம் செய்து வைப்பீகளா?''

''செய்யறேன்...''

அந்தப் பேரவையனுபவ அதிர்ச்சிதான், பால்ச்சாமியை ஒரு கம்யூனிஸ்டாக்கியது.

4

அவனைப் பிடிக்கவே முடியவில்லை. தரையில் கால் பாவாமல் மிதந்தான். பெரும் பட்டதாரியும், வெளிநாடு சுற்றுப் பயணம் செய்தவருமான தலைவரை நேரில் சந்தித்துப் பேசப் போகிறோம் என்ற நினைப்பே அவனுக்கு இறக்கை முளைத்த மாதிரியிருந்தது.

கனவுகளில் இறக்கையடித்துப் பறந்தான். ஒரு தேவ தூதனைத் தொட்டுணரப் போகிற பரபரப்பு.

பால்ச்சாமி ததும்பித் தத்தளித்த அந்த நாளும் வந்தது. ஒரு கல்யாண மண்டபத்தில் ஏற்பாடு. குழுக்குழுவாக இளந்தோழர்கள் வந்து குவிந்தனர். உற்சாகமான குசல விசாரிப்புகள். உரத்த சப்தங்கள்.

''தோழரே... என்ன கிளைப் பதிவு முடிஞ்சதா?''

''புக் கொடுத்துருக்கு. இன்னும் வரலை...''

''பேரவைக்கு வசூல் பண்ணுனீகளா?''

''ஆமா...''

''உங்களுக்கு எவ்வளவு கோட்டா?''

''கோட்டா ரொம்பப் பெரிசு. முடியாது. ஓயாம 'வசூல், வசூல்'னு போய் நின்னு, எங்க வருது?''

''முயற்சி பண்ணுனா முடியும்.''

''அதுக்கும் ஓர் அளவில்லே? வெதைச்சா... ஒரு தடவை அறுவடை பண்ணலாம்... வருஷம் பூராவும் ஓயாம அறுவடை பண்ண முடியுமா?''

''காம்ரேடுகள் நல்லா பேசப் படிச்சுக்கிட்டீக?''

நட்பும் தோழமையுமான புன்னகைகள். கல்மிஷமில்லாத வெள்ளை மனங்களின் வெடிச் சிரிப்புகளாக, முகங்களில் இயல்பான மலர்ச்சி. கேலி, கிண்டல்கள்... மனசை காயப்படுத்தாத கிண்டல்கள், உள் நோக்கமற்று மகிழ்ச்சியோடு வெளிப்பட்டு, மகிழ்ச்சிப்படுத்துகிற கேலிகள்...

கல்யாண மண்டபமே ஒரு கல்யாண வீட்டை விடவும் கலகலப்பாக இருந்தது. மன வெளிச்சமாகப் பிரகாசித்தது.

பால்ச்சாமிக்குப் புதிய அனுபவம். ரத்த தான நிகழ்வில் சந்தித்துப் பரிச்சயமான தோழர்கள், பால்ச்சாமியைப் பார்த்து புன்னகைத்தனர்.

''வாங்க... வாங்க'' என்று உபசரித்தனர். சிநேகித பாவத்துடன் கூடிய அந்த உபசரிப்பும் குசல விசாரிப்பும் இவனுள் உறுத்திய அந்நிய உணர்வைத் துடைத்து, ஒரு தோழமையான மனோபாவத்தை ஏற்படுத்தியது.

பேரவைக் கூட்டம் துவங்கியது. பால்ச்சாமி மனசு பூராவும் தலைவரையே நினைத்து ஏங்கியது.

'எப்படியிருப்பார், எப்படியிருப்பார்' என்று ஒவ்வோர் அணுவும் எண்ணித் துடித்தது.

பளபளப்பான பூட்ஸ்... பளிச்சென்ற ஷபாரி சூட்... கோட்... டை... பின்... சுற்றிலும் நறுமணத்தைச் சிந்துகிற வாசனைத் திரவியம்... ஒங்குதாங்கான தோற்றம்... ஏஸியிலும் க்ரீம் பூச்சிலுமே கனிந்து பளபளப்பான முகம்.

இப்படியான ஓர் இமேஜ் உள்ளுக்குள் இருந்தது. சட்டென்று ஒரு குட்டிப் பரபரப்பு. தலைவர் வந்து விட்டார் என்ற அடக்கமான சப்தக் கிசுகிசுப்பு.

பால்ச்சாமியின் கவனமும் முழுப் பார்வையும் வாசலில் நிலைத்தது. முதலில் ராஜேந்திரன் ஒரு சூட்கேஸுடன் வந்தான். பின்னால் அந்தத் தலைவர்.

எல்லாரும் அவருக்கும் 'விஷ்' பண்ணுகின்றனர்.

இவனது இமேஜ், இடிந்து நொறுங்கி, 'பொல பொல'வென்று உதிர்ந்தது.

சாதாரணமான பேண்ட்... ஒரு சிமெண்ட் கலர் சட்டை... பயணக் களைப்பில் கலைந்த தலைமுடி... கறுத்த முகம். குழிகுழியாக விழுந்திருந்த எண்ணற்ற அம்மைத் தழும்புகள். எப்போதாவது போடுகிற வெற்றிலைக்குச் சிவந்த கீழுதடு...

ரொம்பச் சராசரியான தோற்றம். ஆனால் முகத்தில் மட்டும் கபடமற்ற புன்னகை. சராசரியற்ற தேஜஸ். மனசுக்கும் முகத்துக்கும் இடையில் எந்தத் திரைகளுமில்லாமல்... மனசே முகத்தில் பூவாய் பூத்து ஒளிர்வதைப் போல ஒரு தேஜஸ்.

"தோழர்... இந்த ஃபிரண்டை நீங்க பாக்கணும்" என்றார், ராஜேந்திரன். கை, பக்கத்தில் தன் வசமிழந்து பரவச வடிவமாய் நின்ற பால்ச்சாமியைக் காட்டியது.

தலைவரின் பார்வை, பால்ச்சாமியின் மீது விசேஷ கவனத்துடன் நின்று நிலைத்தது. அன்பும் புன்னகையுமாக ஆத்மாவைத் தழுவியது.

''பிரதர்... யாரு?''

''கமல் நற்பணி மன்றத் தலைவர். பால்ச்சாமி. ரத்ததான கேம்பெயின்லே ரொம்ப ஒத்துழைப்பா நின்னவர்.''

''அப்படியா? சபாஷ். தோரணம் கட்டி பூஜை வைக்குறது மட்டும்தான் ரசிகர் மன்றத்தோட வேலை என்கிற இமேஜை ஒடைக்கிறதும், இளைஞர்களோட ரத்தமும் வீர்யமும் சமுதாய மேம்பாட்டுக்குப் பயன்படுறதும் ரொம்ப ரொம்ப ஆரோக்கியமான விஷயம். பால்ச்சாமி, ஒங்களுக்கு என்னோட வாழ்த்துகள்...'' என்று தலைவர் மனசின் அசல் வெளிப்பாடாகப் பேசினார். 'என்ன பேசுவது... எப்படி தேங்க்ஸ் சொல்வது' என்று கூட தோன்றாமல், பரவசக் குழப்பத்தில் தத்தளித்தான் பால்ச்சாமி.

அவனது கையைப் பற்றிக் குலுக்கி, இடது கையால் இவனது தோளில் வாஞ்சையோடு தட்டிக் கொடுத்தார்.

பால்ச்சாமி கனவுலகில் தூக்கியெறியப்பட்டவனாக அந்தரத்தில் உழன்றான். கையைப் பற்றியிருந்த அவர் கையில் குளிர்ச்சி. படாடோபமற்ற இயல்புத்தன்மை. அசலான அன்புணர்ச்சி.

''பால்ச்சாமி... நல்ல சினிமா, நல்ல நடிப்பு பற்றி யெல்லாம் யோசிக்கிற நீங்க, நல்ல வாழ்க்கை, நல்ல சமுதாய அமைப்பு, மனுஷங்க மனுஷத் தன்மையோட வாழ முடியுற சமூகச் சூழல் இதைப் பற்றியும் கனவு காணணும். யோசிக் கணும். லட்சியம் கொள்ளணும். அதுக்காக நம்ப வியர்வை யையும் ஆயுஸையும் அர்ப்பணிக்கணும். ஸோ... இன்னிக்கு உங்களைச் சந்திச்சதுலே சந்தோஷம்... ராஜேந்திரன், பேரவைக்குப் போவமா?''

''சரிங்க, தோழர்!'' என்று ராஜேந்திரன் முன் நடக்க, தலைவர் மறுபடியும் இவனது கைகுலுக்கி விட்டுப் போனார்.

கியூபா போன்ற வெளிநாடுகளெல்லாம் சுற்றியவர், சர்வதேச வாலிபர் மாநாடுகளுக்கெல்லாம் இந்தியப் பிரதிநிதியாகச் சென்றவர்... லட்சக்கணக்கான இளைஞர் களைக் கொண்ட அமைப்பின் மாநிலத் தலைவர்...

அடே... அப்பா! எத்தனை பெரிய மனிதர். இந்தச் சாதாரண பால்ச்சாமியைக் கூட தொட்டு - கை குலுக்கி - 'ப்ரதர், ப்ரதர்' என்று சகோதர வாஞ்சையோடு பேசி... அடடா! எத்தனை பெரிய விஷயம். அம்மை வடுக்கள் நிறைந்த அந்தக் கறுத்த - இனிய முகம், நெஞ்சில் கல்வெட்டாகப் பதிந்து விட்டது.

பால்ச்சாமி வாலிபர் சங்கத்தில் சேர்ந்து விட்டான். எதிலும் தீவிரமானவன் ஆயிற்றே! வாலிபர் சங்கத்திலும் புயலாகச் செயல்பட்டான்.

வாலிபர் சங்கத்தில் செயல்படுகிறபோது, பால்ச்சாமியின் உலகமே விரிவடைந்தது. மொத்த உலகத்தின் இயக்க சூட்சுமம் புரிந்தது.

அடிக்கடி நடக்கிற பேரவைகள். அதில் தலைவர்கள் செய்கிற ரிப்போர்ட்கள். அமெரிக்க ஏகாதிபத்தியம். உலக வங்கி... பன்னாட்டு ஏகபோகங்கள்... இராணுவ அரசுகள்... அதன் அத்து மீறலான அக்கிரமங்கள்... நமீபியா... தென் ஆப்பிரிக்கா... நெல்சன் மண்டேலா... க்யூபா... ருஷ்யா... என்று ஏகப்பட்ட தகவல்கள்... ஏகப்பட்ட படிப்பினைகள். மொத்த உலகத்தின் சகல அரசியல் நடவடிக்கைகள் பற்றி விவரங்கள்.

இவன் இரண்டு தடவை சென்னை போயிருக்கிறான், திருவள்ளுவர் பஸ்ஸில். ஏதோ வெளிநாடு போகிற குதூகல வியப்பில் தத்தளித்தான். உற்சாகப் பெருக்கு.

இப்போது இவனுள் அறிமுகமாகி விஸ்தரிக்கிற உலகப் பரப்பில்... சென்னை, உள்ளூர் போலத் தோன்றுகிறது.

சென்னை செல்கிறபோது, ஒரு விஷயம் இவனை ரொம்ப உறுத்தியது. சிவகாசியிலிருந்து சென்னை போவதற்குள் அந்த பகல் நேரப் பயணத்தில் மட்டும் 'ஒன்னுக்கிருக்க' ஆறு ரூபாய் செலவாயிற்று.

விழுப்புரத்தில் பஸ் நிற்கும். கண்டக்டரிடம் சொல்லி விட்டு கழிப்பிடம் தேடி ஓடுவான். உபத்திரவப் படபடப்பு. ஒருவர் வழிமறித்துக் கேட்பார்...

''துட்டு... துட்டு...''

''எம்புட்டு?''

''அம்பது பைசா...''

''அடப்பாவிகளா...'' என்று உள்ளுக்குள் கூவுவான். இப்படியே ஆறு ரூபாய் செலவு.

மனசு கிடந்து எரிந்தது. ''என்னடா இது, அநியாயமாயிருக்கு. ஒன்னுக்கிருக்கக் கூட கட்டணமா? ச்சேய்! இவங்களையெல்லாம் நடுத் தெருவுல நிப்பாட்டிச் சுடுற மாதிரி இராணுவ ஆட்சி வரணும். அப்பத்தான் நெலைமை சரிப்படும்'' என்று எரிச்சலில் யோசித்தான். இதெல்லாம்... முன்பு.

''ஒன்னுக்கு இருக்க சிவகாசி பஸ் நிலையத்தில் காசு கேட்பதே... உலக வங்கியின் உத்தரவுபடிதான்' என்று இப்போது புரிகிறபோது... வியப்பாக இருந்தது.

உலக வங்கியிடம் தமிழக அரசு சுகாதாரச் சேவைக்காகக் கடன் கோருகிறது. 'சுகாதார வியாபாரத்தில் எவ்வளவு லாபம் ஈட்டுவீர்கள்?' எனக் கேட்கிறது உலக வங்கி.

''இல்லை. கக்கூஸ் கட்டுவது கவர்மெண்ட் பொறுப்பு. இது சேவை. லாபம் வராது.''

''லாபம் வாரத துறைக்கு நாங்கள் கடன் தர இயலாது.''

''ஐயய்யோ... கடன் இல்லாமல் எங்களால் இயங்க முடியாது.''

''அப்படியானால் நாங்கள் லாபம் ஈட்டுகிற துறையாக சுகாதாரத் துறையை மாற்ற திட்டம் தருகிறோம். அமுல்படுத்துவீர்களா?''

''என்ன திட்டம்?''

''கட்டணக் கழிப்பிடம்.''

இப்படித்தான் இந்த விநோதக் கட்டடங்கள், தமிழகத்தில் 1980இல் வருகின்றன. பஸ் கட்டண உயர்வுகளும் கூட இப்படித்தான் நடக்கிறது.

இந்தியன் சிறுநீர் கழிக்க இந்திய அரசு காசு வாங்குகிறது. அதுவும் உலக வங்கி உத்தரவுக்குக் கட்டுப்பட்டு.

அப்படியானால் இந்திய அரசின் சுயேட்சைத் தன்மை எங்கே? திட்டமிடும் சுதந்திரம் என்னாயிற்று? பொருளாதார சுதந்திரம் என்னாயிற்று? உலக வங்கியே இந்திய பட்ஜெட்டின் மூளை என்றால்... இந்திய மூளை என்னாயிற்று?

இப்படி எண்ணற்ற கேள்விகள். வியப்பலைகள். அதற்கான விடைகள். விவரம் தெரியத் தெரிய... இந்தியாவின் இரண்டாவது சுதந்திரப் போராட்டம்

இளைஞர்களின் கடமையாகக் காத்திருப்பதை உணர்ந்தான், பால்ச்சாமி.

இப்படித்தான் பால்ச்சாமி கம்யூனிஸ்டாக மாறினான். கட்சியில் சேர்ந்து பணியாற்றத் துவங்க, நிறைய நிறைய நூல்கள் படிக்க... சொந்த அனுபவங்கள் அரசியல் வெளிச்சத்தில் ஞானமாகத் திரள...

அவன், அவனானான். பால்ச்சாமி, உள்ளும் புறமுமாய் மாறினான். சகல விஷயங்கள் குறித்தும் புதிய புதிய பார்வைகள். புதிய நோக்கு. புதிய அணுகுமுறை. புதிய குறியீடுகள். புதிய துணிச்சல்கள்.

கல்யாணத்தைக் கூட அப்படித்தான் முடித்தான்.

அப்போது...

அவன் இருந்த குடும்ப நிலைமைக்கு வசதியான இடத்தில் பெண் எடுக்க முடியும். அழகான பெண், அதிக வரதட்சணை என்று வாங்க இயலும்.

அந்த வாய்ப்புகளையெல்லாம் அலட்சியமாக ஒதுக்கித் தள்ளினான். 'ஏழ்மையான குடும்பத்தில் - வரதட்சணை தர வழியில்லாமல் தத்தளிக்கிற ஒரு பெண்ணைத்தான் கல்யாணம் செய்ய வேண்டும்' என்று லட்சியமானான்.

அப்படியே கல்யாணமும் நடந்தது. பிரேமா மனைவியாக வந்தாள். நகை நட்டு கிடையாது. வரதட்சணை கிடையாது. கம்மல், மூக்குத்தியோடு எளிய கல்யாணம்.

ஆனால்,

பிரேமாதான் பால்ச்சாமிக்கு பெரும் பிரச்னையாகிப் போனாள். பிரேமாவால் வந்த பிரச்னையில்தான் அவன், பின்னமாகிப் போனான்.

5

பால்ச்சாமி பெண் பார்க்க இரண்டு வேன் நிறைய ஆட்களுடன் வந்திருந்தான். அந்தக் கிராமம் வேனையே வருஷத்திற்கொரு தடவைதான் கண்கொண்டு பார்க்கும் போலும்.

வேனையே வேடிக்கை பார்த்தனர். பட்டன் இல்லாத டவுசரை ஒரு கையால் பிடித்துக் கொண்டு தெருப் புழுதியில் விளையாடித் திரிகிற பொடிப் பையன்களெல்லாம் வேனைச் சுற்றிச் சுற்றி வந்தனர். தொட்டுத் தொட்டுப் பார்த்தனர். வேனில் படிந்திருந்த புழுதிப் படலத்தில் கோணல் மாணலாய் 'முனியாண்டி' என்று ஒரு பையன் தன் பெயரைப் பொறித்திருந்தான்.

பெண் வீடு ரொம்ப ஏழ்மையான வீடு. கன்னங்கரேலென்று கறுத்துப் போன கூரை வீடு. அதிலும் முகடு கிழிந்து, கட்டை எலும்புகள் பல்லையிளித்தன. வெளியே சின்ன, சாய்வான தாழ்வாரம் இரண்டு. வாசலில் இரு பக்கமும் ஒரு தாழ்வாரத்தில் திண்ணை, மறு பக்கம் எருமைமாடு கட்டுகிற சாய்ப்பு.

வந்த ஆட்கள் உட்காரக் கூட வீட்டுக்குள் இடமில்லை. ஒரே வேக்காடு. ஜன்னல் இல்லாத இறுக்கமான குடிசை. திண்ணையிலும் பெண்கள். வேற்றுப் பெண்கள் வாசத்தில் எருமை மாடு மிரண்டு, 'தறியமுறிய' விழுந்தது.

சுமாரான அலங்காரத்திலும், பயங்கரமான நாணத்திலும் பிரேமா வந்தாள். சந்தை மாடு மாதிரி பார்வைக்கு நிறுத்தப்பட்டிருக்கிற லஜ்ஜை... கூச்சம்... அவமான அவஸ்தை. 'இப்படிப் பொட்டச்சி ஜென்மமா பெறந்து

தொலைச்சிட்டமே...' என்ற மனக்குமைச்சல். வாடிப் போயிருந்தாள்.

உள்மன வேதனை, உணர்ச்சிகள், கவிழ்ந்திருந்த முகத்தில், வியர்வைப் பொடித்து, துளிகளாகப் பூத்திருந்தன.

பால்ச்சாமி பார்த்தான். நல்ல கறுப்பு. அண்டங்காக்கா கறுப்பில்லை. அட்டக் கரியில்லை. பவுடர் பூசின மாதிரியான வெளிர்க் கறுப்பு. லட்சணமான கறுப்பு. அவளைப் பார்த்த முதற் பார்வையில் அவனைக் கவர்ந்தது... செழுமையான கன்னக் கதுப்பும், குவிந்தமைந்த கச்சிதமான கனிந்த உதடுகளும்தான்.

ரொம்பக் குச்சியாகவுமில்லாத - குண்டாகவுமில்லாத, லட்சணமான திரேகம். காட்டு உழைப்பில் குழைவு இழுந்த கட்டுத் திரேகம். முகத்தில் பரவியிருந்த பயமே, ஓர் அழகாகத் தோன்றியது. மயிலின் சாயலாக - கறுப்பு மின்னலாக - இருந்த அந்த ஒயில்.

அளவெடுத்துச் செய்த வீச்சரிவாள் மாதிரியிருந்தாள் பிரேமா. சம்மதம் சொல்லிவிட்டான், பால்ச்சாமி.

அவன் சொன்ன சம்மதத்தில், அவனது வீட்டாட்கள் அதிர்ச்சியாகத் திணறினர். அவர்களுக்கு அவ்வளவாகப் பிடிக்கவில்லை.

'செக்கச் செவேலென்று சீமைராஜா மாதிரியிருக்கிற நம்ப பால்ச்சாமிக்கு இந்தக் 'கருவாய்ச்சி' ஒரு பெண்ணா? ஈடா? வாயைத் திறந்து சரி சொன்னால் தக்காளிச் சிவப்பில், நகை நட்டு சீர்வரிசைகளோடு வரிசையில் வந்து நிற்குமே...' என்ற நினைப்பில் வீட்டாட்கள்.

''ஏலேய்... இப்படிப் பாழுங் கெணத்துலே கண்ணைத் தொறந்துக்கிட்டுப் போய் வுழுதியே...'' என்கிற மாதிரி

பால்ச்சாமியை 'விரட்டி விரட்டிப்' பார்த்தார்கள். பார்வைகளிலேயே பொருமலையும் குமைச்சலையும் கொட்டினார்கள். தங்களுக்குள்ளேயே 'குசுகுசு'வென்று பேசிக் கொண்டனர். பிரேமாவைப் பிடிக்காமல் 'வெடுக் வெடுக்'கென்று பார்த்தனர். பார்த்த பார்வைகளிலெல்லாம் கொப்பளித்த வெறுப்புணர்ச்சி.

பிரேமாவுக்குள் பகீரென்றது. அடிவயிற்றில் பயக் கலக்கம். 'சம்மதித்த பால்ச்சாமியைக் கலைத்து விடுவார்களோ...' என்ற பதற்றம்.

பிரேமாவுக்கும் பால்ச்சாமியை ரொம்பப் பிடித்து விட்டது. தேன் நிறம், ஒல்லியான - ஒடிசலான - தோற்றம். சற்று சதை பிடித்தால் லட்சணமாகி விடுவான். முகத்தில் அறிவுக்களை. யோக்கியமான மனசின் நிறைந்த அன்பு. கண்களில் ஒளியாக முகம் காட்டுகிற வசீகரம்.

அவளது ஆத்மா, அவனது கையைப் பற்றிக் கொண்டது. 'உதறிக் கொண்டு போய்விடக் கூடாதே' என்று பிரார்த்தித்தது. பால்ச்சாமியின் உறவுக்காரர்களைப் பதைப்புடன் பார்த்தாள்.

நகை நட்டு பேச்சு வந்தது. இதில் 'இடக்கு மடக்காகப் பேசி, இந்தச் சம்பந்தத்தைக் குலைத்து விட்டு விட வேண்டியதுதான்' என்ற தந்திரத்தில், தொண்டையைச் செருமித் தயாரானார்கள். போட்டிருந்த சம்மணக் காலை அசைத்துக் கொண்டு ஆயத்தமானார்கள். அதையும் கவிழ்த்து விட்டான் பால்ச்சாமி.

''உங்க நகையை நம்பி எங்க பொழைப்பு இல்லே. ஏங்கல்யாணத்தை உங்க ரொக்கத்துலே செய்ற அளவுக்கு நாங்க ஒண்ணும் வக்கத்தவுக இல்லே. உங்க மகளுக்கு நீங்க பாசத்தோட என்ன செய்ய நெனைக்கீகளோ... அதைச் செய்யுங்க, போதும். நாங்க ஏங்கல்யாணச் செலவைப் பாத்துக்கிடுதோம். அம்புட்டுத்தான் பேச்சு.''

வெட்டி கத்திரித்த மாதிரியிருந்தது, பால்ச்சாமியின் பேச்சு. மணிகொண்டு அடித்த மாதிரி 'கணீர் கணீ'ரென்று தர்மமாய் ஒலித்தது. அவனது உறவுக்காரர்களெல்லாரும் கொதி பாலில் குளிர் நீர் விழுந்த மாதிரி... திகைத்துப் போய், சத்தமிழந்து நின்றனர். வாயடைத்துப் போன திகைப்பு. அடுத்த முஸ்தீபுகளுக்கு வழியற்றுப் போன திகைப்பு.

பால்ச்சாமி குணமே அதுதான். யார் சொல்லியும் காது கொடுக்க மாட்டான். வில்லிலிருந்து புறப்பட்டு விட்ட அம்பு மாதிரிதான் வழி நழுவாத விறைப்போடு பாய்வான். பின் வாங்க மாட்டான். தீவிரத்தையோ, வேகத்தையோ குறைக்க மாட்டான்.

அவன் வைத்ததுதான், அவன் வீட்டில் சட்டம். இஷ்டமோ, இல்லையோ அது வேறு. ஆனால் அவன் சட்டம்தான் வீட்டின் நடைமுறை. ஒற்றைப் பிள்ளை. மொத்தச் சொத்தின் ஏக வாரிசு. ஏகப்பட்ட புஸ்தகம் வாசித்தவன். பல பேருக்குத் தலைவனாக நின்று, நல்லது கெட்டதுகளை எடுத்துச் சொல்லி வழி நடத்துகிறவன். மேடையேறி மைக்கில் நின்று மழை பெய்கிற மாதிரி 'சோ'வென்று பேசுகிறவன். அயல் தேச விவகாரங்களிலிருந்து, உள்ளூர்ச் சாக்கடை வரைக்கும் அனைத்தையும் அலசுகிறவன்.

அப்பேர்ப்பட்டவன்... வீட்டாட்கள் சொல்லித் தலை வணங்குவானா? ஆக...

அன்றைக்கே கல்யாணம் நிச்சயமாயிற்று.

நிச்சயம் செய்து, முகூர்த்த தேதி நிர்ணயித்து, 'பூ' வைத்து விட்டு, இரண்டு வேன்களும் புழுதியைக் கிளப்பிக் கொண்டு போய் விட்டன. வேனுக்குள் அடைத்துக் கொண்டு மனிதர்கள் வெக்கை.

உணர்ச்சிகளின் வெக்கை. எல்லார் மனசுகளிலும் இறுக்கம். யாரையும் மதிக்காமல், தானடித்த மூப்பாகக் காரியம் செய்து விட்டானே என்கிற ஆதங்கம்.

உள் மனக் குமைச்சல்கள். முகத்தைத் திருப்பிக் கொள்கிற சிறு சடைப்புகள், கோபதாபமான பேச்சுக் குதறல்கள். உறுமலான முணுமுணுப்புகள். புலம்பல்கள். வருத்தப் பெருமூச்சுகள். சோகமான மூக்குச் சீறல்கள்.

இதே போலப் பிரேமா வீட்டிற்குள்ளும் ஏகமாய் ரகளை. பிரேமாவின் அண்ணன், ஒத்தைக் காலில் ருத்ர தாண்டவம் ஆடினான்.

''இந்த ஆளுக்கு நம்ம தங்கச்சியைத் தரவே கூடாது.''

அவன் சொல்லில் ஏதோ ஒரு நியாயம் புதைந்து கிடப்பதாக உள்ளுணர்வாக உணர்ந்த பெற்றோர் மௌனமாக யோசித்தனர்.

''சொத்து இருக்கு. வீடு காடு இருக்கு. இருந்து என்ன செய்ய? இதுகளை வைச்சுக் காப்பாத்தத் தெரியுமா? அதுக்குத் தேவையான திறமை இருக்கா? ஆர்வம், அக்கறை இருக்கா? ஒண்ணுமில்லே. 'கட்சி, கட்சி'ன்னு ஊர்க்காடு சுத்தத் தெரியும். மைக்கைக் கண்டுட்டா... தண்ணிக் குடிக்காமப் பேசத் தெரியும். வேறென்ன தெரியும்?''

பிரேமாவுக்குள் குலை நடுக்கம். 'மழையிலிருந்து நனைய விடாமல் காப்பாற்றி விட்டோமே' என்ற ஆறுதல் முகம் காட்டுவதற்குள், மாவை அள்ளிக் கொண்டு போகிற சூறாவளி, இத்திசையில் எழுந்து விட்டதே.

''போட்டதைப் போடுன்னு சொன்னா... யோக்கியன்னு அர்த்தமா? அக்கறையத்துப் போய் எதையும் ஆக்கத் தெரியாம

மலட்டுத்தனமாயிருக்கிற இவருக்கு, எவன் பொண்ணு தருவான்? அதான்... 'போட்டதைப் போடு'ன்னு... யோக்கிய வேஷம் கட்டிட்டுப் போறாரு...''

பிரேமாவின் அம்மா குரல் சீற்றமாக வெடித்துச் சினந்தது.

''ஏலேய்... வாயை மூடுடா... நாயி.''

''துரியோதனங் கூட்டத்துலே தப்பிப் போய் ஒரு தருமரு வந்துட்டா... தருமர்னா ஒத்துக்கிடுவீக? தர்மவேசம் போடுற கபடக்காரன்னுதானே சொல்லுவீக? கெட்டழிஞ்சு போன இந்த மனுஷக் குப்பையிலே ஒரு நல்ல மனுஷன் பொறந்தா, ஒத்துக்கிடவா செய்வீக? ஏமாளி... ஏலாதவன்... இளிச்சவாயன்னுதானே பட்டம் கட்டுவீக?''

''என்னம்மா சொல்லுதே? ஒனக்கென்ன அறிவு கெட்டுப் போச்சா?''

''அறிவோடதான் பேசுதேண்டா... இந்தக் கல்யாணம் நடக்கும். நடக்கட்டும்.''

''எதுக்கு? எல்லாச் சொத்தையும் 'இருந்து' தின்னு தொலைச்ச பெறகு... ஏந்தங்கச்சி தெருவுலே நின்னு பொலம்பவா?''

''ஏன்? ஒந்தங்கச்சி கெட்டிக்காரியாயிருந்தா... புருஷனை கைக்குள்ளே போட முடியாதா? வசக்கிக் கட்டுப்படுத்தக் கூடாதா? 'ஊரு, கட்சி'ன்னு அலையுற மாப்பிள்ளையை... 'வீடு, புஞ்சை'ன்னு திரியுற மாதிரி அக்கறையாக்க முடியாதா? அட... முடியாமத்தான் போகுதுன்னு வைச்சுக்கோ... என்ன குடி முழுகிப் போகப் போவுது? ஒந்தங்கச்சியே, புருஷன் வீட்டுச் சொத்தை கட்டிக் காத்து வளர்த்துர முடியாதா?''

அம்மா சீற்றம்... அனலும் அறிவுமாய் பறந்த வார்த்தைகள்... பிரேமா நெஞ்சுக்குள் வேத வார்த்தைகளாகப் பதிந்தன.

சண்டையும் சச்சரவுகளும் வீடுகளில் நடக்க, கல்யாணமும் நடந்து முடிந்தது.

திருமணம் முடிந்து, மாப்பிள்ளை விருந்து முடிந்து... மறுவீடு போவதற்குள்...

இரண்டு குடும்பங்களுக்குமிடையில் பெரும் சண்டையாகி 'கைகலப்பு வரை போய் விடுமோ' என்று பயம் வர... ஊர் கூடி, பஞ்சாயத்துப் பேசி...

பால்ச்சாமிக்கான காடு கரைகளோடும், தனியான வீட்டோடும், சுடச்சுட தனிக் குடித்தனம் போய் விட்டான்.

கல்யாணத்தின் போதே, பால்ச்சாமியின் பிராபல்யம் தெரிந்தது. இதுவரைக்கும் இந்தக் கிராமத்தில் எந்தக் கல்யாணத்திற்கும் இத்தனை கூட்டம் வந்ததேயில்லை. அப்படியொரு கூட்டம்.

சைக்கிள்களிலும், பைக்குகளிலும் வந்த வண்ணமாயிருந்தது, வாலிபர்கள் கூட்டம். வந்த ஜனத்தை தாள முடியாமல், கிராமம் திணறித் தத்தளித்தது. கடைகளில் பீடி சிகரெட்டுக்குக் கூடப் பற்றாக்குறை.

தாலிகட்டிய பிறகு வாசித்துத் தந்த வாழ்த்துப் பத்திரங் களும், பரிசுப் பொருள்களும் இரண்டு வண்டிக்கு இருக்கும். வாசிப்பும், அறிவிப்புகளுமே ஒன்றரை மணி நேரம் நடந்தது.

''குடும்ப அக்கறை'' இல்லாத அவனின் ஊர்ச் செல்வாக்கும், அந்தஸ்தும் பிரேமாவின் மனசுக்குள் இனம் புரியாத படபடப்பை உருவாக்கியது.

''தோழர்... தோழர்...'' என்று அவன் கையை குலுக்கிய நூற்றுக்கணக்கான இளைஞர்கள். அதிலிருந்த பாவனையற்ற அசல்தன்மை. ஆத்மார்த்தமான தோழமை.

வார்த்தையாக்கிச் சொல்ல முடியாவிட்டாலும்... பிரேமா மனசால் உணர்ந்தாள். பிரமித்தாள்.

ஆத்மார்த்தமாய் அவனது காலடியில் சரணடைந்தாள். சரணடைந்த அவளுக்கும் ஆத்ம நெருக்கடிகள் வரும் என்று கண்டாளா பிரேமா?

6

கல்யாணமான மறு மாதம்.

வீட்டின் பின்புறம் சின்ன வெட்டவெளி. சுற்றிலும் ஆள் உயரத்திற்கு மேல் சுற்றுச்சுவர். குளிப்பு, துணி துவைப்பு எல்லாம் அங்குதான்.

சாயங்காலம். அஞ்சுமணித் தங்க வெயில். மேற்கு மலைத் தொடர்ச்சியின் தலையில் கனத்த மேகங்கள். அந்திச் சூரியனின் தீண்டலில் புல்லரித்துப் போன அந்த மேகங்களின் ஒளித் ததும்பல். 'ச்சீ... போங்க' என்று வெட்கிச் சிணுங்குகிற மாதிரி ஒரு சின்ன மேகம் சூரியனை மறைக்க முயன்று முடியாமல், தங்கப் பாளமாய்த் தகதகத்தது.

மேகங்களின் தகதகப்பில் வெயிலின் நிறமே விநோதமாகி... கனிந்து ஒளிர்ந்தது. வெள்ளைச் சுவர்களில் அந்த விநோத ஒளிபட்டு... எதிரொலித்தது... ஒரு மாயலோக அழகாகத் தோன்றியது. கவனித்துப் பார்க்கும் மனங்களில் பிரமிப்பான ஒரு மயக்கம்.

கொடியில் காய்ந்த துணிகளை ஒவ்வொன்றாக உருவிக் கொண்டிருந்தாள் பிரேமா. அவரைக் கொடியின் பசுமைப் படர்வில் அந்திச் சூரிய ஒளிபட்டு... கண்ணையும் மனசையும்

மயக்கிச் சொக்க வைக்கிற விநோத உணர்வை மனசில் அசை போட்டு ரசித்துக் கொண்டே....

துணிமணிகளை உருவினாள். உருவிய துணிகளை இடது குடங்கையிலும், தோளிலும் போட்டுக் கொண்டாள். உருவிக் கொண்டே நகர்கிறபோது...

உடுத்தியிருக்கும் சேலையும் உருவப்படுகிற உணர்வு. அந்த உள்ளுணர்வின் பதற்றத்தில் நெஞ்சைப் பார்த்தாள். மாராப்புச் சேலையைக் காணோம். பக்கென்றிருந்தது. உயிரே பறி போன மாதிரி, துடிப்பான தோற்றம். கழுத்தடியில் ஓர் உஷ்ணக் காற்று. பாம்புச் சீறலாக ஒரு சுவாசத் தீண்டல். பதறிப் போய் சட்டென்று திரும்புகிற போது -

இடுப்பில் பால்ச்சாமியின் கைகளின் இறுக்கம். திரும்பிய முகத்தைத் திருப்ப முடியாமல் வலது கன்னத்தைக் கவ்விய அவன். அவனது எச்சிலின் ஈர வெப்பம்.

அவனை அவனென்று உணர்வதற்குள், முழுசாக ஆக்ரமித்து விட்ட - அவள் பின் பக்கமெல்லாம் அவனது வெப்பம். முன் பக்கத்தில் தாபமும், தவிப்புமாய் தழுவிப் படர்கிற தகிப்பான கைகள்.

அவளைச் சுட்ட பயத் தீ. நாணமல்ல... அச்சத் தீ. உயிர் வரை சுட்டுக் கருக்கிய தீ. அவள் ஆத்மாவே, படபடத்து கிலியில் நடுங்கித் துடிக்க -

ஒரு பாம்பை உதறுகிற மாதிரி, அவனைத் திமிறி உதறி விட்டு ஓடினாள். அரண்டு போய் இருண்டு போன முகம். பேயைக் கண்ட பீதியில் வெலவெலத்துப் போய், திகிலடித்த முகமாய்... அவள்.

வெட்டுப்பட்டுத் தெறிக்கும் மரச் சிறாய் போல, பயத்தில் அடிபட்டு, வீட்டுக்குள் ஓடியே போய் விட்டாள்.

பால்ச்சாமிக்குள் கற்றையாய் அறைந்த ஏமாற்றம். மோகப் பெரு வெள்ளமும், ஏமாற்றமும் அவனை அடித்துக் கொண்டு செல்ல... உடம்பெல்லாம் காய்ச்சல் கண்டதைப் போல உணர்ந்தான். தகிப்பும் நடுக்கமுமாய் ஏமாற்றத்தில், நிலை குலைந்து போய் நின்றான்.

ஓர் இனிய அனுபவத்தை இழந்த கொதிப்பு. இளமைத் துள்ளலான இயல்பான வேட்கையைப் புறக்கணித்து, அவமதிக்கப்பட்டதால்... வந்த அவஸ்தை, கோபாவஸ்தை.

'எதுக்கு இவ... இப்படிச் செய்றா? இப்ப என்ன ஆகிப் போச்சு? கல்யாணமான புதுச்சோடிக 'அப்படி இப்படி' விளையாடுறது தப்பா?'

அவனுக்கு ஒன்றும் புரியவில்லை.

உள்ளுக்குள், காயப்பட்டுப் போன பால்ச்சாமி. அதன் ரணமும் ஆத்திரமும் முகத்தில்.

விளையாட்டுக் குறும்பும், இளமை வேட்கைத் துடிப்புமாய் வந்து துள்ளல் சேட்டை செய்த பால்ச்சாமி. கட்டித் தழுவி விளையாடிய ஒரு சின்னக் குதூகலம்.

அந்தத் தழுவலை ஏற்று, அங்கீகரித்து... வெட்கி... செல்லத் சிணுங்கலாகச் சிணுங்கி... கொஞ்சலாய் கெஞ்சி... 'ச்சீய்... போங்க' என்று பொய்க் கோபமாய் திமிறிக் கொண்டு ஓடியிருந்தால்...

மனசுக்குள் ஒரு வசந்தம் புன்னகைத்திருக்கும். திருப்திப்பட்டிருக்கும். வெட்கி ஓடுகிற அவளைப் பார்த்து, குறும்பு மின்ன வெற்றிச் சிரிப்புச் சிரிப்பதில்தான்... ஓர் ஆத்ம சுகமே ஏற்பட்டிருக்கும். அதுதான் அவன் குறிக்கோள்.

ஆனால்... என்ன இது?

விளையாடுவதற்கு வந்தவனை விளக்கு மாற்றால் எதற்கு அடிக்கணும்? ஆசையோடு வந்தவனை, பாம்பாக நினைத்துப் பயந்து என்னத்துக்கு அசிங்கப்படுத்தணும்?

வேதனையும் குழப்பமுமாய்... சில நிமிஷங்கள், அங்கேயே வேர் பிடித்து நின்றான். மனசின் படபடப்பு அடங்குகிற வரை அங்கேயே நின்றான். சுற்றிலும் பரவிக் கிடந்த சூன்யம், அவனை ஒரு முள்ளாக உறுத்தியழுத்த... ஆழ்ந்த பெருமூச்சு விட்டான். மெல்ல வீட்டிற்குள் நுழைந்தான்.

உள்ளே போனால் -

அவனைத் தூக்கி வாரிப் போட்டது போலிருந்தது. பிரேமா தரையில் உட்கார்ந்து, விசும்பி விசும்பி அழுகிற பரிதாபம். குத்துக்கால் வைத்து உட்கார்ந்து... முழங்கால்களுக்கிடையில் கைகளை வைத்து, அதன் மேல் முகம் கவிழ்ந்து...

விசும்பல்களில் தேம்பியதிர்கிற அவளது புஜங்கள், முதுகுப்புறம். அவனை ஆழமாய் அதிர்ந்து போக வைத்த குலுங்கல்கள்.

அடிபட்ட அவமானக் கோபத்தில் உள்ளே வந்த பால்ச்சாமி, அடித்து விட்ட குற்ற உணர்வுக்கு ஆளானான். தெரியாமல் மிதித்து விட்டோமோ என்ற மர்மப் பதைப்பு.

கோபித்துக் கொண்ட குடும்பத்தை உதறிவிட்டு, இவனை நம்பிச் சரணடைந்த ஆத்மா. இவன் குடும்பத்தோடு வந்த சண்டையிலும், பட்டுக் கொள்ளாமல்... பவ்யமாய் இவன் பின்னால் நின்ற பண்பு.

அவனுக்குள் சுரந்த இரக்கம். பதற்றம்.

''என்ன... என்ன! என்னம்மா பிரேமா? என்னத்துக்கு அழறே?''

அசலான கருணையில் நனைந்த அவனது பதைப்புச் சொற்கள். விருட்டென்று நிமிர்ந்து பார்த்தாள். அரிவாள் வெட்டு போன்ற கோபப் பார்வை. மறுபடியும் முகம் கவிழ்ந்து அழுகிற பிரேமா.

''என்னாச்சு...? என்னம்மா? நா என்ன பண்ணிட்டேன்? ஏதாச்சும் தப்பா பண்ணிட்டேனா?''

பதற்றத்தில் குழைகிற அவன். ஆறுதல் சொல்லக் கூட தொடத் தயங்குகிற பயம்.

''எதுக்கு அழறே பிரேமா? சொல்லிட்டு அழு...''

''எனக்கு இதெல்லாம் பிடிக்காது.''

''புருஷன், பொண்டாட்டியை கட்டிப் பிடிக்கக் கூடாதா? அது ஒரு குத்தமா?''

''பட்டப் பகல்லேயா? அதுக்கொரு நேரம் காலம் இல்லியா?''

''கல்யாணமான சின்னஞ்சிறுசுக... குறும்பு பண்ணி வெளையாடுறதுக்கு, என்ன நேரங்காலம்?''

''சின்னஞ்சிறுசுன்னா... பொரட்டாசி மாச நாயா? அதுக்கொரு எடம் பொருள் இல்லியா? நேரம் காலம் வேண்டாமா?''

''இப்ப யாரு பார்த்துட்டா? இங்கு யாரு இருக்காக? நாம தெருவுலேயா நிக்கோம்?''

''இதெல்லாம்... எனக்குப் பிடிக்காது. என்னாலே தாங்க முடியாது.''

''சரி... சரி... அழாதே...''

வெளியே போய் விட்டான். 'சரி... சரி'தான் மன்னிப்பு. மன்னிப்புக் கோருகிற தாழ்ந்த சுருதி.

வெளியே வந்த பால்ச்சாமிக்கு, ஒரே புதிராக இருந்தது. பிரேமாவின் எல்லை மீறிய கூச்ச சுபாவமும், அளவு தாண்டிய லஜ்ஜையும் புரிந்தது.

... நாலைந்து நாள்களுக்கு முன்பு -

நடந்த சம்பவம், மனசுக்குள் அலை அலையாக வந்து, இன்றைய நிகழ்வோடு பின்னியது; பிரேமாவை பால்ச்சாமிக்குத் துல்லியப்படுத்தியது.

அலுமினிய வாளியில் வெந்நீரை ஊற்றினாள், பிரேமா. ஆவி இழை இழையாய்ப் பறந்தது, மேல் நோக்கி. பச்சைத் தண்ணீரை ஊற்றி... 'பதம்' பார்த்தாள். இதமான சூடு.

''குளிச்சுக்கிடுதீகளா?''

''ம்.''

சோப்பு, துண்டுடன் வந்தான். குளித்தான்.

''துண்டு தரட்டா?''

''கொண்ணாந்துட்டேன்.''

''வேறெ எதுவும் வேணுமா?''

''நீதான் வேணும்.''

''ச்சேய்...''

நேரம் ஒன்பதுக்கு மேலாகி விட்டது. சோற்றுப் பானைக்கு நீரூற்ற... காய்ச்சி ஆற வைத்த பாலுக்கு 'உரை' ஊற்ற... என்று இரவின் இறுதி வேலைகளில் பிரேமா, வீட்டை பெருக்கி முடித்து, பத்தி பொருத்தி வைத்தாள்.

குளித்து முடித்து விட்டு வந்தான். துவட்டிய தலை, ஈர ரோமங்களின் இன்பச் சிலிர்ப்பு, வியர்வைப் பிசுக்கும் அலுப்பும் கழுவிய உடம்பு. புடைத்தெடுத்த தான்யமாய் திரேகமே புதுமையாய்... புத்துணர்ச்சியாய்... சுத்த சுதாரிப்பு.

அந்த இளங்கணவனுக்குள் புதிய ஆசைத் துளிர், துளிர் விட்ட வேகத்தில் விருட்சமாகி விடுகிற ராத்திரிக் குறும்பு. அடுக்கு மேல் அடுக்காக அடுக்குகிற மோகத் திமிர். நினைக்க நினைக்க மனசே திளைத்து விம்முகிற வெறி...

பிரேமா குளிக்கிற சப்தம். நீர் விழுந்து வழிந்து தெறிக்கிற சப்தம். சோப்பின் தேய்ப்புச் சப்தம். மனசுக்குள் பிம்பங்களை கற்பனை செய்கிற மெல்லிய கிளுகிளுப்புச் சப்தம்.

தயாரிப்பில் மும்முரமானான், பால்ச்சாமி.

பாயை விரித்தான். தலையணையை - விரிப்பை எடுத்துப் போட்டான். விளக்குகளை அணைத்தான். விடி விளக்கைப் போட்டான். பச்சை நிற வெளிச்சம். விடி விளக்கில் ஒரு சுவிட்ச். அதைப் போட்டால்... இன்னும் சற்று வெளிச்சம் கூடுதலாகும்.

மல்லிகைப் பூவின் வாசம் ‘கம்ம்’மென்று வந்தது. கண்ணைத் திறக்காமல் உறங்குவது போலப் படுத்திருந்தான். இவன் உறக்கத்தை அவள் நம்ப வேண்டும் என்பதற்காக, மூச்சை இழுத்து இழுத்து ஒரே சீராக விட்டான்.

பக்கத்தில் படுக்கிற பிரேமா. இவளுக்கும் அவனுக்கும் இடையில் உறுத்தலான இடைவெளி. அவனுக்குள் ஓர் ஏக்கம்.

அவள் உடம்பு தானாக நெருங்கி வந்து உரசாதா? மார்பில் அவள் குளிர்ந்த முகம், ஸ்பரிசமாகாதா? அவளது பூங்கரங்களின் ஈரக்குளிர்ச்சி, இவனது திரேக ரோமங்களில் படிந்து மின்சாரம் பாய்ச்சாதா?

மனசு கிடந்து ஏங்கித் தவித்தது.

அப்படியெதுவும் நடக்கவில்லை. அவள் முதுகைக் காட்டிக் கொண்டு ஒருக்களித்துப் படுத்துக் கொண்டாள்.

சில கணங்கள் -

நத்தையின் நிதானமாக, கனத்து நகர்ந்தன.

இவன் மெல்லப் புரண்டான். காலைத் தூக்கி மேலே போட்டான். அவள் நெஞ்சில் குறுக்காகக் கை போட்டான்.

''இன்னும் ஒறங்கலியா?''

''இல்லே?''

''நடிப்பா?''

''நீயா எழுப்புதீயான்னு பாத்தேன்...''

''ஒறங்குறவுகளை எதுக்கு எழுப்பணும்?''

''எதுக்கா? ஏய்... ஒண்ணும் தெரியாதோ?''

''உங்களை நா உசுப்பவா?''

''ஏன்... உசுப்புனா என்ன?''

''நா என்ன, உதுத்துன (மானத்தை உதிர்த்தவளா?) வளா?''

''நல்ல பொஞ்சாதி, புருஷன் கிட்டே வெட்கமில்லாம இருக்கணும் தெரியுமா?''

''நா ஒண்ணும் நல்ல பொஞ்சாதியில்லே.''

அவன் சிரித்தான். சிரிப்பினூடே மேலாக்கை விலக்க முயன்றான். இயல்பாகச் செய்வது போல நடிக்கிற பாவனை.

அவள் கைகள் வேகமும் விறைப்புமாய்த் தடுத்தன.

''என்ன?''

''லைட்.''

''விடி விளக்குதானே? இருக்கட்டும்.''

''அப்ப வேண்டாம்...''

''எனக்கு வேணும்.''

''அதெல்லாம் முடியாது. இதென்ன... புதுப் பழக்கம்?''

''கண்ணு மூடுன இந்த வெளிச்சம் ஒன்னை என்ன செய்யுது?''

''என்னாலே முடியாது.''

''எனக்கோர் ஆசை.''

''ம்?''

''வெளிச்சத்துலே ஒன்னைப் பாக்கணும்.''

''பாருங்க.''

''ஒன்னை மட்டும் பாக்கணும். துணிமணியை இல்லே'' இவன் பக்கமாய் விருட்டென்று திரும்பினாள்.

''அது, இந்த ஜென்மத்துலே நடக்காது'' என்று சிரித்துக் கொண்டே சொன்னாள். சிரிப்பின் மென்மையைக் கடந்து, அவள் சொல்லிலிருந்த உறுதி. வைராக்கியம்.

அதைச் சோதித்துப் பார்க்க, மீண்டும் கை வைத்தான். தட்டி விட்டாள். நெருங்கி வரும் ஏமாற்றத்தை உணர்ந்தான்.

''ஏன் நடக்காது?''

''நடக்காதுன்னா நடக்காதுதான்.''

''அதான்... ஏன்னு கேக்கேன். புருஷன்ங்குற உரிமையிலே நா வற்புறுத்துனா? கட்டாயப்படுத்துனா?''

''செத்த கட்டையைத்தான் பாப்பீக.''

பால்ச்சாமிக்குள் அரிவாள் வெட்டு விழுந்த மாதிரி யிருந்தது. கையை எடுக்கவில்லை, அவன். உறைந்து போன கை. அதிர்வில் வெலவெலத்து திகைத்துப் போன கை. கையின் ஸ்தம்பிப்பிலேயே, அவன் மன அதிர்வின் அளவை உணர்ந்த பிரேமா...

அவளுக்குள் சுரந்த கருணை. அந்த அதிர்விலேயே அவனது அன்பின் அடர்த்தியை - ஆத்ம துடிப்பை - உணர்ந்த நெகிழ்வில் விளைந்த இரக்கம்.

அவள் ஒரு பூ மாதிரி மென்மையாகப் புரண்டாள், அவன் பக்கமாய்.

அவனது ரோமம் அடர்ந்த மார்பில் முகம் புதைத்தாள். கன்னத்தால் உராய்ந்தாள். அவனது வயிற்றில் அவளது உள்ளங்கையின் குளிர்ச்சி.

''ஏங்... கோபமா?''

அவளது கனிந்த உதடுகளின் மென்மைச் சிலிர்ப்பு, மார்பில்.

''உங்களை மாப்பிள்ளையா அடையறதுக்கு, நா எத்தனை ஜென்மமா புண்ணியம் பண்ணுனேனோ...''

''அப்படியா?''

''உங்க மனசு பூராவும் அன்புதான், பாசந்தான், நாந்தான் உங்களுக்கேத்த பொண்ணா இல்லே...''

''ஏன்?''

''நீங்க நெறைய படிச்சிருக்கீக. நெறைய சினிமா பாத்துருப்பீக. அதுகள்லே வர்ற புருஷம் பொஞ்சாதி சிரிச்சு விளையாடுறதைப் பாத்துப் பாத்து ஆசைப்படுதீக...''

''ம்...''

''ஆனா... நா பட்டிக்காட்டுக்காரி. அம்மா காலடியிலே 'அடுப்பங்கரையே ஒலகம்'னு வளர்ந்துட்டவ. ரெண்டு ஆம்பளைக தெருவுல நின்னாக்கூட... அந்தப் பக்கமே தலை காட்டாம இருந்து பழகிப் போனவ. என்னால உங்க இழுப்புக்கு வர முடியலே.''

''வரணும்னு நெனைக்கவாச்சும் செய்றீயா?''

''நெனைச்சு என்னங்க செய்ய? பெறவிக் கொணம்னு ஒண்ணு இருக்கே. மட்டை வைச்சுக் கட்டுனா... நேராகாதே...''

அவளது கண்ணீர்த் துளிகளின் வெதுவெதுப்பை நெஞ்சில் உணர்ந்தான். ''சரி, சரி... அழாதே...'' என்று சாந்தப்பட்ட மனசோடு அவள் முதுகை வருடினான். பெருமூச்சு நீளமாய்

வெளியேற... விடிவிளக்கை அணைத்தான். கண்ணே போன மாதிரி, அப்பிக் கொண்ட இருட்டு. அவன் உடம்பும், மனசும், அவளை முழுமையாக உணர்ந்து திளைத்தது. இவளது கூச்ச சுபாவமே இவர்களுக்குள் ஒரு பிரச்னையாகும் என்று அப்போது அவர்கள் உணரவேயில்லை.

7

கீழக்காட்டில் பருத்திப் புஞ்சையைச் சுற்றிப் பார்த்தான், பால்ச்சாமி. பருத்திச் செடிகள் முழங்கால் உயரத்திற்கும் மேல். கனிந்த பச்சை நிறக் கடலாய்... செடிகளின் அடர்த்தி. வெள்ளைப் பூக்களும், ரோஸ் கலர் பூக்களும் ஜில்லென்று பூத்திருந்தன. வெள்ளைப் பூக்கள் ஆண்கள். மகரந்தத்தைத் தந்து விட்டு உதிர்ந்து விடும். ரோஸ் கலர்ப் பூக்கள்தான், பெண்கள். காம்பு சுருங்கிப் பிஞ்சுகளாகும்.

இளம் பிஞ்சுகள் ஒவ்வொரு செடிக்கடியிலும் உதிர்ந்து கிடந்தன. பிஞ்சை எடுத்துப் பிய்த்துப் பார்த்தால்... அதற்குள் புழு. உள்ளிருந்து வீழ்த்தியது காய்ப் புழு. பிஞ்சுகளை மட்டுமல்ல. சம்சாரிகளின் கனவுகளையும் வாழ்க்கையையும் வீழ்த்துகிற புழு. அடிக்கிற பூச்சிக் கொல்லி மருந்துகளின் விஷத்தையெல்லாம் குடித்துக் குடித்துக் கொழுத்துப் போன புழு.

'வேப்பெண்ணெயில் சோப்பு கரைத்துத் தெளிக்கணும்' என்று நினைத்துக் கொண்டான். மனசில் பலபல யோசனைகள். விவசாயச் செலவுகள் குறித்த நினைவுகள்.

சைக்கிளை எடுத்துக் கொண்டு மேலக் காட்டுக்குப் போனான். எல்லாப் புஞ்சைகளையும் சுற்றிப் பார்த்து விட்டுப்

புறப்பட்டான். புது சைக்கிள். ப்ரீவீலின் சுழலிரைச்சல் மனசுக்குச் சுகமாக இருக்கிறது.

தியேட்டரில் கமல் படம். 'பதினாறு வயதினிலே'. கரட்டானை அடிப்பதைக் கூட காணச் சகிக்காத சப்பாணி... அன்பின் தீவிரத்தில் ஒரு கொலையே செய்கிற படம். 'வீரத்தின் விளை நிலமே ஈர மனசுதான்' என்பதை உணர்த்துகிற படம். 'வாடிய பயிர் கண்டு வாடுகிற' அன்பின் நெகிழ்வு மனித குல சமத்துவ நல்வாழ்வுக்குத் தடையாக இருக்கிற மனிதப் பதர்களை வீழ்த்துகிற புரட்சியாகப் பரிணமிக்கிறது என்கிற மகத்தான சமூகவியலை உணர்த்துகிற படம்.

பிரேமாவைக் கூட்டிக் கொண்டு போகணும்.

சாயங்கால வெயில். மணி பார்த்தான். 3-45. சுள்ளென்று அறைகிற வெயில். கன்னக் கதுப்பில் வெயிலின் தீத்தீண்டல்.

ஆகாயத்தைப் பார்த்தான். வெளிர் நீலமாய் விரிந்து கிடந்த வானம். சூரியப் பிரகாசத்தில் பயந்து முகம் வெளுத்துப் போன ஆகாயம். மேகங்கள் அவ்வளவாயில்லை. தூக்கியெறிந்த ராட்சஸ நாணற் கதிர்களாய் சில மேகங்கள்.

காடுகளில் மேய்கிற செம்மறியாடுகள். பாதையோரத்தில் ஆட்டுக்காரன். ரொம்ப விநோதத் தோற்றம். அண்-டிராயர் தெரிய சுருட்டி மடக்கிய கைலி. பச்சை பனியன். அதிலும் சில கிழிசல். இடுப்பில் இறுக்கமாய்க் கட்டியிருந்த துண்டில், வெறும் தூக்குச் சட்டி கிலுகிலுத்தது. கம்பை சாய்வாக ஊன்றி, அதன் மேல் கட்கத்தைப் போட்டு, ஒற்றைக் காலில் முழு உடம்புப் பாரத்தையும் அதன்மேல் போட்டு... கிருஷ்ண பரமாத்மா மாதிரி நின்றான். குருட்டாம் போக்கில் 'விர் விர்ர்'ரென்று சீறுகிற கற்கள். ஆடுகளை வைகிற கெட்ட வார்த்தைகள்...

வீட்டின் முன் -

வேப்ப மரம். அதன் அடியில் சைக்கிளை நிறுத்தினான். ஸ்டாண்டின் கிளிப்பைத் தட்டுகிற சத்தத்தில் கணவனை உணர்ந்து... வெளியே வந்து எட்டிப் பார்த்தாள், பிரேமா.

''தூரவா போயிருந்தீக?''

''புஞ்சைகளுக்குப் போயிருந்தேன்.''

''வெள்ளாமை எப்படியிருக்கு?''

''பொதுவாயிருக்கு. பருத்திக்கு மருந்தடிக்கணும். மிளகாய்ச் செடிக்கு களை வெட்டணும்.''

''டீயிருக்கு. தரட்டா?''

''ம்.''

சேரில் உட்கார்ந்தான், பால்ச்சாமி. புன்னகையோடு அடுப்பங்கரைக்குள் நுழைகிற பிரேமாவை விரட்டுகிற பார்வை. குளித்திருந்தாள். உடுத்தியிருந்த சேலையின் சலவை மணம். ஈரக் கூந்தலின் கரும் மின்னல். தளர்ந்து தொங்கிய கூந்தலின் நுனியில் போட்ட முடிச்சு. அதிலும் நீர் இறங்கித் தேங்கியிருந்த நீர்த் துளியின் கனிவு. கறுத்த முகத்தில் பூசியிருந்த மஞ்சளின் பசுந்திட்டு. கன்னக் கதுப்புகளிலும், குவிந்தமைந்த உதடுகளிலும் ஈர ஜொலிப்பு.

அவனுக்குள் துடிக்கிற ஆவி. ஆவி சேர்ந்து அணைத்து, குறும்பு விளையாட்டு விளையாட தாகமெடுக்கிற உயிர்.

''செத்த கட்டையைத்தான் பாப்பீக.''

அவனை அச்சுறுத்திக் கட்டுப்படுத்திய அவளது வார்த்தைகள். வைராக்கியச் சொற்கள். டீயோடு கிளாஸை நீட்டினாள். அவள் உள்ளங்கைகளிலும் மஞ்சளின் பசுமைப் படர்வு.

அவன் முகத்தைக் கூர்ந்து பார்த்தாள். டீயை குடிக்கிறான். கண்களில் கனத்து நிற்கிற வேதனை உணர்ச்சி.

'இவனுக்கா... எந்தங்கச்சி?' என்று 'தங்கு, புங்'கென்று தரைக்கும் கூரைக்குமாகக் குதித்த அண்ணன். 'ஊரு, கட்சி என்றுதான் அலையத் தெரியும். இந்த ஆளுக்கு காடு கரைகளைக் கவனிச்சு நடக்க முடியுமா? தெரியுமா?' என்று ஆங்காரமாய் கேள்வி கேட்ட அண்ணன்.

அண்ணனின் கணக்குகளையெல்லாம் பொய்யாக்கிக் காட்டிய புருஷன். இரண்டே மாசத்தில் விவசாயத்தையும், கட்சியையும் கவனித்துக் கொள்கிற தீவிரம். வீட்டையும் நாட்டையும் வேறு வேறாகப் பார்க்காமல்... இரண்டு பணிகளையும் இரண்டு கைகளாகக் கொண்டு செயல்படுகிற சுறுசுறுப்பு.

அவள் மனசில் பொங்கித் ததும்புகிற பெருமிதம். உள்ளுக்குள் பீறிட்டு, முகத்தில் பூரிப்பு மலர்களாக ஒளி சிந்துகிற உவகை.

அவன் கண்களில் சுரந்து திரண்டு துளியாக நிற்கிற வருத்தம்.

''ஏங்க... ஒரு மாதிரியாயிருக்கீக?''

''ம்ள்ச்சு... ஒண்ணுமில்லே...'' என்று வேதனையாகச் சூள் கொட்டினான்.

''சொல்லுங்களேன்... நான் என்ன அந்நியமா?''

''வருத்தமே... அதுதானே?''

''எது?''

''நாம இன்னும் அந்நியோன்யமா ஆகலேங்குறதுதா.''

ஏதோ குற்றம் செய்து விட்டவளைப் போன்று சற்றே வாடிய முகத்துடன் அவனைப் பார்த்தாள்.

''அம்மா, அப்பா இல்லே. நாம மட்டும் தனியா குடியிருக்கோம். புதுசா கல்யாணமான எளசுக. எளசுக மாதிரியாயிருக்கோம்? ஒரு விளையாட்டு? ஒரு குறும்பு? ஒரு செல்லக் கோபம்? ஒரு கோபச் சிணுங்கல்? ம்ஹூம். ரெண்டு மிஷின்கள் விதிப்படி குடும்பம் நடத்துற மாதிரியிருக்கு... நம்ம தாம்பத்யம்.''

அவளுக்குள் புழுக்களாய் கடிக்கிற மிரட்சி. மாட்டிக் கொண்ட திருடியாக குற்ற உணர்வுடன் விழித்தாள். உள்ளூர நடுக்கம். மனக்கிலியில் கண்கள் பேந்தப் பேந்த விழித்தன.

''சரி... சினிமாவுக்குப் போவமா?''

''ம்... என்ன சினிமா?'' உயிரறுந்த குரலின் நடுக்க அதிர்வு.

''பழைய படம். பதினாறு வயதினிலே...''

''ஸ்ரீதேவி குடுத்த (நடித்த) படமா?''

''ஆமா...''

''ம்... போவம்...''

''சரி... சோறு வை. சாப்புட்டுப் போவம்.''

''எப்ப? இப்பவேயா?''

''தெருவெல்லாம் ஆள்களா இருப்பாக இல்லே?''

பயந்த தொனியில் அவள். உள் மிரட்டலாக இவன்.

''இருந்தா என்ன? வெடிகுண்டு வீசி அவுகளை வெரட்டணுமா? நீயும் நானும் கள்ள ஜோடியா? யாரும் பார்க்காம, நாம ஒளிஞ்சு ஒளிஞ்சு போவணுமா?''

''இல்லே... வந்து...''

''பிரேமா, கூச்சப்படுறதுக்கும் அளவு இருக்கு... எதுவுமே அளவு மீறுனா... அபத்தம்தான்.'' கண்டிப்பான குரலில் பால்ச்சாமி.

''ரெண்டாவது ஷோவுக்குப் போவமே...''

அச்சத்தில் நனைந்த கெஞ்சல். பயப் படபடப்பு. அவளது பயந்த மறுப்பு கூட பால்ச்சாமிக்குள் நெருப்பாகப் பாய... கொதித்துப் போய்ப் பார்த்தான்.

வழக்கத்திற்கு விரோதமாக - அதிசயமாக - கிட்டத்தில் வந்தாள். நெருக்கமாய் நின்று... குழைந்த கனிவோடு அவனது கன்னத்தைத வருடினாள். ''ஐயா... ராசா இல்லே? எஞ்செல்லம் இல்லே?''

அவனுள் புல்லரிப்பு. பயத்தில் 'மாறிய' அவளது அதிசய நெருக்கம். பரவசமாகிப் போய்... குபீரென்று சிரித்து விட்டான்.

''சரி'' என்றான். பாலாய்ப் பொங்குகிற அவளது மகிழ்ச்சியில் மகிழ்ந்தான், பால்ச்சாமி.

காலைக் கரண்டு. சைக்கிளை எடுத்துக் கொண்டு வேகமாய் புறப்பட்டான், குளிக்க. நிமிஷக் கணக்கில் குளித்து விட்டு ஈரக்கைலியை மடித்து இடுப்பில் கட்டிக் கொண்டு வந்தான்.

இன்றைக்குக் கட்சிப் பேரவைக் கூட்டம். மாநிலச் செயற்குழு உறுப்பினர் வருகிறார். அதற்கான ஏற்பாடுகளை நேற்றே செய்தாகி விட்டது.

வீட்டின் பின்னாலுள்ள கொல்லைப் புறத்தில் கைலியைக் காயப் போட்டான்.

''வேட்டி எடுத்து வைக்கவா?''

பிரேமாவின் சப்தம். அடுப்பங்கரைக்குள் புகையோடு அல்லாடுகிறாள் என்பது அவளது குரலின் கரகரப்பிலேயே தெரிந்தது.

''எடுத்து வை.''

''சட்டை... எந்தச் சட்டை எடுத்து வைக்கணும்? சந்தனக் கலரா, பொடிக் கட்டமா?''

காலில் சக்கரம் கட்டியவனாகப் பரபரத்தான். வீட்டுக்குள் ஓடி வந்தான், வெறும் டிராயருடன். தலையில் எண்ணெய் வைத்தான். பனியனைப் போட்டுக் கொண்டு... கண்ணாடி பார்த்து தலை வாரிக் கொண்டான்.

''என்ன இது...?''

''ஏம்... பிரேமா?''

''இப்படியா... அண்-டிராயரோட இருக்குறது?''

''நாமதானே இருக்கோம்?''

''யாராச்சும் உங்களைத் தேடிக்கிட்டு 'திடுதிப்பு'ன்னு வந்துட்டா? உங்களை இந்த நெலையிலே பாத்தா... என்ன நெனைப்பாக?''

''நம்ம வீட்லேபோலத்தான்... எல்லா வீட்லேயும்'னு நெனைச்சுக்குவாக...''

வேட்டியை எடுத்துக் கட்டினான்.

''சாப்புட்டுக்கிடுதீகளா?''

''ம்... ரெடியாயிருச்சா?''

''உங்களுக்கு டயமாச்சா?''

''போகணும்...''

சோறு வைத்தாள். வட்டிலில் ஆவி பறந்தது. ஃபேனை தட்டி விட்டாள். உட்கார்ந்து அவசர அவசரமாய்ச் சாப்பிட்டான். அந்த வேகத்திலும் சுபாவப்படி பாராட்டத் தவறவில்லை.

''ஏய்... ஒங் கையிலே ஏதாச்சும் மந்திரம் கிந்திரம் வைச்சிருக்கீயா?''

''என்ன... ங்க?''

''சாம்பார்லே தாளிச்ச வாசம் 'கம்ம்'னு ஆளைத் தூக்குதே...''

''பக்குவந்தான்...''

''ரொம்ப டேஸ்ட்டாயிருக்கே.''

''எல்லாம்... மல்லிச்செடி மகிமைதான்...''

சட்டையை மாட்டி விட்டான். ஹேண்ட் பாக்கை சைக்கிளில் மாட்டினான். செருப்பை மாட்ட வீட்டுக்குள் வந்தான்.

வாசலில் நின்றாள் பிரேமா, வழியனுப்ப.

அவன் பார்வையில் ஒரு கள்ளத்தனம். கண்ணில் பதுங்கிச் சிரிக்கிற குறும்பு.

''கொஞ்சம் தண்ணி கொடு'' என்றான். அவள் கள்ளத்தனத்தை மனசால் உணர்ந்த குறுநகையோடு...

''தாகமில்லாமல் தண்ணியா?''

''தாகம் இருக்கு.''

கிளாஸுடன் அடுப்பங்கரைக்கு நுழைந்தவளை வாசலை மறித்துக் கொண்டு இவன். அவளை ஒட்டிக் கொண்டு பின்னால் நின்றான். இடுப்பில் கை போட்டான்.

''இதுதான் தாகமா?''

''ம்.''

இலேசாகத் திரும்பிய அவள் கன்னத்தில் முத்தமிட்டான். அவளைத் திருப்பி... இரண்டு கன்னத்திலும்...

''ஐயய்யே... வேர்வையாயிருக்கு... விடுங்க... விடுங்க.''

பொய்யான அசூயையுடன் விலகினான். அவன் முகத்தில் கோணல்கள்.

''என்னாச்சு?''

''முத்தம்னா... இனிக்கும்லே? இதென்ன... உப்புக் கரிக்குது?''

''ச்சேய்... நீங்க ரொம்ப மோசம்.''

செல்லச் சிணுங்கலாக அவள் கோபிக்க... இவனுக்குள் ஆயிரம் பூக்கள் பூத்த சந்தோஷம். புறப்பட்டான்.

8

கட்சிப் பேரவை நடந்து கொண்டிருந்தது. கட்சி அலுவலகத்தில் ஒரு சின்ன அறை. சற்று அகலமான 'ஹால்த்தன'மான அறை. அதன் மூலையில் சேரில் உட்கார்ந்து ரிப்போர்ட் செய்கிற மாநிலச் செயற்குழுத் தோழர். முழுக்கை வெள்ளைச் சட்டை, உருண்டை முகம். பின்னோக்கி வாரப்பட்ட தலை. கண்ணாடி அணிவதும், கழற்றுவதும் ஓர் அனிச்சை செயல் போலத் தோன்றியது. உதடுகளின் கூரையாக அமைந்த கனத்த கட்டி மீசை, முகத்திற்கு ஒரு லட்சணத்தையும் மரியாதைத் தோற்றத்தையும் ஏற்படுத்தியது.

ஆற்றொழுக்காக நிகழ்கிற பேச்சில், மெட்ராஸ் பாஷையின் வாடை. 'வந்துக்கினு... போய்க்கினு...' உறுத்தலான அந்த பாஷையை உணர விடாமல், தோழமையான புன்சிரிப்பு. மனசுகளைத் தொட்டு, ஸ்பரிசித்து, வசீகரிக்கிற அன்பு.

பால்ச்சாமி தனது குறிப்பேட்டில், பேசப் பேச குறிப்பெடுத்துக் கொண்டிருந்தான். மத்திய, மாநில அரசின் செயல்பாடுகள்... புதிய பொருளாதாரக் கொள்கையின் தறிகெட்ட போக்கு... காவல் துறையின் மூர்க்கச் செயல் பாடுகள்... லாக்கப்பில் பாலியல் வன்முறைகள்... நடக்கிற சாதிக் கலவரங்கள்... சிலை உடைப்புகள்... சமூக அமைதி கெடுதல்... அரசின் செயலின்மை...

மளமளவென்று குறிப்பெடுக்கிற பால்ச்சாமி. ஒரே ஒரு காற்றாடி. அதன் முதுமையைக் கூச்சல் போட்டு அடையாளம் காட்டுகிற 'லொட லொட' சப்தம். காற்றின் பற்றாக் குறையால் வந்த புழுக்கம். நெருக்கியடித்து உட்கார்ந் திருக்கும் தோழர்கள்.

பால்ச்சாமிக்கு எதையும் கவனிக்கும் மனநிலையில்லை. மனம் பூராவும் 'ரிப்போர்ட்'டில் குவிந்திருந்தது. நாடியில் - புருவ ரோமங்களில் துளிர்க்கும் வியர்வைத் துளிகளைப் பெருவிரலால் வழித்துச் சுண்டுவான்.

ரிப்போர்ட் முடிந்தவுடன், ''சந்தேகம் இருந்தா... கேளுங்க. வேற கேள்விகளும் கேக்கலாம்!''

பால்ச்சாமிதான் இரண்டொரு கேள்விகள் கேட்டான். அதற்குப் பதில் சொல்லும்விதமாக மேலும் அரை மணி நேரம்.

அப்புறம் மாதர் சங்க மாவட்டச் செயலாளர் தங்கம்மா. ஒல்லியான - கட்டையான தோற்றம். ஐம்பதுக்கு மேல் வயது. முதுமையின் தளர்ச்சியைக் கவனிக்க விடாத மன உற்சாகம். செயல் துறுதுறுப்பு.

இளைப்பு வந்த குரல். தொண்டைக்குள் கிசுகிசுத்து குரலின் கணீரை பிசிறடிக்க வைக்கிறது. 'கேஸ் பூஸ்'ஸென்று இளைக்கிற சுவாசம். உணர்ச்சிப் பொங்கப் பேசுகிறார்.

நாடு முழுக்க நடக்கிற பாலியல் பலாத்காரங்கள். சிதம்பரம் பத்மினி, வாச்சாத்தி, சின்னையம்பதி, ராமேஸ்வரம் என்று தொடரான பாலியல் வன்முறைகள். கற்பழிப்பு நிலையங்களாக மாறிப் போன காவல் நிலையங்கள். காமப் பிண்டமாக மட்டும் பார்க்கப்படுகிற பெண்கள். மனுஷியாக மதிக்கப்படாத கொடுமை.

இதை எதிர்த்துப் போராட வேண்டிய பெண்கள். போராட விரும்புகிற பெண்கள். ஆயினும், வீதிக்கு வந்து போராடுகிற உணர்வை ஊனப்படுத்தி முடக்குகிற சமூக மதிப்பீடுகள்... ஆணாதிக்கம் உருவாக்கிய கிழட்டு மரபுகள்.

''ஆகவே... முதலில், நம்ம தோழர்கள் தங்கள் மனைவியர்களைப் போராட்டத்தில் ஈடுபடுத்த வேண்டும். நம்ம குடும்பப் பெண்கள் போராட்டத்துலே ஈடுபடுறதைப் பாத்தா... மற்ற பெண்கள் அதை முன் மாதிரியா எடுத்துக்கிட்டு பின் தொடர்ற துணிச்சல் வரும். வர்ற சனிக்கிழமை... நாட்டுலே நடக்குற பாலியல் வன்முறை கொடுமைகளைக் கண்டிச்சு மாநில அளவுலே மாதர் சங்க உண்ணாவிரதப் போராட்டம். மாநிலம் பூராவும் நடைபெறுகிற இப்போராட்டம் நம்ம ஊர்லேயும் நடக்கணும். அதனாலே... இங்கே உள்ள காம்ரேட்ஸ் இப்பச் சொல்லணும். உங்க மனைவியை அனுப்பணும். யார் யார் அனுப்பப் போறீக...? ம்... சொல்லுங்க.''

ஹால் முழுக்க கனத்த மௌனம். அறை கூவலை எதிர்கொள்ள தயங்குகிற இறுக்கம். இறுக்கம் உடைந்து, பரஸ்பரம் கிசுகிசுத்துக் கொள்கிற சப்த சலனம். தயக்கத்தையும் மறுப்பையும் பரிமாறிக் கொள்கிற கம்மிய குரல்கள்.

நாற்காலியில் உட்கார்ந்து விட்ட தங்கம்மா. எல்லாத் தோழர்களின் முகங்களையும் ஆவலோடு பார்க்கிற பார்வை. மூச்சிரைப்பின் திணறலில் முகம்.

யாரும் முன் வரவில்லையே என்கிற ஆயாசம். 'அம்மா' முகத்தில், கண்களில் ஏமாற்ற நிழல்.

பால்ச்சாமிக்கு இதையெல்லாம் பார்க்க மனசு கிடந்து சங்கடப்பட்டது. அம்மாவைப் பார்க்கப் பாவமாக இருந்தது.

'ஏனிப்படி பயப்படுறாங்க? ஒரு பகல் உக்கார்றதுக்கு இம்புட்டுப் பயமா? உண்ணாவிரதம்னா... மலையைப் புரட்டுற விஷயமா? ச்சே!'

அவனுள் வெறுப்பின் வெக்கை.

''தோழர் குப்புசாமி... நீங்க என்ன சொல்றீக? உங்க சம்சாரத்தை வரச் சொல்ல முடியுமா?''

தயக்கத்தை மென்மையாக வெல்லுகிற அன்பான முயற்சியாக அம்மாவின் அணுகுமுறை.

''முடியாதும்மா...'' மன்னிப்பு கோருகிற இறைஞ்சும் குரல்.

''ஏன் காம்ரேட்?''

''கைக் கொழந்தை. கவனிக்க வேற ஆள் கெடையாது.''

''ஏன்... ராக்கப்பன், நீங்க?''

''சாத்தியமில்லேம்மா...''

தங்கம்மாவின் சுருக்கங்கள் விழுந்த உதடுகளில் மெல்லிய சோகமும் ஏளனமும் கலந்த புன்னகை, மின்னி மறைந்தது.

''ஏந்தோழர்?''

''கட்சி ஆபீஸுக்கே நா வர்றது... வீட்லே கலகம் பண்ணிட்டுத்தான். போவக் கூடாதுன்னு ஒரே தகராறு. இதுலே... அவளையும் கூப்புட்டா... ஏங்கதை கந்தல்தான்!''

பால்ச்சாமி அவர்களையெல்லாம் எரிச்சலாகப் பார்த்தான். ஏன் இப்படி கோழைத்தனமாக இருக்கிறார்கள்? ஒரு தோழர், தன் குடும்பத்தையும் கட்சிக் குடும்பமாக்கியிருக்க வேண்டாமா? அப்படியோர் உணர்வும், யத்தனிப்பும் இருக்க வேண்டாமா?

அவனுள் எண்ணச் சீறல்கள். தீவிரப் போக்குள்ள அவனது சுபாவ வெளிப்பாடு.

அம்மா பொறுமையிழந்து விடவில்லை. தளர்ந்து விடவில்லை. வைராக்கிய நம்பிக்கையோடு ஒவ்வொரு தோழராக அழைத்துக் கேட்டார்.

பலர் மறுத்து விட்டனர். சிலர் மட்டுமே சம்மதித்தனர். அதுவும் அரைகுறை மனசோடு.

விருட்டென்று எழுந்தான், பால்ச்சாமி.

'ஏதோ கேள்வி கேட்டு குறுக்கீடு செய்யப் போகிறானோ' என்கிற குழப்பமான கேள்விக்குறி, அம்மாவின் கண்ணில்.

''என்ன... பாலு?''

''உண்ணாவிரதப் போராட்டத்துலே என்னோட மனைவி கலந்துக்குவா...''

''வெரிகுட். எல்லாத் தோழர்களுக்கும் பால்ச்சாமி கிட்டேயிருக்கிற துணிச்சலும் ஈடுபாடும் வரணும்.''

அந்தப் பாராட்டு, அவனுக்குள் ஆயிரமாயிரம் பூமாலைகளாக... வைரக் கிரீடமாக...

எல்லாரும் அவனை ஒரு புதிய ஒளியோடு பார்க்கிற பார்வைகள். கண்களில் தெரிகிற பிரமிப்பும் வாழ்த்தும்...

பால்ச்சாமி மகிழ்ச்சியில் பூரித்துப் பொங்கித் ததும்பினான்.

''ஏம்... பாலு, உங்களுக்கு இப்பத்தானே மேரேஜ் ஆச்சு?''

''ஆமா... ம்மா...''

''நாலு மாசம் இருக்குமா?''

''ம்!''

''அதுக்குள்ளே அந்தப் பொண்ணை உங்களாலே கன்வின்ஸ் பண்ண முடியுமா?''

''என்னாலே முடியும்!''

''சந்தோஷம். ஆனா... உங்க மனைவியை வற்புறுத்தாதீக. அன்பாச் சொல்லுங்க. இவ்வளவு சீச்கிரத்துலே உங்க மனைவியை எப்படி கன்வின்ஸ் பண்ணியிருக்க முடியும்?''

சந்தேகமும் நம்பிக்கையின்மையுமாக அம்மாவின் கேள்வி அவனுள் முள்ளாகக் குத்தி, அவனைச் சீண்டி விடுகிற கேள்வி. அவனது தீவிரத்தையும் அவசரத்தையும் பூதமாக்கித் தூண்டி விடுகிற உசுப்பலான கேள்வி.

''இல்லேம்மா. என்னாலே முடியும். உண்ணாவிரதப் போராட்டத்துலே என்னோட மனைவி நிச்சயமா பங்கெடுப்பா. இது உறுதி!''

''ஓகே... அப்ப அது ரொம்பப் பாராட்டத்தக்க விஷயம்.''

கூட்டம் முடிந்து வெளியே வருகிற போது... மதியம் இரண்டாகி விட்டது. பால்ச்சாமியை எல்லாரும் பாராட்ட.... பாராட்டையே சிலர் கேலியும் கிண்டலுமாய் வெளிப்படுத்த...

அவனுக்குள் பூரிப்பும் பரவசமும்...

சைக்கிளை எடுத்துக் கொண்டு வெளியேறினான்.

தெருவில் உருண்ட சைக்கிள். ப்ரீ வீலின் இனிய இரைச்சல். அதிலும் ஃபுல் கவருக்குள் செயின் சுற்றுகிறபோது வருகிற சந்தோஷமான இரைச்சல்.

பிரேமாவை நினைத்தான். மனசுக்குள் புழு ஊர்ந்தது. மனசின் நம்பிக்கைத் தளிர்களை அரித்துத் தின்கிற புழுக்கள். அரும்பிக் கனிந்த இளம் பிஞ்சுகளையும் துளைத்து உதிர வைத்து விடுகிற புழுக்கள்.

'பிரேமா... சம்மதிப்பாளா? மறுத்து விடுவாளோ...'

அதிர்வின் பரவலாக மனசுக்குள் சூழ்ந்த வெறுமை. பகீர் உணர்வு.

பிரேமா மறுத்து விட்டால்? 'முடியவே முடியாது' என்று முரண்டு பண்ணி விட்டால்?

இன்று கிடைத்த பாராட்டுகளெல்லாம், பரிகாசமாகி விடாதா? கேலிக் கூத்தாகி விடாதா?

கட்சித் தோழர்கள் எல்லாருமே கைகொட்டிப் பேசிச் சிரிக்கிற கேலிப் பொருளாகி... அவமானப்படவா?

''என்ன தோழர் பாலு, அன்னிக்குப் பேரவையிலே பெரிய ஆம்பளைச் சிங்கம் போல 'நிமிர்ந்து' பேசுனீகளே... என்னாச்சு? இம்புட்டுத்தானா... உங்க வீரம்?''

''சாதிக்க முடிஞ்சவன் சவடால் பண்ணணும். ஏலாதவன் வாயைப் பொத்திக்கிட்டுக் கொடக்கணும்!''

''ஆமா... வாய் வீரம் பேசிட்டு தலைகுனிஞ்சு நிக்குறதா... கெட்டிகாரத்தனம்?''

அவசரப்பட்டுட்டோமோ? பதற்றத்தில் சீண்டப்பட்டு, நிறைந்த சபையில் வாயைத் திறந்துட்டோமோ? இன்னும் கொஞ்சம் நிதானமா இருந்துருக்கலாமோ?

அவனுக்குள் சுயவிமர்சனமாக நீண்டு வளைகிற கேள்விகள். கேவலப்பட்டு நிற்க வேண்டியதாகி விடுமோ என்கிற பயம். மனக்கிலேசம்...

முதல் ஷோ சினிமாவுக்குக் கூட... வெளிச்சத்தில் வெளிவர மறுத்த பிரேமா...

நாலு பேர் தலைகள் தெரிந்தாலே... உள்ளுக்குள் தலையை இழுத்துக் கொள்கிற அவளது கூச்ச சுபாவம்...

யாருமில்லாத தனிமையில் - நாலு சுவர் மறைப்பில் கட்டியணைத்ததற்கே கண்ணீர் சிந்திய பிரேமா...

விடிவிளக்கு வெளிச்சத்தைக் கூட அனுமதிக்காத அவளது லஜ்ஜை...

மூன்று ரோடுகளும் சந்திக்கிற முக்கு ரோட்டில் - பல நூறு ஆண்கள் பார்வையில் உண்ணாவிரதத்தில் உட்காரச் சம்மதிப்பாளா?

வேப்ப மரத்தடியில் சைக்கிளை நிறுத்தி விட்டு... ஹேண்ட் பேக்கை எடுத்துக் கொண்டு வீட்டுக்குள் வந்தான், பால்ச்சாமி. களையிழந்து வறண்டு போன முகம். ஒளியிழந்து திசை தொலைத்த கண்கள்.

வெக்கரித்த வெயிலில் கண்விழித்து வந்த பால்ச்சாமிக்குள் வீட்டு நிழல் குப்பென்று மோதியது. கண்ணே இருண்டு போன மாதிரி சூழ்ந்து கவிந்த இருட்டு. இமைகளை மூடி மூடித் திறந்த பிறகு... நிதானத்துக்கு வருகிற சூழல். மெள்ள மெள்ளப் புலப்பட்ட நிழல். நிழலாக மாறிய கண்ணிருட்டு.

''ஏங்க... இம்புட்டு நேரம்?''

''பேரவைக் கூட்டம். கொஞ்சம் டயமாயிருச்சு.''

டெக்ஸ்சரைஸ்ட் ஸாரி. கண்ணுக்குக் குளிர்ச்சியான மஞ்சள் நிறம். பீர்க்கைப் பூப்போன்ற பளிச்சென்ற மஞ்சள். அதில் நிறைய ரோஜாப் பூக்களும் நட்சத்திரம் போன்ற நெரிஞ்சுப் பூக்களும் பூத்திருந்தன. பிரேமா பார்க்க ரொம்ப லட்சணமாக இருந்தாள்.

கனிந்த கறுப்பு. கவ்வத் தூண்டுகிற கன்னக் கதுப்பு. தீண்டும்படி சீண்டுகிற குவிந்தமைந்த உதட்டு ஈரக் குழைவு. கட்டுடல் கச்சிதம்... திரட்சி மிக்க இளமைக் கொந்தளிப்பு.

அவனுக்குள் திமிறெடுத்து எழுகிற மோகத்திணவு. 'இப்பவே... இப்பவே...' என்று துடிக்க வைத்து, அவனை விளிம்பு நிலையில் தள்ளுகிற காமாக்னி.

அந்த உணர்ச்சிகளையெல்லாம் கொன்று பொய்யாக்குகிற நினைவு. 'பிரேமா சம்மதிப்பாளா... மானம் காப்பாற்றப் படுமா?' இயல்பைக் கொல்லும் நச்சரிப்பு.

ஆர்வப் படபடப்பாய் அவளைப் பார்த்து விட்டு பின் வாங்கிக் குனிகிற அவனது கண்கள். திகைப்பிலும் குழப்பத்திலும் மிரள மிரள விழிக்கிற அவன்.

"என்னங்க... இப்புடிப் பாக்கீக?"

"ஒண்ணுமில்லே... சும்மாதான்."

"சாப்புடுதீகளா...? சோறு வைக்கட்டா?"

"ம். ஏதாச்சும் தபால் வந்துச்சா?"

"ஒரு கார்டு வந்துச்சு. ரேடியோ ஸ்டாண்டுலே இருக்கு."

அதுவும் இதுவுமாய் முரண்படுகிற யோசனைகள். பெருமூச்சோடு கார்டை எடுத்தான். அசிரத்தையாகப் பார்த்தான். மாவட்டக் குழுக் கூட்டத்திற்கான அழைப்பு.

சட்டையைக் கழற்றினான்.

பின் பக்கம் போனான். அலுமினிய வாளியில் குளிர்ந்த நீரும், கப்பும் இருந்தது. முகம், கால், கை, கழுத்தடி, நெஞ்சு எல்லாம் நீரையள்ளித் தெளித்து, கழுவித் துடைத்தான்.

உடம்புக்கு மேல் பரவிய புத்துணர்ச்சி, மிருதுவை ஸ்பரிச்சிக்கிற உணர்வு, உடம்பெங்கும் புடைத்தெடுத்த தானியம் போல சுத்தத் துல்லியமாய்...

மனப்பாரம் அப்படியேயிருந்தது. நினைக்க நினைக்க மனசு கிடந்து அலை பாய்கிறது. அங்குட்டும் இங்கிட்டும் போக இயலாமல் - போகாமலிருக்கவும் முடியாமல் தத்தளிக்கிற நினைவுகள்.

''என்னாச்சு...? இன்னுமா உடம்பைக் கழுவுதீக?''

அடுப்பங்கரையிலிருந்து அரூபமாய் பிரேமாவின் சத்தம்.

''இந்தா... வந்துட்டேன்.''

''வாங்க சீக்கிரம். வைச்ச சோத்துலே ஈ வந்து உக்காரும்லே?''

''ம்... என்ன கொழம்பு?''

''உங்களுக்குப் பிடிச்ச ஐட்டம்!''

''என்னது?''

''வாளைக் கருவாட்டுத் துண்டு வதக்கி வைச்சிருக்கேன்.''

''நெஜமாவா?''

அவன் முகமெல்லாம் மலர்ச்சியின் பளிச்சிடல். குப்பென்று மனசுக்குள் குதித்தெழுந்த குதூகல உணர்வுகள். முகமெல்லாம் குழந்தைச் சிரிப்பின் பிரகாசிப்பு.

வட்டிலின் முன்பு உட்கார்ந்தான். குனிந்து பார்த்தான்.

''அட... ஆமாம்... நெசந்தா...'' வார்த்தைப்படுத்த முடியாத மகிழ்ச்சிக் கொந்தளிப்பில், அவன். அவளை நிமிர்ந்து பார்த்தான். இவனது மழலைத்தனமான குதூகலிப்பை எதிர்பார்த்துக் காத்திருந்தவளைப் போல... ஒரு தாய்மைக் கனிவோடு குறுநகை செய்தாள்.

வாளை கருவாடு... நெய்மீன் துண்டு என்றால் போதும், பால்ச்சாமி குடியிருந்து தின்பான். ''சோறு கொண்டா, கொண்டா...'' என்பான். ரொம்ப ரசித்துச் சாப்பிடுவான்.

கருவாட்டுத் துண்டு கறுப்பாக எண்ணெய் மினுமினுப்பில் கிடந்தது. தொட்டுப் பார்த்தான். ஓர் இணுக்கை பிய்த்து வாயில் போட்டான். சகலத்தையும் மறந்து விட்ட கும்மாளத்தில்... அவன்.

''அய்ய்! ரொம்ப டேஸ்ட்டாயிருக்கு. ஏய், இங்க வா!''

''என்ன...''

''ஒங்கையைக் கொண்டா.''

''எதுக்கு?''

''அட, கொடேன்...''

அவனது மகிழ்ச்சியான கெஞ்சல். துள்ளலான கொஞ்சல். கல்மிஷமில்லாத கெஞ்சல்.

''என்ன...'' என்ற செல்லச் சிணுங்கலோடு வலது கையை நீட்டினாள். இடது கையால் அவளது பூப்போன்ற கையைப் பற்றினான். மெல்ல இழுத்து... வாயில் வைத்து...

'இச்ச்' என்று முத்தமிட்டான்.

வயிறும் மனசும் நிறையச் சாப்பிட்டான். சாப்பிட்டுக் கழுவியபோது... அவனது திருப்தியில் மகிழ்ந்து கனிந்த சிரிப்போடு துண்டை எடுத்து நீட்டினாள், பிரேமா.

அதை வாங்குகிற போது... தன் ருசியறிந்து, மனசறிந்து ஆக்கி அவித்துப் போட்டு மகிழ்கிற அவளது கரங்களைப் பற்றி, மெல்ல இழுத்து மார்போடு அணைத்தான். ஒளிவிடும் முகத்தைப் பார்த்தான். கனிந்த மனசின் வடிவமாய்... தனது உயிரின் நிறைவில், உயிர் துள்ளுகிற ஆத்மாவின் அழகாய் பிரகாசிக்கிற அவள் முகம்.

அவனுள் நறுக்கிடுகிற குற்ற உணர்ச்சி.

''உண்ணாவிரதத்துல போய் உக்காரு'' என்றால் இந்தப் பூ முகம் என்னாகும்? எப்படிக் கதறியழும்? 'ஐயோ... எனக்கா இந்தத் தண்டனை' என்று எவ்வாறு புலம்பியழும்?

'அடக் கொடுமையே... இந்தப் பூச்செண்டை அடிக்கவா செய்றது? அதுவா நியாயம்?'

ஆனால்... ஆனால்...

''உங்களாலே முடியுமா' என்று தங்கம்மா சந்தேகித்த போது, 'என்னாலே முடியும்' என்று சவடால் அடித்த வீரம். வந்த பாராட்டுகளை, நிறைந்த சபையில் வாங்கிக் கொண்ட வேகம்.

அதுவே... ஒரு தார்மீக நிர்ப்பந்தமாய் இவனை நெருக்கிற நிஜம்.

இவன் முக மாற்றத்தைக் கவனிக்காமல், எச்சில் தட்டை எடுத்துச் சென்றாள், பிரேமா.

9

மனக் குமைச்சலை மறைக்க வழியறியாமல் தவித்த பால்ச்சாமி ஒரு புத்தகத்தை எடுத்தான். கட்டிலில் ஒன்றுக்கு இரண்டு தலையணைகளைப் போட்டுப் படுத்துக் கொண்டே படித்தான்.

எழுத்துகள், வார்த்தைகள் தெரிந்தன. வாக்கியங்கள் ஓடின. மனசுக்குள் எதுவும் ஒட்டவில்லை. 'கண்களுக்கும் மனசுக்குமான இணைப்பு அறுபட்டு விட்டதா' என்று விநோதமாகச் சிந்தித்தான்.

பிரேமாவிடம் எப்படிச் சொல்ல? எப்படி சம்மதிக்க வைக்க? சம்மதிக்கிற மாதிரி என்ன யுக்தியில் சொல்ல? எந்த வகையான தந்திரங்களைக் கையாள்வது?

கண்கள் காகிதத்தில் வலமும் இடமுமாய் பாய... மனசுக்குள் திசை சிதறிய நினைவுகள். நாலா திசைகளிலும் நழுவிக் கொண்டோடுகிற நினைவுகள்.

''ஏங்க...''

''ம்?''

''குளிக்கணுமா? வெந்நீ வைக்கட்டா?''

''ம்... இன்னிக்கு என்ன கெழமை?''

''புதன்கிழமை... ஏன், குளிக்குறதுக்கு நாள் கெழமை பார்க்கணுமா?''

''அதெல்லாம் இல்லே... சரி வெந்நி வை.''

பிரேமா அலுமினியச் சட்டியில் தண்ணீர் ஊற்றுகிற சப்தம். தூக்கி அடுப்பில் வைக்கிற சப்தம். அப்பளம் பொறிக்கிற வாசம்.

மின் விளக்கைத் தட்டிவிட்டான். வீடு பூராவும் வெளிச்சம். அவள் ஒளித் தேவதையைக் கண்ணில் ஒற்றி வணங்கிக் கொண்டாள். இவன் கிழமையைக் கேட்டதாலோ... என்னவோ... காலண்டரைப் பார்த்தாள்.

பௌர்ணமி.

"ஏங்க... இன்னைக்குப் பௌர்ணமி போலிருக்கு."

அது இவன் காதுகளில் விழுந்தது. மனசுக்குள் இறங்கவில்லை. புதன்கிழமை மட்டுமே நின்றது. அம்மா ரிப்போர்ட் செய்த குரல், 'வர்ற சனிக்கிழமை நாட்டுலே நடக்குற பாலியல் வன்முறைக் கொடுமைகளைக் கண்டிச்சு மாநில அளவுலே மாதர் சங்க உண்ணாவிரதப் போராட்டம்.'

'சனிக்கிழமை. அதுக்காக இப்பவே எதுக்குப் போட்டு மனசைக் குழப்பிக்கிடணும்? ம்... ம்... வெள்ளிக்கிழமை பாத்துக்கலாம்.'

மனசின் உள் கசடுகளையெல்லாம் இழுத்து வருவதைப் போல கனத்த பெருமூச்சு. புத்தகத்தை மூடி வைத்தான். மெள்ள எழுந்தான். ஒரு மயிலின் நளினமாய் வந்து வந்து மறைகிற பிரேமா மின்னல்.

ஏதேனும் பேச்சு கொடுக்க ஆசைப்படுகிற பிரேமா. முகத்தின் சிரிப்பும் நினைப்பும் ஒளிக் கோலமாக...

அவனது இறுக்கத்தையும் மௌனத்தையும் உடைக்க பயந்து போய்... அவளும் சப்தமில்லாமல் நடமாடினாள்.

பின்பக்கம் வந்தான். அவரைக் கொடியில் நீலமும் வெள்ளையுமாய்ப் பூங்கொத்துக்கள். சின்ன வேப்பங்கன்று. கீழ்வானத்தைப் பார்த்தான். தங்க வெளிச்சமாய்க் கீழ்வானம். உதயமாகிய நிலாவின் சந்தன நிற ஒளிப்பூச்சு. காம்பவுண்டுச்

சுவருக்கு மேலாக நிலாவின் இளமுகம். பெரிய தங்கத் தாம்பாளமாய் தகதகப்பு. அறுத்த மாம்பழ நிறத் தகதகப்பு... மெல்ல சிணுங்கித் தழுவுகிற மென்காற்று...

நிலாவையே பார்த்தான். மேலேறும் நிலா. வடிவம் சிறிதாகி... வெள்ளிக்கிண்ணமாக தகதகத்து...

அவனது வெற்று முதுகில் ஒரு குளிர் ஸ்பரிசம். பிரேமாவின் கை. அவனுக்குள் சுகப் புல்லரிப்பு. இன்ப ஆச்சர்யம்.

இதே இடத்தில்தான். கட்டியணைத்ததற்காக கதறியவள். இன்று, அவளே வந்து மெல்லத் தொடுகிறாள். இன்பகரமான மாற்றம்.

அவள் பூந்திரேகம் அவனது முதுகில்.

''என்னங்க... நெலாவை ரசிக்கீகளா?''

''ம்...''

''நெலா... தங்கப்பாளம் மாதிரியிருக்குல்லே.''

''ஏய்... பிரேமா, என்ன இன்னைக்கு விசேஷம்?''

''ஒண்ணுமில்லியே...''

அவளை இழுத்து தன்னருகில் நிறுத்தி... இடைவெளியின்றி இறுகச் சேர்த்துக் கொண்டாள். அவளது கன்ன மென்மை, அவனது புஜத்தில் பதிந்தது.

''நெலாவை வர்ணிக்க ஆரம்பிச்சுட்டே?''

''ஏங்க 'இங்கேயும் ஒரு நெலா'ன்னு சொல்றாப்புலே ஒரு பொண்டாட்டி அமையலியேன்னு வருத்தப்படுறீகளா?''

சட்டென்று திரும்பி அவள் முகத்தைப் பார்த்தான். புஜத்தில் பதிந்து கிடந்த அவள் முகத்தைப் பார்த்தான். பார்வையில் கனிவும் குழைவும்.

''ஏங்க... இந்த கருவாய் மூஞ்சியைப் பார்த்தவுடனே உங்களுக்கு எப்படிப் பிடிச்சுப் போச்சு? உங்க அம்மா, அப்பா... சொந்தக்காரங்க எல்லாரையும் மீறிக்கிட்டு சம்மதம் சொன்னீக?''

அவளை மேலும் இழுத்து தன் எதிரில் நிறுத்திக் கொண்ட பால்ச்சாமி அவளைப் பரிவுடன் நோக்கி, புன்னகைத்தான். கண்ணுக்குள் கண்ணாகப் பார்த்தான். ஊடுருவும் பார்வை.

''பிரேமா... நெலா நாளைக்கே கொறை நெலாவாயிரும். ஆனா... நீ... அப்படியா? நாளாக நாளாக நீ கனிவே. மனசாலும் உடம்பாலும் பக்குவமாவே. அழகா மாறுவே. அன்னிக்கும் இந்த நெலா இப்படியேதான் இருக்கும், தெரியுமா?''

''நெசமாவா?''

''அது மட்டுமில்லே பிரேமா... இன்னொரு விஷயம் தெரியுமா?''

''ம்?''

''ஒரு விநாடி வினாவுலே ஒரு கேள்வி. 'உலகத்துலேயே மிகச் சிறந்த அழகி யார்'னு கேட்டாங்க? 'கிளியோபாட்ரா', 'எலிசபெத் டெய்லர்'னு ஏகப்பட்ட பதில்கள். அதுக்கெல்லாம் மார்க் கெடைக்கலே. எந்தப் பதிலுக்கு மார்க் தெரியுமா?''

''ம்?''

''காதலிக்குற என் மனைவி.''

அப்படியே பூரித்துப் போனாள். அவனைத் தழுவி மார்பில் முத்தமிட்டாள். அன்றைக்கு அவள் பௌர்ணமிக் கடலாகக் கொந்தளித்து அலைமோதி அவனுக்குள் ஒடுங்கினாள்.

சொர்க்கமாய் நகர்ந்த அந்த இரவை முழுமையாக அனுபவிக்க முடியாமல் அவனுள் 'சனிக்கிழமை' நினைவுகள்.

விடிந்தால் சனிக்கிழமை. வெள்ளிக்கிழமை மாலையில் பால்ச்சாமி வெளியூர்ப் பயணம் புறப்பட்டுக் கொண்டிருந்தான். சின்ன சூட்கேஸில் துணிமணி, சோப்பு, பிரஷ் எல்லாம் வைத்தான். சனிக்கிழமை இரவுதான் திரும்பி வருவான்.

கட்சியின் மாநில மாநாடு... இன்னும் மூன்று மாதங்களில். கட்சியின் கொள்கைகளையும் தியாக வரலாறுகளையும் சொல்ல வேண்டிய கடமையோடும் நிதி வசூலைக் கருதியும் மாநாட்டு மலர் ஒன்று வெளியிடத் திட்டம்.

அந்த மலருக்கு பால்ச்சாமி இரண்டு பக்கங்கள் விளம்பரம் சேகரித்தாக வேண்டும். கட்சியில் ஏற்றுக் கொண்ட பொறுப்பு.

அது விஷயமாகத்தான் பால்ச்சாமியின் புறப்பாடு.

இன்னும் பிரேமாவிடம் 'உண்ணாவிரத' விஷயத்தைச் சொல்லவில்லை. பயம், நடுக்கம், தயக்கம். அதைச் சொன்ன பிறகு, அவள் படப்போகிற அவஸ்தைகளைக் கண்கொண்டு பார்க்கச் சகிக்காது. மனசு தாங்காது.

உயிரின் துடிப்பை உயிர் தாங்குமா?

அவனுக்குள் தவிப்பு. மூன்று நாள்களாக மாறி மாறி ஏற்பட்ட மன உளைச்சல்கள். 'எப்படிச் சொல்ல... எப்படிச் சொல்ல...' என்று குழம்பித் தவித்த யோசிப்புகள். உள் மனசை வாட்டியெடுத்த வெக்கை நினைவுகள்... நினைவுப் புழுக்கள்.

ஒன்றும் பிடிபடவில்லை. எந்த முடிவும் தோன்றவுமில்லை. எந்த முடிவுக்கு வந்து சேரவும்... மனசில் தைரியமில்லை; நேசித்து நெகிழ்கிற மனசாக - ஈரக்கனிவான மனசாக, ஒரு கண்ணீர்த் துளியின் உஷ்ணத்தைக் கூடத் தாங்க இயலாமல் உருகி வழிகிற மனசாக மாறிப் போனோமே என்று நினைத்து மருகிய பால்ச்சாமி.

இந்த மாற்றம்... வளர்ச்சியா? வீழ்ச்சியா? சுய விமர்சனத்துக்குரியதா... சுய பெருமிதத்துக்குரியதா... புரியவில்லை.

பேரவைக் கூட்டத்தின் உணர்ச்சிச் சூழலில் வெகுண்ட தீவிரம். சுபாவமான அவசரம். வீராப்பு. நினைத்து விட்டால் பின் வாங்காத இயல்பு. 'என்னால் முடியும்' என்று அடித்துச் சொன்ன தீவிரம். 'தோற்று விட்டால் பல தோழர்களின் பரிகாசத்திற்கு ஆளாக வேண்டுமே' என்கிற பதற்றம். நமைச்சல்.

அவன் கிடுக்கிப் பிடியில் சிக்கிக் கொண்டான்.

இங்கோ... கூச்ச சுபாவத்தை பிறவிப் பழக்கமாகக் கொண்டவள். அடுப்பங்கரையே உலகம் என்று ஒடுங்கிப் போனதில் சுயநிறைவு காண்கிற பிரேமா. இந்த உலகத்தை ஓர் அணு கூட விஸ்தரிக்கப் பயப்படுகிற பட்டிக்காடு.

'என்ன செய்ய...' என்ற கேள்வியே விசுவரூபமாகி அவனைத் தழுவி வளைத்து, நெருக்கி...

மூச்சுத் திணறுகிறான்.

சூட்கேஸை மூடினான். சட்டையை மாட்டினான். முகத்தைக் கழுவித் துடைத்து... லேசாக பவுடர் அப்பிக் கொண்டான்.

''சரி... எப்ப வருவீக?''

''சனிக்கிழமை நைட்லே வந்துருவேன்.''

''நாளைக்கா...?''

''ம்.''

யோசனைகள் அவனை நிர்ப்பந்திக்க... தயக்கமும் இறுக்கமுமாய் பிரேமா முகத்தைப் பார்த்தான். உதடு வரைக்கும் வந்து வந்து திரும்புகிற வெடிகுண்டு. தூக்கி யெறிய உதடுகளுக்குத் தயக்கம். நாக்கில் நடுக்க வியர்வை.

''என்னங்க?''

''ஒண்ணுமில்லே...''

''என்னமோ சொல்லணும்னு நெனைக்கீளே?''

''ம்...'' என்று அடர்த்தியாய்ப் பெருமூச்சு விட்டான். மனசை அரித்துத் தின்னுகிற கவலைகள்.

''பிரேமா...'' என்றான். குரலில் கனிவும், குழைவும்.

''நாளைக்கு நம்ம ஊர்லே... முக்கு ரோட்டுலே... ரொம்ப பெண்கள் உண்ணாவிரதம் இருக்கப் போறாக. எப்படியும் அம்பது... அறுபது பெண்கள் தேறும்.''

''எதுக்குங்க?''

சொன்னான். சிறுமிகள் கற்பழிக்கப்படுகிற கொடுமை. காவல் நிலையங்களில் ஏழை எளிய தாழ்த்தப்பட்ட பெண்களை நிர்வாணமாக்கி கற்பழிக்கிற அத்துமீறல்கள்.

'அடக் கொடுமைக்காரப் பாவிகளா...', 'அக்கிரமக்காரப் பாவிகளா...', 'நாசமாய்ப் போற சனியங்க...', 'அக்கா தங்கச்சிக கூடப் பொறக்காத மிருகங்களா...' என்ற மனக் கொதிப்பின் தெறிப்புகளாக சபித்தல்களோடு 'ம்' கொட்டினாள், பிரேமா.

''இதெல்லாம் கண்டிச்சுத்தான்... நாளைய உண்ணா விரதம்.''

''பொம்பளைகளா?''

''ஆமா!''

''நடுத் தெருவுலேயா?''

''ம்...''

''நூறு ஜனம் போய் வர்ற எடத்திலேயா?''

''ம்...''

''எப்படிங்க முடியும்? பொம்பளைகளுக்குக் கூச்சமாயிருக்காதா? ஆம்பளைக கூடிப் பாக்க... பொம்பளைக நடுத் தெருவுல உக்காரணும்னா... வெக்கமாயிருக்காதா?''

''எதுக்கு வெக்கப்படணும்? வெக்கக் கேடான கொடுமைகளை முடிவுக்குக் கொண்டு வரணும்னா... பெண்களுக்கு தைரியம் வர வேண்டாமா? துணிச்சல் வர வேண்டாமா? பெண்களுக்கு ஆபத்து வந்தா... பெண்கள் தானே கோபப் படணும்?''

''ஏங்க...? துரோபதைக்கு ஆபத்துன்னா... கிருஷ்ண பகவான் வரல்லியா? சீதையைச் சிறையெடுத்தப்ப... ராமரு வந்து காப்பாத்தலியா?''

பிரேமாவின் வெகுளித்தனமாக வெள்ளைக் கேள்வி. அவனது யத்தனிப்பு ஆயுதங்களையெல்லாம் 'பொல, பொல'வென்று உதிர்த்து விட்ட கேள்வி. அவனுள் குப்பென்று சூழ்ந்த சூன்யம். அவனையே அச்சுறுத்தித் தடுமாற வைக்கிற அவனது உள் பலவீனம்.

ரொம்பத் தள்ளாடிப் போனான். சமாளித்துக் கொண்டு... மூர்க்கமாய் எழுந்தான், உள்ளுக்குள்.

''அதெல்லாம்... புராணக் கதைகள்லே. நடப்புலே நடக்காது. இங்க... ஒன்னை அடிச்சா... ஒனக்குத்தான் வலி; நீதான் கத்தியாகணும்.''

''மேடைப் பேச்சாளரு... நீங்க. உங்களைப் பேசிச் செயிக்க முடியுமா?'' என்று 'கெத்தாக'ப் பின் வாங்குகிற பிரேமா.

''அதுமட்டுமில்லே பிரேமா...''

''ம். சொல்லுங்க.''

''அன்னிக்கு நடந்து பேரவைக் கூட்டத்துலே... ஒன்னை நம்பி ஒரு சவால் வுட்டுட்டேன்.''

''சவாலா?''

தொண்டைக்குள் சத்தமாக ஹீனமடைகிற குரல். முகத்தில் பயக் களை. வெடிகுண்டின் வெடிப்பை மர்மமாய் யூகித்து விட்ட கிலியுணர்ச்சி. வெட்டுப்பட்ட பல்லி வாலாகப் படபடத்துத் துடிக்கிற இமை ரோமங்கள்.

''நீயும் உண்ணாவிரதத்துலே பங்கெடுக்கணும்.''

''நானுமா?''

கண்களில் நீர் கோக்கிறது. உதடுகளின் மெல்லிய துடிப்பில் மனசின் அதிர்வுகள். உலர்ந்து வெளுக்கிற முகத்தில் படர்கிற பீதி உணர்ச்சி. வெலவெலப்பு.

இளகிக் கரைகிற மனசை இறுக்கிப் பிடித்துக் கொண்டான், பால்ச்சாமி. தன்னைத்தானே திடப் படுத்திக் கொண்டான்.

''ஆமா. நெறைஞ்ச சபையிலே துணிஞ்ச மனசோட சவால் வுட்டுட்டு வந்தேன். சவால்லே தோத்துட்டா... எனக்கு மானக்கேடு. தலை நிமிர முடியாத கேவலம். பத்துப் பேரு கை கொட்டிச் சிரிக்கிற அவமானம்.''

உள்ளுக்குள் உயிர் நரம்பு வெட்டுப்பட்டதைப் போல, அதிர்ந்து, உறைந்து போன பிரேமா. அழக் கூடப் பிரக்ஞையற்று ஸ்தம்பித்துப் போன பிரேமா.

''பிரேமா... சொந்த பந்தங்களையெல்லாம் ஓதறிட்டு, நீயும் நானும் ஒரு குடும்பமா வாழறோம். என்ன பலத்துலே? ஒனக்காக நானும், எனக்காக நீயும் விட்டுக் குடுத்து அட்ஜஸ்ட் பண்ணிப் போற மன பலத்துலேதான். பரஸ்பரம் ஒருத்தர் மானத்தை ஒருத்தரு காப்பாத்துவோம்ங்கிற நம்பிக்கையிலே தான். அந்த நம்பிக்கைதான்... நாம வாழற... வாழப் போற... தாம்பத்யத்துக்கே அடிப்படை. அஸ்திவாரம். ஆணிவேர்.''

''அந்த நம்பிக்கையிலேயிருந்துதான் அன்பு வளருது. பாசம் வளருது. ஒருத்தரு கால்லே முள்ளு குத்துனா... இன்னொருத்தருக்கு நெஞ்சு வலிக்குது. அந்த நம்பிக்கை... ஊனமாயிட்டா... நம்ம ஒறவே பொய்யாயிரும். வேஷமாயிரும். அழுகையும் கண்ணீருமா... ஏமாத்தும் வஞ்சகமுமா... துவேஷமும் துன்பமுமா... நம்ம வாழ்க்கையே நரகமாயிரும்.''

''..................''

''அந்த நம்பிக்கை எங்கிட்டேயிருக்கு. அந்த நம்பிக்கை யிலேதான், சவால் விட்டுட்டு வந்துட்டேன். என்னோட மான மரியாதையும், நம்மோட எதிர்கால வாழ்க்கையும் ஒங்கையிலேதான் இருக்கு. உண்ணாவிரதத்துலே போய் நீ உக்கார்றதுலேதான் நம்ம உறவோட உயிரே இருக்கு... பாத்துக்க.''

எல்லாம் பேசி முடித்த உணர்வில்... சூட்கேஸை கையில் எடுத்தான், பால்ச்சாமி. செருப்புக்குள் பாதங்களை நுழைத் தான்.

''அப்பச்சரி... பிரேமா... நா போய்ட்டு வர்றேன். நாளைக்கு நைட்லே வந்துருவேன்...''

புறப்பட்டு விட்டான். வாசலைக் கடந்து... வேப்ப மரத்து நிழலைக் கடந்து வீதிக்குள் இறங்கினான். மனப் பாரம் இறங்கியது போலிருந்தது. ஆனால்... மனசுக்குள் புதிய பாரம் ஏறிக் கொண்டதை உணர்ந்தான்.

திரும்பி... பிரேமாவைப் பார்க்க வேண்டும் போல மனசுக்குள் ஒரு குறுகுறுப்பு. கட்டுப்படுத்திக் கொண்டான். திரும்பினால்... தெறிக்கிற முகத்தின் கலக்கத்தில்... கண்ணீர்த் துளியின் மின்னலில்... தன் மனசு கரைந்தாலும் கரைந்து விடுமோ... என்ற பயத்தில், திரும்பாமலேயே நேராக நடந்தான். நடையை எட்டிப் போட்டான்.

ஏனோ... உள்ளுக்குள் குறுகுறுக்கிற குற்ற உணர்வு. முள் முள்ளாகக் குத்திக் கிழிக்கிற சுய வருத்தம். பூச்செண்டை சுத்தியலால் ஓங்கியடித்து விட்ட மாதிரியோர் உறுத்தல்.

எச்சில் வடிய சிரித்துக் கொண்டே தவழ்ந்து வந்த மழலையை எட்டி உதைத்து விட்ட மாதிரியான மன உளைச்சல்.

என்ன செய்வாள் பிரேமா? அழுவாளா? அழுகையை அடக்க மாட்டாமல் திணறுவாளா? என்ன நினைப்பாள்? புருஷன் என்ற அதிகாரத்தில், ஆணாதிக்க மமதையில் - அரட்டி விட்டுப் போவதாகக் குமுறுவாளா? குமைச்சலை யாரிடம் கொட்டியழுவாள்? அழக் கூடத் திராணியற்று முட்டி மோதுகிற உணர்வுகளைக் கொட்டியழவும் ஆளற்று... தனிமைத் தீயில் வெந்து தவிப்பாளோ? மனசுக்குள் பலதை யும் நினைத்து மருகுவாளோ?

பால்ச்சாமியின் பால் மனசு, உள்ளுக்குள்ளேயே மருகித் தவித்தது. தனக்கேயுரிய தீவிர முனைப்புகளும், அவசரப் படபடப்பும்...

முதன் முதலாக... தன்னைத்தானே விலகி நின்று பார்த்தான். தனது பிறவி சுபாவத்தை மனசால் தொட்டு உணர்ந்தான்.

இது என் பலவீனமா?

இந்தச் சுய விசாரணையின் நீட்சி, ஓரிடத்தில் முட்டி மோதி, அறுபட்டு நின்று போயிற்று.

நினைக்கக் கூடாததை நினைத்து... ஏடாகூடமாக... செய்யக் கூடாததை செய்து விட்டால்? (விஷ) மருந்தை கிருந்தை குடித்துத் தொலைத்து விட்டால்?

ஐயய்யோ!

தாளக்கூடிய இழப்பா? ஏழு தலைமுறைக்கும் அழியாத கேவலமாகிப் போகுமே... ஆடி அழித்த சிறுபிள்ளை விளையாட்டுப் போல, வாழ்க்கையே நாசமாகிப் போகுமே...

ஒதுங்கிப் போன சுற்றத்தார் எல்லாம்... கை கொட்டிச் சிரிப்பார்களே...

சின்ன அவமானத்தைச் சந்திக்க பயந்து... பெரிய கேவலப் படுகுழியில் விழுந்து, வாழ்வே நொறுங்கிப் போன அவமானமாகி விடுமோ...

அவனுக்குள் கண்ட கண்ட காட்சிகள்.

இப்படிச் சிந்திக்கவே முடியாத பால்ச்சாமி... சட்டென்று தன் மனத்தை வேறு திசையில் வலுக்கட்டாயமாகச் செலுத்தினான். ஆனாலும்... மனசு, 'திக், திக்' என்று அடித்துக் கொண்டேயிருந்தது. ஆனால் -

பின் வாங்க முடியாமல், அவனது பிறவி சுபாவம் தடுத்தது.

10

''மூச்சந்தியிலே வந்து உக்கார்ந்து போராடுற அளவுக்கு, பொம்பளைகளுக்கு தைர்யம் வந்துருச்சா? குடும்பம் உருப் பட்டாப்புலேதான்.''

அரிவாள் வெட்டு மாதிரி நெஞ்சுக்குள் வந்து விழுந்த வார்த்தைகள். முக்கு ரோட்டில் நின்ற ஏதோ ஓர் ஆம்பளையின் கரகரத்த குரல். வெட்டுப்பட்ட தலையாகக் குனிந்து... பயத்தில் பிராணனே மூச்சுத் திணற, நிமிர்ந்து பார்க்காமல் பிரேதமாய் வந்த பிரேமா.

யாரையும் ஏறிட்டுப் பார்க்கவில்லை. பார்க்கிற தெம்பில்லை. நடுங்கிச் சாகிற மனசு. 'எதிர்காலமும் நம்ம வாழ்க்கையுமே ஒங்கையிலேதான்' என்று பெரிய பாறையை உருட்டித் தலையில் போட்டு விட்டுப் போய் விட்ட பால்ச்சாமி.

பந்தலுக்குள் போனாள். ''வாம்மா''... ''பால்ச்சாமி சம்சாரம்தானே?'' என்ற கேள்விகளின் முகங்களையெல்லாம் பார்க்கவில்லை. நிமிரவில்லை. வெட்டித் தொங்கிய குலையாக முகம்.

கிடைத்த இடத்தில் உட்கார்ந்தாள். சுற்றும் முற்றும் பார்க்கவில்லை. ஏறிட்டுப் பார்க்கவில்லை. குத்துக்கால் வைத்து, அதன் மேல் மடித்துப் போட்ட கைகளுக்குள் முகத்தைப் புதைத்துக் கொண்டாள்.

''என்னம்மா... ஏது செய்யுது? ஒடம்புக்குச் சொகம் இல்லியா? பால்ச்சாமி எங்க போயிருக்காரு? ஏம்மா நிமுந்து பாக்க மாட்டேங்க?''

பரிவும் பதற்றமுமாய் நச்சரிக்கிற பெண் கேள்விகள். எதற்கும் 'உம்' கூட கொட்டவில்லை, பிரேமா. நாசிக்

குள்ளிருந்து வருகிற வெப்ப ஆவி, கையில் சுடுகிறது. மனசின் வெக்கையை உணர்கிற பிரக்ஞையில்லை, அவளுக்கு.

வருகிறவர்களெல்லாம் முகம் தெரியாமல் உட்கார்ந்திருக்கிற இவளை ''யாரு, யாரு?'' - விசாரிக்கிறார்கள். ''பால்ச்சாமி சம்சாரம்'' என்கிற கிசுகிசுப்பான பதில்.

''ஏன் இப்படி இருக்கா?''

''தெரியலே!''

''ஒடம்புக்குச் சொகமில்லியா?''

''என்னென்னு தெரியலே. கேட்டா... ஒண்ணும் சொல்ல மாட்டேங்குது. பயப்படுது போலிருக்கு.''

அவளைச் சுற்றிலும் அவளைப் பற்றிய பேச்சு. அன்பும் அக்கறையுமான விசாரிப்புகள். அவளுக்குக் கேட்கத்தான் செய்கிறது. திரேகமெல்லாம் தீயாய்ப் பற்றியெரிகிறது. நாவெல்லாம் கசந்து அழறுகிறது.

காய்ச்சல் கண்டவளைப் போல நடுங்குகிறாள். சிலீர் சிலீரென்று புல்லரிக்கிறது. கூதலடிக்கிறது. போர்வையால் இறுக மூடிப் படுக்கணும் போல ஓர் உணர்வு.

கெட்ட கெட்ட கனவாக வருகிறது. கட்சித் தலைவரும், தங்கம்மாவும் அரிவாளைக் கையில் கொடுத்து 'வெட்டு, வெட்டு, விடாதே' என்று பால்ச்சாமியை ஏவுகின்ற மாதிரி... ஓடுகிற இவளை விரட்டி, முடியைப் பற்றி கீழே போட்டு, வயிற்றில் கால் வைத்து மிதித்துக் கொண்டு, ஓங்கிய கை மாறாமல் 'சதக்'கென்று வெட்டுகிற மாதிரி... வழிகிற ரத்தத்தைத் தங்கம்மாவும், தலைவரும் அள்ளி அள்ளிக் குடிக்கிற மாதிரி... அவர்கள் முகமெல்லாம் இழுவிய ரத்தப் பிசுக்கு.

உண்ணாவிரதத்தை வாழ்த்திப் பேசுகிற ஆண் குரல்கள். பெண்களை ஒடுக்கி, உணர்வுகளைச் சிதைத்து மகிழ்கிற

ஆணாதிக்கக் குரூரம் பற்றி... பெண்ணைச் சக மனுஷியாக மதிக்காமல், வெறும் போகப் பண்டமாக நினைக்க வைக்கிற சினிமாக் கலாசாரம் பற்றி... பொது வாழ்வுக்கு வருகிற படித்த பெண்களின் ஆத்மாவை அதிர வைக்கிற வக்கிரச் செயல்களைப் பற்றி... காவல் நிலையங்களில் பாலியல் பலாத்காரம் மிகச் சாதாரண விஷயமாகி விட்ட பயங்கரம் பற்றியெல்லாம் பேசுகிற ஆண் குரல்கள்.

தங்கம்மாவும் பேசுகிறார். ஆஸ்துமாவினால் இரைக்கிற குரல். வெறும் காற்றாய் வருகிற தொண்டைக் கிசுகிசுப்பு... சிரமப்பட்டு ஆனால் உணர்ச்சிகரமாகப் பேசுகிற முதுமையின் குரல்.

சிதம்பரம் பத்மினிக்கு நேர்ந்த பயங்கரம் பற்றி விளக்குகிறார். வாச்சாத்தி கிராமப் பெண்களுக்கு இழைக்கப் பட்ட காட்டுமிராண்டித்தனம் பற்றி... ராமேஸ்வரம் மீனவப் பெண்கள் நடத்தப்பட்ட கொடூர விதம் பற்றியெல்லாம் காட்சிப் படுத்திக் பேசுகிறார்...

பிரேமாவுக்குள் ஏற்கெனவே கிடந்த இருட்டு. இப்போது செவியும் அடைத்த மாதிரி... எதுவும் கேட்காமல்... சூழலை உணர முடியாமல்... கிறுகிறுப்பும் தலை சுற்றலுமாக... தானே வட்டச் சுழற்சியாக சுழற்றப்படுகிற மாதிரி...

குத்துக்கால் வைத்து, அதன் மீது மடித்துப் போட்ட கைகளில் முகம் புதைத்து உட்கார்ந்திருந்த பிரேமா... அப்படியே வலது புறமாகச் சரிந்து விட்டாள். மயங்கி விழுந்த அவளைச் சுற்றிலும் பதற்றமும் பதைப்புமாகப் பெண்கள்.

அவள் விழித்துப் பார்க்கிற போது, திங்கட்கிழமையாகி விட்டது.

''பிரேமா... ஏய்... பிரேமா'' கலங்கிக் குழைகிற பால்ச்சாமியின் குரல். அழுகிறவனைப் போல பிசிறடிக்கிற குரல். ஈரப் பசையற்றுக் காய்ந்து போன நாவிலிருந்து எழுகிற குரல். கண்களைத் திறக்க முயன்றாள். 'ஐயோ பாவம்' என்று கருணையால் விம்முகிற அவள் மனம். தனது ஆத்மாவின் தவிப்பாக அவன் குரலை உணர்ந்து துடிக்கிற பிரேமா கண்ணைத் திறந்து அவனுக்கு ஆறுதல் அளிக்கத் தவிக்கிற மனம். ''பதறாதீக. நா நல்லாத்தானிருக்கேன்'' என்று உணர்த்த விழைகிற நெஞ்சு.

இமைகளைப் பிரிக்க முடியவில்லை. கண்ணுக்குள் மணல் விழுந்த மாதிரி நெறுநெறுக்கிறது. அழுத்தலான வலி. சிரமப்பட்டு யத்தனிக்கிறாள். மெல்ல மெல்லப் போராடி இமைகளைத் திறந்தாள்.

கட்டிலின் விளிம்பில் அவன். அவள் முகத்தையே கூர்ந்து பார்க்கிற பால்ச்சாமி. பறவையாடுகிற கண்கள். பதற்றத்திலும் கலக்கத்திலும் இறுகிக் கறுத்துக் கிடக்கிற முகம். இரண்டு நாளாய் பல்லில் பச்சைத் தண்ணீர் படவில்லை போலும். உலர்ந்து போய் வெடித்துக் கிடக்கிற உதடுகள்.

''பிரேமா... பிரேமா...'' தவிப்பும் கலக்கமுமாய் அவன்.

பார்வையிலேயே ஆறுதல் சொல்கிற அவளது கண்கள். உதட்டைப் பிரிக்க முயன்றாள். மெல்லச் சிரிக்க முயன்றாள். பேச விரும்பினாள். தொண்டைக்குள் வறட்சி. பேச இயலாமல் திண்டாட்டம். நாக்கில் கசப்பு. உலர்ந்து போன வறட்சி. தொண்டைக்குள் ஜீவனாகப் பேசினாள்.

''எப்ப வந்தீக?''

''அன்னிக்கே வந்துட்டேன். சனிக்கிழமை நைட்டே.''

''அன்னிக்கே... ன்னா? இன்னிக்கு என்ன கெழமை?''

''திங்கக்கெழமை.''

''மூணு நாளாவா கெறங்கிக் கெடந்தேன்?''

''ஊம்... நா ரொம்பப் பதறிட்டேன் பிரேமா.''

''நீங்க சாப்டீகளா?''

உண்டு, இல்லை என்று இரண்டு பாவனைகளிலும் குழப்பமாய்த் தலையாட்டினான்.

''ரெண்டு நாளா ஒறங்கவேயில்லியா? கண்ணெல்லாம் செவந்து போய்க் கெடக்கு?''

''ஒறக்கமா? உசுரைக் கண்ணுலே வைச்சு உக்காந்துக் கிட்டிருக்கேன். டாக்டரு ரெண்டு மூணு தடவை வந்தாரு. ஊசி போட்டாரு. ரொம்பத் தைர்யம் சொன்னாரு. அப்பவும் பயமாயிருந்துச்சு.''

''டாக்டரு வந்தாரா? நம்ம வீட்டுக்கா?''

''ம்.''

டாக்டர் ரொம்பக் கண்டிப்பு. கிளினிக் வந்தவர்களுக்குத் தான் வைத்தியம். எவ்வளவு பெரிய கோடீஸ்வரனாக இருந்தாலும், வீட்டுக்குப் போய் வைத்தியம் பார்க்கிற பழக்கமில்லை.

''எப்படி வந்தாரு?''

''எல்லாம்... தங்கம்மா ஏற்பாடு.''

''தங்கம்மா என்றதும் சட்டென்று கறுத்துப் போன அவள் முகம். இறுகிப் போன உதடுகள். வெறுப்பின் அயற்சியில் மீண்டும் கண்ணை மூடிக் கொண்டாள். மனசின் பயப் படபடப்பு. நினைவெல்லாம் கசப்பு. பால்ச்சாமி என்ற ஆயுதத்தைக் கையாண்டவள். அம்பை எய்தவள். இவள் நெஞ்சைப் பிளந்து, தரையில் வீழ்த்தி துடிதுடிக்க வைத்த அம்பு. நஞ்சாக்கப்பட்ட அம்பு.

''பிரேமா... பிரேமா... பிரேமா...''

ஆத்மாவின் குரல். அன்பின் துடிப்பு. பாசப் பதைப்பான பால்ச்சாமி. உறக்கமுமில்லாமல் உணவுமில்லாமல் மூன்று நாள்களாய் தவியாய் தவித்து, மன உளைச்சலில் மல்லாடுகிற தனது ஆத்மா. கருணையில் இளகிப் போகிற அவள் மனக் குழைவு.

நீர்க்கசிவோடு கண்களைத் திறந்தாள்.

''என்னம்மா... செய்யுது?''

''ஒண்ணுமில்லே. நல்லாத்தானிருக்கேன்.''

''பெறகு ஏன்... கண்ணை மூடுனே? தெறக்க முடியலியா?''

''முடியுது.''

''ஆயாசமா வருதா? சோர்ந்து போய் வருதா?''

''இப்பப் பரவால்லே. தெம்பாயிருக்கு.''

''எனக்கு இப்பத்தான் உசுரே வருது, பிரேமா.''

அவள் தன் வலக் கையைக் கட்டிலின் விளிம்பில் உட்கார்ந்து பதைக்கும் பால்ச்சாமியின் தொடையில் வைத்தாள். மெல்லத் தட்டிக் கொடுத்தாள். அழுது சிணுங்கும் பிள்ளையை ஆறுதல்படுத்தும் தாயைப் போல.

''எதுக்குப் பதறுதீக? எனக்கு என்ன செஞ்சிரும்? அம்புட்டுப் பாசத்தோட இருக்குற வீட்டுக்காரரை விட்டுட்டுப் போக, எந்தப் பொட்டச்சியாலே ஏலும்?''

அவளது கண்ணில் நீர்க்கசிவு. உலர்ந்த உதடுகளின் உயிரொளியாய் ஒரு புன்னகைக் கீற்று. கன்னக் கதுப்புகளில் கண்விழிக்கும் ஒரு மினுமினுப்பு. மடியில் வைத்த அவள் கையில் இவன் கைவைத்து வருடுகிறான். அவளுக்குள் ஏதோ அதிர்வு. உயிரின் சிலிர்ப்பாக அவனது ஆத்ம ஸ்பரிசம்.

'பிரேமா மயங்கி சரிந்து விட்டாள்' என்ற தகவல் கேள்விப் பட்டு, மனம் கே ளாமல் ஓடி வந்த பிரேமாவின் அம்மா. பதறிப் பதறிப் புலம்பிய அவள். ஆறுதல் சொல்லி தைரியம் சொன்ன இவன்.

''அவ... எந்திக்கிற வரைக்கும், நா இருந்து அடுப்பு வேலையைப் பாக்குறேன்யா...''

''வேண்டாம் அத்தே. நல்லதோ கெட்டதோ நாங்க பாத்துக்கிடுதோம். யாரும் ஒத்தாசைக்கு வர வேண்டாம்.''

''ஏய்யா... இது ஒங்களுக்கு நல்லாயிருக்கா? வீட்டைத் தவிர, வெளியே கால் எடுத்து வைச்சுப் பழக்கமில்லே, எங்க புள்ளைக்கு? அதைப் போய்... முச்சந்தியிலே போய் உக்கார வைச்சு, பாடாய்ப்படுத்தியிருக்கீகளே... இது நியாயமா?''

அழுகையும் புலம்பலுமாய்... அத்தை. இது, கொஞ்சலா, கண்டிப்பா, கோபமா? இனம் பிரிக்க முடியாத தொனி. பால்ச்சாமிக்கு எரிச்சலாக வந்தது.

''நீங்க உங்க ஜோலியைப் பாத்துட்டுப் போங்க. எம் பொண்டாட்டியை எப்படிப் பாத்துக்கிடணும்னு எனக்குத் தெரியும்.''

சள்ளென்று விழுந்தான்.

இவனது அம்மாவும் அய்யாவும் இழவு கேட்க வந்தவர்களைப் போல ஓடி வந்தனர், அலையக் குலைய. அடித்து விரட்டாத குறையாக துரத்தி விட்டான்...

எல்லாவற்றையும் விலாவாரியாக விளக்கிச் சொன்னான். அவள் முகம் மட்டும் 'உம்' கொட்டுகிற பாவனையில் அசைந்து கொண்டிருந்தது. அவள் முகத்தில் பெருமிதக்

களை. கண்களில் மகிழ்ச்சி மின்னல். சில கணங்களில் நீர்த் துளி.

அவள் பரவசப்பட்டுப் போயிருந்தாள், உள்ளுக்குள். தன் மீது எத்தனை வாஞ்சை, இந்த மனிதருக்கு! செக்கச் செவேலென்று சீமை ராசா போலிருக்கும் இந்த ஆளுக்கு, இந்தக் 'கருவாய்ச்சி' மேல் இம்புட்டுப் பிரியமா? நகை நட்டு இல்லாமல் வெறும் கழுதையாக வீட்டுக்குள் வந்தவளுக்கு இம்புட்டு மரியாதையா? இதுக்கு நா தகுதியா? இம்புட்டுப் பிரியமா இருக்குறதுக்கு என்ன காரணம்? எது காரணம்?

கட்சித் தோழர்கள் வந்து பார்த்து விட்டுப் போனதை விளக்கிச் சொன்னபோது, டாக்டர் வந்தார்.

''என்ன காம்ரேட்...'' என்ற கிண்டலும் ஜாலியுமான குரல்.

''சார்... வாங்க.''

''என்ன... இன்னும் படுத்துருக்காங்க? சரியாயிருச்சே. இப்ப அவங்க கையாலே காப்பி சாப்பிட்டுட்டுப் போகலாம்னு வந்தேன்.''

''இப்பத்தான் கண்ணே முழிச்சுப் பாத்தா... சார்...''

''நீங்க ஏன் இப்படிப் பயப்படுறீக? உங்க ஒய்ஃப், இப்ப பர்ஃபெக்டா இருக்காங்க. நோ ப்ராப்ளம். டென்ஷன், அலர்ஜியாலே வந்த காய்ச்சல். சரியாயிருச்சு. நா வாரேன்...''

''ரொம்ப நன்றி... சார்.''

''தங்கம்மாதான் என்னைப் பாடாய்ப்படுத்திட்டாங்க. தாங்க முடியாத நச்சரிப்பு. தாங்க்ஸை அவங்களுக்குச் சொல்லுங்க. பிரேமா, சாயங்காலம் உங்க சமையலை பால்ச்சாமி சாப்பிடலாம்.''

11

பால்ச்சாமிக்கு ஏகப்பட்ட வேலைகள். கட்சிப் பணிகள் ஒரு பக்கம். புஞ்சைப் பணிகள் மறுபக்கம். நின்று மூச்சு விட நேரமில்லை. ஓடியாடித் திரிந்தான். பருத்தி வியாபாரியைத் தேடித் திரிந்தான். டீக்கடையில் விசாரித்தான்.

''ஏவாரி வந்தாரா?''

''யாரு... பருத்தி ஏவாரியா?''

''ம்.''

''இப்பத்தான் வந்துட்டுப் போனாரு... என்ன வெஷயம்?''

''பருத்தி எடை போடணும்.''

''ரேட்டு பேசியாச்சா?''

''அதெல்லாம் பேசியாச்சு. இன்னிக்கு எடை போடப் பேச்சு. அதாலே... கமிட்டிக் கூட்டத்துக்குப் போறதைக் கூடத் தள்ளி வைச்சேன். இந்தாளு என்னடான்னா... நம்மளை இழுத்தடிச்சு வேடிக்கை காட்டுறாரு.''

பால்ச்சாமியிடம் துல்லியமாய்த் தெரிந்த சலிப்பு, முகத்தின் அதிருப்தி விறைப்பில் தெரிந்தது. நிலையற்று அலைபாயும் கண்ணில் மனச் சிடுசிடுப்பு.

''டீ போடவா?''

''வேண்டாம்.''

''புது மாப்பிள்ளை. பொண்டாட்டி கையாலே போடுற டீக்கு தனி மவுசுதான்.''

அந்தக் கேலியின் மெல்லிய சீண்டலில் இவனுள் மலர்கிற கூச்ச உணர்வு. முகத்தின் விறைப்பு மாறி, சட்டென்று கனிவின் குழைவாகிறது. அசட்டுச் சிரிப்பில் மகிழ்வின் பெருமிதம்.

''நீங்க வேற, சும்மாயிருங்கண்ணாச்சி'' என்று ஏதோ ஒப்புக்கு முனங்கிய பால்ச்சாமி, ''ஏவாரி வந்தா... வரச் சொல்லுங்க'' என்று சப்தமாய்ச் சொல்லி விட்டு நகர்ந்தான்.

பருத்தி எப்படியும் ஏழெட்டு குவிண்டால் தேறும். பெரிய அம்பாரம். இருக்கிற செலவுகளை, சில்லறைக் கடன்களை மனசுக்குள் கணக்குப் போட்டான்.

'ஒரு ஜோடி கம்மல் வாங்கித் தரலாமா... பிரேமாவுக்கு?' பாசத்துடன் ஓடிய ஒரு மின்னல். அதன் சரேலென்ற வெளிச்சத்தில் மனசுக்குள் புலப்படுகிற மகிழ்ச்சிப் பூக்கள்.

கம்மலைப் பார்த்தால்... பிரேமா எப்படி பூரிப்பாள்? எவ்வளவு சந்தோஷப்படுவாள்? மனசுக்குள் பிரேமாவின் பூ முகத்து மலர்ச்சி.

உள்ளங்கையில் அந்தத் தங்கக் கம்மலின் மின்னலை புரட்டிப் புரட்டிப் பார்க்கிறாள். முகத்தில் குழந்தையின் குதூகலம்.

''இது எனக்குத்தானா?''

''ம்!''

''நெசம்மா?''

''நெசந்தான். நல்லாயிருக்கா?''

''கம்மலும் நல்லாயிருக்கு.''

''வேற?''

''வாங்கித் தரணும்னு ஆசைப்பட்ட ஒங்க மனசும் நல்லாயிருக்கு.''

விரியும் காட்சியில் பரவசப்படுகிற பால்ச்சாமி. அவன் முகத்தில் கனவின் ஒளி.

வேப்ப மரத்து நிழலில் சைக்கிள். அதன் சிவப்புச் சீட்டில் நிற்கிற செவலைச் சேவல். வாலைத் தாழ்த்தி உடம்பை விறைக்கிற அதன் பாங்கு. எச்சமிடப் போகுதா? 'ச்சூச்சூ...' என்று ஓடிப் போய் பத்துகிற பால்ச்சாமி. பதற்றத்தில் சிறகடிக்கக் கூட முடியாமல் தவ்வி ஓடுகிற வேகம்.

இவன் சத்தம் கேட்டு குழப்பமாய் எட்டிப் பார்க்கிற பிரேமா. அவள் கையெல்லாம் சோப்பு நுரை. காலடிச் சேலையின் முன் நுனிஙய இடுப்பில் எடுத்துச் செருகியிருந்தாள். இடது முழங்காலின் பளீரிடல்.

''அட... நீங்கதானா?'' என்று ஆசுவாசப்பட்ட குரலில் பிரேமா.

''ஒண்ணுமில்லே. சைக்கிள் மேலே சேவல் நின்னுச்சு. அதைப் பத்துனேன்.''

''அதுக்கு இந்தக் கத்தலா?'' என்று செல்லக் கண்டிப்போடு உள்ளே திரும்பினாள். பின் தொடர்ந்தான். சட்டையைக் கழற்றிப் போட்டு பின் பக்கமாய்ப் போனான். பலகைக் கல். அகலமான கருங்கல். அதில் நிறைய சட்டை துணிமணிகள். சோப்புப் போட்டு வைத்திருந்தாள். மிச்சத்துக்குப் போட்டுக் கொண்டிருந்தாள். இவனும் பக்கத்தில் வந்து உட்கார்ந்தான்.

''இங்க என்ன ஜோலி, ஒங்களுக்கு? போங்க உள்ளே.''

''நானும் ஒனக்கு ஒத்தாசை பண்றேன். கூடமாட துணிகளை அலசுதேன்!'' என்று சொல்லிக் கொண்டே அவளது சேலையை அள்ளிக் கும்மினான். பொத் பொத்தென்று கும்மி நசுக்கினான். அழுக்கும் நுரையுமாய் வழிந்தது.

''ஐயய்யோ... சும்மா இருங்க. இதைப் போட்டுட்டு எந்திரிங்க, மொதல்லே...''

பதறிப் பதைத்துப் போய் அவன் கையிலிருந்த ஈரச் சேலையைப் பிடுங்கிப் போட்டாள். 'ஒங்களுக்கு எதுக்கு இந்த ஜோலி? இது பொம்பளைங்க ஜோலி. போங்க அங்குட்டு. யாரும் பாத்தா... சிரிக்கப் போறாக.''

''சிரிக்கட்டும். சிரிப்புங்குறது நல்ல விஷயம் தானே? பிரேமா! பொம்பளைக வேலை, ஆம்பளைக வேலைன்னு தனித்தனியா பிரிக்கக் கூடாது. எல்லா வேலைகளையும் எல்லாரும் செய்யணும். அதான்... ஜனநாயகம்!''

''உங்க ஜனநாயகம், சமத்துவத்தையெல்லாம் வெளியே வைச்சுக்கங்க. வீட்டுக்குள்ளே கொண்டு வர வேண்டாம்.''

''இல்லே பிரேமா! ஆதிகாலத்துலே பொண்ணுக வேட்டைக்குப் போவாக, குலத்துக்கே தலைவியா இருப்பாக. அது தாய்வழிச் சமூகம்னு பேரு.''

''ம்.''

''கால்நடைகளைப் பழக்கி மாடுக, குதிரைக மந்தை மந்தையா வளர்க்க ஆரம்பிச்சு... நெலத்துல வெளைய வைச்ச தான்யத்தை தின்னு, பாலைக் குடிச்சுப் பாத்த பெறகுதான்... பொண்ணுகளை அடிமையாக்கிட்டாக.''

''எதுக்கு?''

''ஒழைக்கிறதுக்கு நெறைய மனுஷங்க தேவைப்பட்டாக. மனுஷங்களைப் பெத்துக் குடுக்குற பொண்ணுகளை வீட்லேயே வைச்சு சீராட்டிச் சீராட்டிப் பூரிச்சாக. மாடுகன்னைப் பாத்துக்கிட்டு, வீட்டுலேயே இருந்து புள்ளைகளைப் பெத்துக் குடுத்தா போதும்னு சொல்லிட்டாக.''

''ம்...''

''அதுக்குப் பெறகுதான் பொண்ணு வீட்டுப் பிராணியா மாறிப் போனா. புள்ளை பெறுகிற மிஷினா... காமப் பண்டமா மாறிட்டா...''

''ம்...''

''இப்பச் சொல்லு பிரேமா! ஒத்தைப் புள்ளை பெத்தா போதும்னு சர்க்காரே கெஞ்சுற இந்தக் காலத்துலேயும் வீட்டுப் பிராணியா மட்டும் பொண்ணு இருந்தா... அது என்ன நியாயம்? நாட்டுப் பிராணியா மாற வேண்டாமா? போட்டி போட்டுகிட்டு ஆணுக்குச் சமதையா பொண்ணு வெளியே வர வேண்டாமா? இப்பவும் கூச்சப்பட்டுக்கிட்டு.... பயந்து கிட்டு... பொம்பளைக ஜோலின்னு தனியா பிரிச்சுக்கிட்டு... வீட்டுக்குள்ளேயே அடைக்கோழி மாதிரி அடைஞ்சுக் கெடந்தா... எப்படி?''

பிரேமா சிரித்தாள். குனிந்து சோப்புப் போட்டுக் கொண்டே 'உம்' கொட்டியவள், சிரிப்புடன் நிமிர்ந்தாள். சிரிப்பில் உயிரில்லை.

''அங்க சுத்தி, இங்க சுத்தி கதை ஏங்கிட்டதா வந்து முடிக்கீகளா? இந்த 'ஊசி' போட்டு மாத்துற வேலையை வெளியே வைச்சுக்கங்க. ஏங்கிட்டே வேண்டாம்.''

''ஏன்...? நீ பொண்ணு இல்லியா?''

''வேண்டாம்னா வேண்டாம். விட்டுடுங்க. பட்டது போதாதா?''

அவள் குரலில் சட்டென்று வந்த இறுக்கம். முகத்தில் வந்த மாற்றம். கவிந்த இருட்டு. கோபச் சிடுசிடுப்பு. சுடுபாலில் வாய் வைத்த பூனை, மோரைக் கண்டால் கூட பயந்து வெருளுமே... அப்படியொரு மிரட்சி.

அந்த மாற்றத்தை மனசால் உணர்ந்தாலும், அதைக் குழைவான சிரிப்பில் கடக்க முயற்சித்த பால்ச்சாமி,

''இல்லே... பிரேமா... நா வந்து...''

''பேச்சை விடுங்கன்னா... விடுங்க. வேற பேச்சுப் பேசுங்க.''

வெறுப்பும் கோபமுமாய்ச் சிடுசிடுத்து அவனை வெட்டிய பிரேமா, மனசின் திருகல் முறுகல். சோப்பை 'பரட், பரட்'டென்று இழுக்கிற இழுப்பில் துல்லியமாய்த் தெரிந்தது.

உள்ளுக்குள் ஒடிந்து துவண்டு போன பால்ச்சாமி. அவனுக்குள் சூழ்ந்த சூன்யம். பேச வார்த்தைகளேயில்லாமல் ஓடி மறைந்த மாயம்.

இதற்கு மேல் ஏதாச்சும் பேசினால் 'அழுது விடுவாளோ' என்ற நிலைமை.

கனத்த பெருமூச்சுடன் உள்ளே போன பால்ச்சாமிக்குள் சுழன்ற வேதனையாக நினைவுகள்.

'புள்ளையார் புடிக்கப் போய், குரங்காய் முடிஞ்ச கதை மாதிரியாகிப் போச்சு. என்னமோ நெனைச்சு அவளை உண்ணாவிரதத்துக்கு நிர்ப்பந்தம் பண்ணப் போய்... அது அவளை இயக்கத்துக்கே எதிரியாக்கிருச்சு. ச்சே!'

மனசுக்குள் நெருஞ்சி முள்ளாய் உறுத்துகிற நினைவுகள்.

ஈரச் சேலையை அடித்துக் கும்மினாள் பிரேமா. அவளுக்குள் அந்த ராத்திரி. பால்ச்சாமி இவளை 'உண்ணாவிரதத்துக்குக் கட்டாயமா போ' என்று சொல்லி விட்டுப் போன பயங்கர ராத்திரி. 'நிர்வாணமாய் தெருவில் பட்டப் பகலில் ஓடு' என்று சொல்லப்பட்டவளாய் துடித்த அந்த இரவு. தனிமையின் பயங்கரத்தில் தவித்த கொடுமை. சொல்லியழ ஆளில்லாமல் சூன்யமாய் உணர்ந்த அவலம். தாய் தகப்பனிடமும் போக முடியாது. பகைத்துக் கொண்டா

யிற்று. 'நாதியற்றுப் போனோமே' என்று எண்ணி எண்ணிச் செத்த பயங்கரம்.

உண்ணாவிரதத்தில் மயங்கி விழுந்த பிறகு நடந்த சம்பவங்களை பலர் சொல்லக் கேட்டிருக்கிறாள் பிரேமா.

மயங்கிச் சரிந்தவுடன் பதைத்துப் போய் அலறிய உண்ணாவிரதப் பெண்கள். பதறிப் போய் உதவிக்கு ஓடி வந்த ஆண் தோழர்கள்.

எப்படி இவளை வீடு கொண்டு போக? தொட்டுத் தூக்கத் தயங்கித் திகைத்த பதற்ற நிமிடங்கள்.

தள்ளு வண்டியைக் கொண்டு வந்து... பெண்கள் இவளைத் தூக்கி அதில் போட... துவண்டு, பிரேதமாய்ச் சுருண்டு கிடந்த பிரேமாவை, எல்லாரும் வேடிக்கை பார்த்துப் பரிதாபப்பட... தள்ளுவண்டியைத் தள்ளி வந்தார்களாம்.

நாலு பேர் இருப்பது தெரிந்தாலே... தலையைக் காட்ட கூச்சப்படுகிற சுபாவமுள்ளவள் பிரேமா. அவள் துவண்டு போய் பரிதாபத்துக்குரிய பிச்சைப் பொருளாக... தெருவே, ஊரே திரண்டு சகல ஜனமும் பார்க்கிற வேடிக்கைப் பொருளாக...

நினைக்க நினைக்க உள்ளுக்குள் கூசிப் போகிறாள், பிரேமா. அவமானம் உயிரைப் பிடுங்கித் தின்கிறது. எத்தனை ஜென்மமெடுத்தாலும் ஆறாத புண்ணாக... அந்த நினைவு.

12

இரண்டு மூன்று மாதங்களாகி விட்டன. நாளும் பொழுதுமாய் நகர்கிற வாழ்க்கை. மனசுகளின்

காயங்களையும் ரணங்களையும் ஆற்றி விட்டு, புதுப் புதுச் சம்பவங்களால் - உணர்ச்சிகளால் - அனுபவங்களால் நிரப்பி, நிரப்பி மனிதர்களை வார்த்துக் கொண்டே இயங்குகிற வாழ்க்கை.

பால்ச்சாமி இருந்தால், பிரேமாவுக்கு வீடே நிறைந்திருக்கிற மாதிரியிருக்கும். திருப்தியும் மகிழ்ச்சியுமாயிருக்கும். கலகலத்த பேச்சுகள். கேலியும் கிண்டலுமான விளையாட்டுகள். வேடிக்கையும் விநோதமுமான காரியங்கள். அவளது கூச்ச சுபாவத்தை நையாண்டி பண்ணுகிற பால்ச்சாமி. அவனது ஆத்திர அவசரப் புத்தியை குத்திக் காட்டுகிற பிரேமா.

ஆனால், பால்ச்சாமி வீட்லிடிருக்கிற நேரம், ரொம்பச் சொற்பம். கமிட்டிக் கூட்டம், ஆர்ப்பாட்டம், தாசில்தாரைச் சந்திக்க... தர்ணா போராட்டம் என்று வெளிக் கிளம்பி விடுவான்.

அவன் போய் விட்டால்... அவனது பேச்சின் இரைச்சல், கொஞ்ச நேரம் வீட்டிற்குள்ளேயே ரீங்கரிக்கும். சிரிப்பின் நிழல்கள். விளையாடிய உணர்வுகளின் மங்கலான முகங்கள்.

அப்புறம், வீட்டு வேலைகளில் கொஞ்ச நேரம் கரையும். அதுவும் முடிந்தால்... அவளைச் சூழ்கிற வெறுமை. சுரீரென்று சுட்டுத் தகிக்கிற சூன்யம். வெறும் வீடாக விரிந்து கிடக்கிற மௌனம். மனசின் மூலைகளில் அதிர்வேற் படுத்துகிற இறுக்கமான மௌனம். பரந்து விரிந்து கிடக்கிற வீட்டில் ஒற்றைச் ஜீவனாய் தனித்திருக்கிறோம் என்ற உணர்வே, மனசைப் பெரும் பாரமாக அழுத்தும். மூச்சு முட்டும்.

பேச்சுத் துணைக்கு ஆளில்லாமல் அலைகிற உள் மன நினைவுகள்.

இந்த மாதிரியான நிலைமையில்தான் பக்கத்து வீட்டுப் பெண்களின் பரிச்சயத்தை 'சிக்'கெனப் பற்றிக் கொண்டாள் பிரேமா.

பக்கத்து வீட்டுப் பெண்களுக்கும் இவளது நட்பு தேவைப்பட்டது. ஓசியில் டி.வி. பார்த்துக் கொள்ளலாம். கறுப்பு வெள்ளை டி.வி.தான். சின்னதுதான். ஆனாலும் 'சந்திரகாந்தா' பார்க்க முடிகிறது. 'சாந்தி'யையும் 'சுய மரியாதை'யையும் பின் தொடர முடிகிறது.

பால்ச்சாமி இல்லாத நேரங்களில் பிரேமாவுக்கு பேச்சுத் துணைக்குப் பஞ்சமேயில்லை. யாராவது ஒரு பெண் வந்து நிற்பாள். நிறையப் பேச்சுக்கள். ஒவ்வொரு குடும்பத்திலும் ஒரு வாழ்க்கை. ஒவ்வொரு விதமான பிரச்னைகள். வருத்தங்கள், சுமைகள், வறுமைப்பட்ட குடும்பங்கள், நெருடலான முடிச்சுகள், ஏக்கப் பெருமூச்சுகள்... இத்தனைக்கும் மத்தியிலும் எங்கோ சில மின்னல்களாய் காதலும் மகிழ்ச்சியும் வசந்தத் துளிகளும்.

பேச்சுத் துணைக்கு வருகிற பெண்கள் சில சமயம் அஞ்சு, பத்து கைமாற்றும் கேட்பார்கள். இவளும் கொடுப்பாள். சரியாகத் திரும்பி விடும்.

அன்றைக்கும் அப்படித்தான்.

பால்ச்சாமி சைக்கிளை வேப்பமரத்தில் நிறுத்தி விட்டு உள்ளே வந்தான். மதியம் இரண்டு மணியிருக்கும். அந்நேரம் வரைக்கும் பிரேமாவுடன் வருத்தத்துடன் ஏதோ துன்பத்தைக் கொட்டிப் பேசிக் கொண்டிருந்த மூன்றாவது வீட்டு பாக்கியத்தம்மாள், இவனைக் கண்டதும் புறப்பட்டாள். ''அப்ப... நா வரட்டா... ம்மா?''

சட்டையைக் கழற்றிக் கொண்டே பால்ச்சாமி கேட்டான்.

''என்ன பிரேமா... பாக்கியத்தம்மா ரொம்பக் கவலையோட பேசிக்கிட்டிருந்த மாதிரியிருந்துச்சே... என்ன வெஷயம்?''

''ஒண்ணுமில்லே. ஏதோ காரியமா எரநூறு ரூபா தேவைப்படுதாம். அவசரமாம். ஒங்ககிட்டே கேக்கச் சொல்றாக...''

''என்ன... இப்ப எதுக்கு ரூவா? என்ன அவசரமாம்?''

''ஏதோ... சர்டிபிகேட் வாங்கணுமாம். பையனை ப்ளஸ் ஒன்லே சேக்கணுமாம். ஏதோ ஆளுங்கட்சிக் காரரு எரநூறு ரூவா குடுத்தா... சர்டிபிகேட் வாங்கித் தர்ரேன்னாராம்?''

''என்ன சர்டிபிகேட்?''

''சாதிச் சான்றிதழ்னோ... என்னமோ சொன்னாக!''

''அதுக்கெதுக்கு ரூவா?''

''கையெழுத்துப் போடுற ஆபீஸர்மாருக்குக் குடுக்கணு மாம்லே?''

''எதுக்குப் பணம் குடுக்கணும்? யாருக்கு?''

''கிராம முனிசீப்பு, ஆர்.ஐ., தாசில்தார் எல்லாம் காசு குடுத்தாத்தானே கையெழுத்துப் போடுவாக?''

''அந்தம்மாவையும் அந்தப் பையனையும் கூட்டிட்டு வா.''

''எதுக்குங்க...?''

''அட கூட்டிட்டு வான்னா... வாயேன்.''

பால்ச்சாமியை திகைப்புடன் பார்த்து விட்டுப் போனாள். அடுத்த நிமிடத்தில் பாக்கியத்தம்மாவும் அந்த டவுசர் பையனும்.

என்ன ஏது என்று விசாரித்தான். பாக்கியத்தம்மாள் அறியாமையில் குழம்பிக் குழம்பிச் சொன்னாள். அந்தப் பையன் குறுக்கிட்டு விவரம் சொன்னான்.

''எரநூறு ரூவா கேட்டது யாரு?''

கேட்ட ஆளுங்கட்சிக்காரரைப் பாராட்டிச் சொன்னாள்.

''ஒண்ணும் தெரியாத குருட்டு கழுதை நா. ஏதோ அந்தத் தம்பியாச்சும் எரக்கப்பட்டு, 'ஒதவுறேன்'னு வந்தானே...''

பால்ச்சாமி தனக்குள் சிரித்துக் கொண்டான். எளிய மக்களின் அறியாமையைப் பயன்படுத்திக் கொண்டு, லஞ்சமும் ஊழலும் விஷப் பரவலாகப் படர்கிறதே என்கிற வேதனையின் சிரிப்பு.

ஹேண்ட் பேக்கிற்குள் மடித்துக் கிடந்த சாதிச் சான்றிதழுக்கான விண்ணப்பப் படிவத்தை எடுத்தான். அந்தப் பையனின் கையெழுத்தை வாங்கிக் கொண்டான்.

மூன்றாவது நாள்.

''இந்தா... பிரேமா.''

''என்னது?''

''பாக்கியத்தம்மா பையனுக்கான ஜாதிச் சான்றிதழ்.''

''நீங்களே செலவழிச்சிட்டீங்களா?''

''அஞ்சு பைசா கூட செலவாகலே. ஞாயத்தை நேர்மையோட கேக்குறதுக்கு என்ன செலவு?''

பாக்கியத்தம்மா இந்த விஷயத்தை ஒரு பிரமிப்பாக உணர்ந்தாள்.

''நெசந்தானா? ஒண்ணும் செலவாகலியா? நெசந்தானா?'' என்று மருகி மருகிக் கேட்டாள். கூலிக்கு உழைத்து கஞ்சி குடித்து காலத்தைக் கழிக்கிற அந்த அம்மாவுக்கு இருநூறு ரூபாய் மிச்சம் என்பதே... பெரிய விஷயம். ஒரு பொக்கிஷம் கிடைத்து விட்ட பரவசம்.

கையெடுத்துக் கும்பிடுகிறபோது, பாக்கியத்தம்மா நிஜமாகவே கண் கலங்கி விட்டாள்.

''பிரேமா! ஒம் புருஷன் சாமான்யமான காரியம் செய்யலேம்மா. வம்ச வெளக்கோட சுடரை ஏத்தி வைச்சிருக்கான். எம் புள்ள படிக்கிறதுக்கு தெம்பு குடுத்துருக்கான்.''

பிரேமாவுக்குள் ஏதோ ஒரு பிசைவு. பாக்கியத்தம்மா நன்றி சொல்ல தெரியாமல் கண்ணீர் உகுத்த அந்த விஷயம். அது கண்ணீராகத் தெரியவில்லை, பிரேமாவுக்கு. தர்மத்தை தரிசித்த ஓர் ஆத்மாவின் பரவசமாகத் தோன்றியது.

பால்ச்சாமி குறித்த அவளது மரியாதையே இன்னொரு பரிமாணம் பெற்றது.

பாக்கியத்தம்மா தெரு பூராவும் பரவசப்பட்டு, புகழ்ந்து புகழ்ந்து சொல்ல... பிரேமாவுக்கே தனி மரியாதை.

குழாயில் தண்ணீர் பிடிக்கப் போய் நின்றாள். தன் வரிசைக்காகக் காத்திருக்கத் தயாராகி நின்றாள். குழாயைச் சுற்றி நின்ற பெண்கள் பிரேமாவுக்குத் தனிச் சலுகை காட்டினர்.

''பிரேமா... நீ புடிச்சுட்டுப் போம்மா.''

''என்னோட வரிசை இன்னும் வரல்லியே?''

''பரவால்லேம்மா. நீ புடிச்சிகிட்டுப் போ.''

குடத்தில் தண்ணீரைப் பிடித்து இடுப்பில் வைத்துக் கொண்டு நடந்து வருகிறபோது, குடத்து நீராகத் ததும்பித் தத்தளித்தது மனசு.

தெருவில் கிடைத்த கிரீடம். தெருவே சூட்டிய கிரீடம். பால்ச்சாமியால் இவளுக்குக் கிட்டிய மரியாதைகள். பூ

விரிப்புகள். பிரேமாவுக்குள் ஜில்லென்று பூத்த பூக்கள். பூக்களாய் மலர்ந்து பரவுகிற வாசம். அவளுக்குள் கிறுகிறுப்பு.

பாக்கியத்தம்மாவின் கறுத்த முகத்தில் வழிந்த அந்தக் கண்ணீர். கண்ணீரில் மின்னி வெதுவெதுத்த நன்றி உணர்ச்சி. வார்த்தைப்படுத்தாத உணர்வுகளின் மொழிகள்.

ஓர் ஏழையின் துன்பத்தைத் துடைத்த இந்தக் காரியத்தில் அவளுக்குள் பரவுகிற சுகம்.

அன்றைக்கு ஏனோ அவளுக்குள் பௌர்ணமி ராத்திரியாய் கொந்தளிப்பு. திரேகம் முழுவதும் பரபரப்பு. பரவசத் தத்தளிப்பு. ஓடி ஓடி வேலைகளை முடித்தாள். குளித்தாள். இருப்பதில் நல்ல சேலையை எடுத்து உடுத்தினாள்.

பால்ச்சாமி வருவதற்கு ரொம்பத் தாமதமாகி விட்டது. இருட்டி விட்டது. மணி எட்டுக்கு மேலாகி விட்டது.

''ஏன் இம்புட்டு நேரம்?'' என்கிற வழக்கமான கேள்வியைக் கேட்க மனசு வரவில்லை. குளிர்ந்த சிரிப்பாகச் சிரித்தாள்.

''இப்பத்தான் வாரீகளா?'' என்று குளிர்ச்சியாகக் கேட்டாள்.

''குளிக்கீகளா?''

''வெந்நீ இருக்கா?''

''போட்டுருக்கேன்.''

இவனது உலகத்திற்குள் இவன். இவளது உலகத்தின் புது மலர்ச்சியை இவன் உணரவேயில்லை. உணர்வேயில்லாமல் 'ம்' போட்டான்.

குளித்தான். சாப்பிட உட்கார்ந்தான்.

வாளைக் கருவாடு. துண்டு துண்டாக நறுக்கி, வெங்காயம், மிளகாய் அறுத்துப் போட்டு எண்ணெயில் வதக்கியிருந்தாள். இவனுக்குப் பிடித்தமான அயிட்டம். வாளைக் கருவாட்டைக் கண்டவுடன், இவளது உலகத்துக்குள் வந்துவிட்ட பால்ச்சாமி, சிறு பையன் போல மகிழ்ச்சியில் கும்மாளமிட்டான். ஆனந்த ஆச்சர்யம்.

''ஐய்ய்! வாளைக் கருவாடா?''

''ம்!''

''ரொம்ப ருசியாயிருக்கே.''

''சாப்புடுங்க.''

அன்றைக்கு இரவில் பிரேமாவே ரொம்ப ருசியாக இருந்தாள்.

இப்போதெல்லாம் -

தெருவில் பிரேமா ரொம்பப் பிரபல்யம். கால் ஊனமான ஓர் இளம் பெண்ணுக்கு மான்யத்துடன் கூடிய தையல் மெஷின் கடன், ஓர் ஏழைப் பையனுக்கு 'டான்போஸ்கோ' கல்வி நிறுவனத்தின் இலவசக் கல்வி உதவி என்று பல காரியங்கள் பிரேமா மூலம் நிறைவேறிற்று.

உதவி பெற்றவர்களின் நன்றி உணர்வும் வெள்ளை மனசான பாராட்டுகளும் இவளுக்குள் ஓர் பரவசத்தை உண்டு பண்ணிற்று. சில ஏழைகளுக்கு உதவ முடிந்த மகிழ்ச்சி இவளுக்கு. இந்த மகிழ்ச்சியே மிகப் பெரிய சிரமத்தில் சிக்க வைக்கப் போகிறது என்பதைக் கண்டாளா, என்ன?

13

மூன்று நாள்களாயிற்று, பால்ச்சாமி போய். இன்னும் இருபது நாள்களாகும் திரும்பி வர.

கல்கத்தாவில் அகில இந்திய ஜனநாயக வாலிபர் சங்கத்தின் அகில இந்திய மாநாடு. தமிழ்நாட்டின் பிரதிநிதிகளில் ஒருவனாக பால்ச்சாமியும் தேர்வு செய்யப்பட்டிருக்கிறான்.

அதில் பால்ச்சாமிக்கு தலைகால் புரியாத சந்தோஷம். கல்கத்தா பயணத்தில் ஏகமாய்க் குதூகலம். தரையில் கால் பாவாமல் பரவசப்பட்டுப் போய்த் திரிந்தான். சொல்லிச் சொல்லி மகிழ்ந்தான்.

'கல்கத்தா என்ன நினைக்கிறதோ, அதைத்தான் இந்தியா செய்யும்' என்று நேதாஜி சொன்னாராம். 'தங்கம் செய்யாததைச் சங்கம் செய்யும். அதையும் வங்கம் செய்யும்' என்றும் நேதாஜி சொன்னாராம். வீர பூமியாம். ஞான பூமியாம். புரட்சிகரமான துறவியாம் விவேகாநந்தரைத் தந்த பூமியாம்.

தமிழ்க் கவிதா உலகிலேயே முதன் முதலாக பெண்ணுரிமையை பிசிறில்லாமல் முழங்கியவன், மகாகவி பாரதி. அவருக்குள் பெண்ணுரிமைச் சிந்தனைச் சுடரை ஏற்றி வைத்ததே, கல்கத்தாவிலிருந்த நிவேதிதா அம்மையார் தானாம்.

'அப்பேர்ப்பட்ட கல்கத்தாவுக்குப் போகிறேனாக்கும்' என்று பூரித்துப் போயிருந்தான். கொதித்த பாலாய் பொங்கித் ததும்பிக் கொண்டிருந்தான். தடபுடல் ஏற்பாடுகளில் தத்தளித்தான்.

மாநாடு ஐந்து நாள்கள்தான். மேற்கொண்டு பதினைந்து நாள்கள் சுற்றுலா. ஆக... ஊர் வந்து சேர இருபது நாள்களாகலாம். கூடவும் ஆகலாம்.

இவளையும் உடன் அழைத்தான். எவ்வளவோ கெஞ்சிக் கூத்தாடினான். ஒரேயடியாக மறுத்து விட்டாள்.

''நீங்களும் நானும் மட்டும்னா வாரேன். எங்க கூப்டாலும் வாரேன். முப்பது நாப்பது பேரோட சேர்ந்து பயணம்னா நா வரலை'' என்று ஒரேயடியாகச் சாதித்து விட்டாள்.

அவளது பிறவிச் சுபாவமான கூச்ச சுபாவத்தை ரொம்பத் திட்டித் தீர்த்தான், செல்லமாய்.

இவளை விட்டு விட்டுப் போவதில் அவனுக்கு ஏகப்பட்ட வருத்தம். தயக்கம். மருகித் தவித்தான். பாக்கியத்தம்மாதான் தைரியம் சொல்லியனுப்பினாள்.

''நீ கவலையில்லாம போய்ட்டு, சந்தோஷமா வா... பாலு. நாங்க இல்லியா? பிரேமாவை பாத்துக்கிட மாட்டோமா? தாய்க்குத் தாயாயிருந்து, அவளை புள்ளை மாதிரி கவனிச்சுக்கிடுவோம்.''

அந்தத் தைரியத்தில்தான், பால்ச்சாமி புறப்பட்டான். அவன் போய் மூன்று நாளான பிறகுதான், அந்தப் புயல் நிகழ்ந்தது.

வீடு வீடாய் குடும்ப அட்டைகள் விநியோகித்தார்கள். புதிய குடும்ப அட்டைகள். புதுப்பிக்கப்பட்ட ரேஷன் கார்டுகள்.

அதில் ஏகப்பட்ட விடுதல்கள். நிறைய குடும்பங்களுக்கு அட்டைகள் வழங்கவில்லை. விடுபட்ட கணக்குகளாய் - பிரஜா உரிமையை இழந்த அகதிகளாய் - தவித்த குடும்பங்கள்.

கொடுக்கப்பட்ட அட்டைகளிலும் ஏகப்பட்ட குளறுபடிகள். சில அட்டைகளில் உயிருடனிருக்கும் பிள்ளைகளைக் கொன்றிருந்தார்கள். வயதுகளை தாறுமாறாக்கியிருந்தனர். சில குடும்பத் தலைவர்களின் பெயர்களையே காணவில்லை. தொலைக்கப்பட்டு விட்டார்கள்.

இன்னும் சில அட்டைகள் ஒரே கோமாளிக் கூத்தாக இருந்தன. தகப்பன் வயது 12 என்றிருந்தது. பிள்ளையின் வயது 42 என்றிருந்தது.

பிரேமாவுக்குள் பயங்கரச் சோர்வு. பால்ச்சாமி தொலை தூரத்துக்கு - நீண்ட இடைவெளியில் போயிருக்கிறான் என்ற நிஜத்தின் அழுத்தத்தை ஒப்புக் கொள்ள மறுக்கிற அயற்சி. வீட்டுக்குள் வேலையுமில்லை. ஏதோ வீட்டு வேலைகள் பூராவுமே பால்ச்சாமிக்கே நிகழ்ந்து கொண்டிருந்த மாதிரி தெரிகிறது.

அவன் இல்லை என்றவுடன் சட்டி, பானை கழுவத் தோன்றவில்லை. ஆசை ஆசையாய் யோசித்து, அக்கறையாய் சமையல் செய்கிற மனசில்லை.

'நமக்கு மட்டுந்தானே? கெடக்கட்டும். பழைய சோறே போதும். ஊறுகாய் இருக்கு. பாத்துக்கலாம்' என்கிற அசிரத்தை. வந்து அமுக்குகிற அசமந்தம். செயலற்ற தன்மை. இயல்பான ஓர் இழையோட்டம் அறுபட்டுப் போன மாதிரி ஓர் எரிச்சல். எதையோ பறித்துக் கொண்ட மாதிரியோர் வெறுமை. காரணமற்ற கோபமும் குமைச்சலும் திசையில்லாமல் உள்ளுக்குள்ளேயே முட்டி மோதியது.

இரண்டு மூன்று மாதங்களுக்குப் பிறகு, அவளுள் தலை நீட்டிய பழைய வெறுப்பு. 'கட்சி, கட்சி'ன்னு ஒரே கிறுக்காய்த் திரியுறாரே. நல்ல மனுஷர்தான். அவரை இந்தக்

கட்சிப் பேய்தான் ஒரு மோகினிப் பிசாசு மாதிரி பிடிச்சாட்டுது. அந்த மோகினிப் பிசாசுதான் இப்ப அவரைப் புடுங்கிட்டுப் போயிருக்கு...

தன்னைப் பெண் பார்த்து விட்டுப் போன அன்றைக்கு... கல்யாணத்துக்குக் குறுக்கே மறித்து நின்ற அண்ணன் ஞாபகம் வந்தது. அவனின் கோபக் கத்தல். ''கட்சி, கட்சின்னு ஊர்க்காடு சுத்தத் தெரியும். மைக்கைக் கண்டுட்டா, தண்ணிக் குடிக்காமப் பேசத் தெரியும். வேறென்ன தெரியும், இந்த ஆளுக்கு?'' என்று கூவல்க்காடு போட்ட அண்ணன்.

அவன் சொன்னது சரியாய்ப் போயிற்று. அதுவே நடப்பாகிப் போயிற்று. அவளுக்குள் கப்பிக் கொண்ட ஒரு சோகம்.

அண்ணனை வெட்டிப் பேசிய அம்மா. ''ஒந்தங்கச்சி கெட்டிக்காரியாயிருந்தா, புருஷனை கைக்குள்ளே போட முடியாதா? வசக்கிக் கட்டுப்படுத்தக் கூடாதா? 'ஊரு கட்சி'ன்னு திரியுற மாப்புள்ளையை 'வீடு புஞ்சை'ன்னு திரியுற மாதிரி அக்கறையாக்க முடியாதா?''

அம்மாவின் நம்பிக்கை. ஓர் ஆண் மகனை தாம்பத்திய உலைக் களத்தில் வார்த்து, புது மனிதனாக படைக்கும் ஆற்றல் ஒரு பெண்ணுக்கு உண்டு என்கிற அனுபவப் பாடத்தில் வந்த நம்பிக்கை. அம்மாவின் வைர நம்பிக்கை. அந்த நம்பிக்கையைப் பொய்யாக்கி விட்டோமே என்கிற பிரேமாவின் உளைச்சல். கெட்டிக்காரியாயில்லாமல், பால்ச்சாமியிடம் மயங்கிப் போன பலவீனமாய் தான் சிறுமைப்பட்டிருக்கிற நிஜம்.

பிரேமாவுக்குள் உளைச்சலான நினைவுகள். தகிக்கும் தனிமையில் குஞ்சு பொறிக்கும் முள் நினைவுகள் ஒன்றைத் தொட்டு ஒன்றாக, முடிவுற்றுத் தொடர்கிற நினைவுகள். அனுமான் வால் நினைவுகள்.

அனுமான் வாலை அறுக்கிற மாதிரி பாக்கியத்தம்மாள் அலறிக் கொண்டு வந்தாள்.

''என்னம்மா...?''

''இந்தக் கொடுமையை கேப்பாரில்லையா? எனக்கு ரேஷன் கார்டு இல்லாம ஆக்கிட்டாகளே... பாவிப் பயக!''

''அப்படியா?''

''இங்க பாரு... கூலிக்கு ஒழைச்சு வவுத்தை நனைக்குறோம். அரிசி வெலை யானை வெலை விக்குது. இந்தக் கொடுமையிலே ரேஷன் கடைக் கார்டு இல்லாம... நாங்க எப்படி ஜீவனம் பண்றது?''

''ஏன்... நீங்க கேக்கலியா?''

''கேட்டேனே. இல்லேன்னு கை விரிச்சுட்டாங்களே... நாங்க என்ன செய்ய முடியும்னு கேட்டா... கை ஒதறிட்டுப் போய்ட் டாங்களே...''

''ம்... பெறகு?''

''இன்னும் ஏழு நாள்லே ஏற்பாடு பண்ணுனாத்தான்... ரேஷன் கார்டு கெடைக்குமாம். இல்லேன்னா... நெரந்தரமா இல்லாமப் போயிருமாம்.''

பாக்கியத்தம்மாவின் பேச்சே பாதி ஒப்பாரியாக இருந்தது. ஏழையின் கடைசிக் கவளமும் இல்லாமல் போன அவலத்தின் சோகம்.

பிரேமாவுக்கு என்ன சொல்வது என்று புரியவில்லை. எப்படி ஆறுதல் சொல்ல? என்ன வார்த்தை சொல்ல? அடிபட்ட சிறுமியாய் ஆதரவுக்கு அழுகிற பாக்கியத்தம் மாவை எப்படித் தேற்ற?

திகைப்பில் எல்லா வார்த்தைகளும் ஓடி ஒளிந்து கொண்ட மாதிரியிருந்தது. மொழியே மறந்து போன மாதிரி ஒரு தவிப்பு.

இரக்கமாய்ப் பார்த்தாள். மலட்டுக் கருணை. கையறு நிலையில் வருகிற பரிதாப உணர்வு. இயலாமையின் மூச்சு முட்டல்.

''ஏம்மா... ஏதாச்சும் ஏற்பாடு பண்ணனுமே?'' புகலற்றுப் போன அவலத்தில் பாக்கியத்தம்மா.

''நா என்ன செய்ய முடியும்? அவரு இருந்தா... ஏதாச்சும் செய்வாரு...''

''பால்ச்சாமி வர்றதுக்கு இன்னும் இருவது நாளாகுமே. ஏழு நாளைக்குள்ளே ஏற்பாடு பண்ணலைன்னா... என்னென்னைக்கும் இல்லேன்னு போயிருமே... ஏங்குடியே முழுகிப் போகுமே...''

அதற்குள் ஏழெட்டுப் பேர்கள் வந்து விட்டனர்.

''பால்ச்சாமியண்ணாச்சி இல்லியா?''

''அந்தத் தம்பி எங்க?''

''கொழுந்தனாரு இருக்காகளா?''

''அக்கா, மச்சான் வீட்லே இல்லியா?''

ஆளுக்கொரு கேள்வியோடு வந்த பெண்கள். பிரேமா வீட்டில் மாநாடு போலக் கூட்டம். எல்லா பெண்களுக்கும் குடும்ப அட்டைகள்தாம் பிரச்னை. ஆத்திரமும் ஆங்காரமுமாய் அங்கலாய்க்கிற பெண்கள். பிரேமாவால் உதவி செய்ய முடியும் என்கிற ஒரே நம்பிக்கையில் வந்திருக்கிற பெண்கள்.

பிரேமாவுக்குள் திகைப்பு. மருட்டல். எதுவும் செய்ய முடியாத இவளது நிலைமை. இயலாமை. ஏதாச்சும் உடனடியாகச் செய்தாகணும் என்கிற தவிப்பிலும் துடிப்பிலும் பெண்கள்.

வீடு முழுக்கப் பேச்சு சப்தம். பெண்களின் புலம்பல் சொற்கள். வீட்டின் உள் பக்கம் முழுவதும் கொதி நிலை உணர்ச்சியின் அலை பாய்ச்சல்கள். எல்லா அலைகளின் வெக்கையும், 'என்ன செய்ய?' என்ற கேள்வியில் வந்து முட்டி மோதித் திகைத்தது.

அந்தத் திகைப்பை பாக்கியத்தம்மாதான் அடித்து நொறுக்கினாள்.

''வாங்கடி... நாமளா தாலுகாபீஸ்லே போய் ஞாயம் கேப்போம்.''

''பொம்பளை நாம. நம்மாலே எப்படி முடியும்?''

''ஏன் முடியாது? ஆம்பளையாலே முடியாத காரியங்களையெல்லாம் பொம்பளை நினைச்சா சாதிச்சுக் காட்டிரலாம். போவம். நம்மளை என்ன கடிச்சு முழுங்கிரவா செய்வாக?''

''யாருகிட்டே போய் ஞாயம் கேக்குறது? என்ன ஏதுன்னு ஒண்ணும் தெரியாதே.''

''மொதல்லே போவம். போகப் போகப் பாதை தெரியாமலா போயிரும்?''

பாக்கியத்தம்மாவின் துணிச்சல், ஒரு காற்று மாதிரி, மனசுக்குள் கனலும் தீப்பொறிகளை ஊதுகிறது. ஊதி ஊதிப் பெருக்குகிறது. ஒரு பெரும் தீயாக்குகிறது.

''வா... பிரேமா... போவம் நாம!''

அதே வேகக் கத்தலில் பிரேமாவையும் கூப்பிடுகிற பாக்கியத்தம்மா. பதறித் துடிக்கிற பிரேமா. வெட்டுப் பட்ட பல்லி வாலாய் துடித்தாள்.

''ஐயய்யோ! நானா? அங்கேயெல்லாமா? நா செத்தாலும் வரவே மாட்டேன்.''

''சும்மா... வாம்மா... பயப்படாதே. முன்னாலே போகவேண்டாம்மா. கூட்டத்தோட கூட்டமா ஊடாலே வாம்மா. கூச்சப்படாதேம்மா.''

''ஐயய்யோ... நா வரலே... நா எதுக்கு?''

''பால்ச்சாமி ஊரறிஞ்ச தலைவரு. அவரு பேரைக் கேட்டா ஆபீஸருங்களே பயப்படுவாக. அவரு பொஞ்சாதி எங்க கூட வந்தாலே... ஒரு தைர்யம் வரும் எங்களுக்கு.''

பிரேமா மறுக்கவும் முடியாமல், ஒப்புக் கொள்ளவும் முடியாமல் தவித்தாள்.

14

கழுத்தாம் பிடியாயிருந்தது, பிரேமாவுக்கு. உருவிக் கொள்ளவும் முடியவில்லை; ஒப்புக் கொள்ளவும் முடியவில்லை.

தன்னை நம்பி வந்தவர்கள். வெறும் நம்பிக்கையல்ல; அனுபவப்பட்ட நம்பிக்கை. பால்ச்சாமி இருந்தால் காரியம் ஆகும் என்று வந்து விட்டார்கள். ஒருவர் இருவரல்ல... பதினேழு பேர்.

'என்னாலே முடியாது' என்று சொல்லி விட்டு ஒதுங்கிக் கொள்ள முடியவில்லை. நடுநாயகமாக வர வேண்டாம். தலைமையேற்று முன் செல்ல வேண்டாம். பத்தோடு பதினொன்றாக... கூட்டத்திற்குள் ஒருத்தியாக 'தலைமறைவாகவே' வந்தால் போதும் என்கிறார்கள்.

போதாக்குறைக்கு, பாக்கியத்தம்மாவின் வற்புறுத்தல். நச்சரிப்பு. மனசுக்குள் நெருக்கமாய் நின்று கூறுகிற தைர்யம்.

இவளது பிறவிச் சுபாவமான கூச்ச சுபாவத்தை உணர்ந்து, அதை அங்கீகரித்துச் சொல்கிற தைர்யம். உற்சாகம்.

மறுக்க முடியவில்லை.

''சரி வாரேன்... நா யாருகிட்டேயும் பேச மாட்டேன். பேசுன்னு சொல்லக் கூடாது.''

''வேண்டாம். மூச்சே விட வேண்டாம், நீ. ஆள் கணக்குக்கு வந்தாப் போதும். பால்ச்சாமி பெயரைச் சொல்லிக்கிட்டே உள்ளே போயிருவம்.''

புறப்பட்டு விட்டனர். ஏறுபொழுது. காலை பத்தரை மணி இருக்கும். பிரேமாவுக்குள் இன்னும் சஞ்சலம். எதையும் ஏறிட்டுப் பார்க்க முடியவில்லை. தெம்பில்லை. மனசுக்குள் கூச்சப் படபடப்பு. சுற்றிலும் பெண்களின் பேச்சுச் சப்தம். 'அப்படிப் பேசணும், இப்படி பேசணும்' என்கிற பெண்களின் மன உக்கிரம், பேச்சுக்களாய் வெளித் தெறித்தன.

பிரேமாவுக்கு நடைத் தயக்கம். கால்கள் பின்னிக் கொள்கிற உணர்வு. மனசுக்குள் பயம். ஏதேதோ கற்பனைகள். பிய்த்துப் பிறாண்டிக் கொள்கிற மனக்குரங்கு.

வட்டாட்சியர் அலுவலக வளாகம். நிறைய சைக்கிள்களும் ஒரு ஜீப்பும் நின்றன. வேப்ப மரங்களும், வாகை மரங்களும் நிழல் தருகின்றன. மரத்து நிழலில் நின்ற பிறகுதான் -

வந்தது குழப்பம். யாரைப் பார்க்க? இன்ன காரியத்துக்கு இந்த ஆபீஸர் என்றிருக்குமே... ரேஷனுக்கு யார் பொறுப்பு? யாரைப் பார்க்க?

குழப்பத்தையும் திகைப்பையும் பாக்கியத்தம்மாதான் உடைத்தாள். ''தாசில்தாரைப் போய்ப் பார்ப்போம். அவரு சொல்லட்டும் மத்த வெவரத்தை...''

மெல்ல நிமிர்ந்து பார்த்தாள், பிரேமா.

சூட்டும் சட்டையுமாக நிறைய ஆண்கள். கரை வேட்டிகளோடு வந்து போகிற ஆட்கள். உள்ளே அலுவலகப் பணியாளராக இருந்து பணியாற்றுகிற சில பெண்கள்.

இத்தனை ஆண்களுக்கு மத்தியில் தினம் தினம் வந்து... இருந்து... பேசிப் பழகி... பணியாற்றுகிற பெண்களா? இவர்களுக்குக் கூச்சமேயில்லையா? பயமேயில்லையா? எப்படி முடிகிறது, இந்த பெண்களுக்கு?

இவளுக்குள் வியப்பான நினைவுகள்.

உள்ளே நுழைந்தார்கள். எதிரே ஒருவர் வந்து மறித்தார். வயது நாற்பது இருக்கும். மைக்கறுப்பு. கறுப்புப் பேண்டும், காப்பிக் கலர் சட்டையும் போட்டிருந்தார். ஏதோ ஒரு கிளார்க்.

''எங்கம்மா போறீக?''

''தாசில்தாரைப் பார்க்கணும்.''

''என்னத்துக்கு?''

''ரேஷன் கார்டு கெடைக்கலே!''

''கார்டு கெடைக்கலியா? வந்து குடுத்தவங்ககிட்டே போய்க் கேளுங்க.''

''கேட்டுட்டோம்.''

''நூறு எரநூறை குடுத்துட்டுக் கேளுங்க. கார்டு தானா வரும். இதுக்கெல்லாம் பொம்பளைக சேர்ந்து வந்தீகன்னா... எங்க பொழைப்பு நாறிப் போகும்.''

''பொம்பளைங்கன்னா... மட்டமா? உங்க ஆத்தா, அக்கா, தங்கச்சிக எல்லாம் பொம்பளையில்லியா?''

''ஏய்ய்! என்ன... ரொம்பப் பேசுறீக? தாசில்தாரை இப்பப் பாக்க முடியாது. போங்க... போங்க...''

''பார்த்தாகணும் நாங்க.''

''இன்னிக்கு முடியாது. சொன்னாக் கேளுங்க. மரியாதையோட வெளியே போங்க.''

''வந்துருக்குறது யாரு தெரியுமா?''

''யாரு? கவர்னர் பொண்டாட்டியா? போம்மா... வேலையைப் பாத்துக்கிட்டு.''

''தலைவர் பால்ச்சாமியோட சம்சாரம் வந்துருக்கு.''

''பால்ச்சாமியோ... மோர்ச்சாமியோ... எந்தச் சாமி பொண்டாட்டியும் இப்ப தாசில்தாரைப் பார்க்க முடியாதுன்னா... முடியாதுதான். இப்ப... மரியாதையா வெளியே போறீகளா... இல்லே, போலீஸைக் கூப்பிடவா?''

இந்நேர வரைக்கும் துணிச்சலாய் நின்று பேசிய பாக்கியத்தம்மா, போலீஸ் என்றவுடன் பதறி விட்டாள். துவண்டு சோர்ந்து விட்டாள். 'இனி என்ன செய்ய' என்று தெரியாமல், திரும்புவதற்கு யத்தனித்தாள். எல்லாருக்குமே சோர்வு தட்டி விட்டது. இத்தனை கரடு முரடான பதில் கிடைக்கும் என்று எதிர்பார்க்கவில்லை. இவ்வளவு மூர்க்கமாய்ப் பேசுவார்கள் என்று நினைக்கவில்லை.

பாக்கியத்தம்மா முகத்தில் அயற்சியும், மிரட்சியும். மற்ற பெண்களும் திகைப்பும் கிலியுமாக வெருள வெருள விழித்தனர். துவண்டு சரிந்த மனநிலை. திரும்புவதைத் தவிர வேறு வழியில்லை.

தோற்றுப் போய் விட்டோம். முகத்தில் கரியைப் பூசிக் கொண்டோம். இனி வீடு போக வேண்டியதுதான். ரேஷன் கார்டு இனி கிடைக்க வழியேயில்லை. புலம்பிச் சாவதைத் தவிர வேறு புகல் இல்லை.

பாக்கியத்தம்மா ரொம்ப துவண்டு போனாள். அயற்சியின் உச்சத்தில் பெருமூச்சு விட்டாள். ''ஹூம்... வாங்கடி, வீட்டைப் பாத்துப் போய்ச் சேருவோம்.''

ஆனால், பிரேமாவின் முகத்தில் இறுக்கம். அவமானப்பட்ட ரௌத்ரம். கண்களில் உக்கிரமான பார்வை.

''பால்ச்சாமியோ... மோர்ச்சாமியோ... எந்தச்சாமி...''

அந்த வார்த்தைகளில் வந்த அலட்சியம். வார்த்தைகளில் தெறித்த எரிச்சல். துடுக்குத்தனம். தன் புருஷனை அவமதித்த அந்தத் திமிர். அவளுக்குள் சுரீரென்றது. அனல் சாட்டையாய் அவளைச் சுழற்றியடித்த அந்த வார்த்தைகள்.

பிரேமாவுக்குள் திகுதிகுவென்று தகித்தது. தன்னை அவமானப்படுத்தியிருந்தால் கூட, நாலு சொட்டுக் கண்ணீரில் அதை மறந்திருப்பாள். தன் புருஷனை அவமதிக்கிறான்கள். எந்த நியாயமோ, தகுதியோ இல்லாமல், ஒரு தர்மத்தை எட்டி மிதிக்கிறார்கள். ஒரு கருணையை காறித் துப்புகிறான்கள்.

குஞ்சைத் தூக்குகிற பருந்தைப் பார்க்கும் தாய்க் கோழியாய் அவள் மனசு தகித்தது. 'என்னமாச்சும் செய்யணும்' என்று மனசு கிடந்து துடித்தது. 'என்ன செய்ய... என்ன செய்ய?' என்று பரபரக்கிற மனத்தீவிரம்.

அப்போதுதான்... 'வீட்டுக்குப் போவோம்' என்று புறப்பட்ட பாக்கியதம்மா.

''வேண்டாம்... வீட்டுக்குப் போக வேண்டாம். வாங்க'' என்று வெறிபிடித்தவளைப் போல, பத்ரகாளியாக - அழைத்த பிரேமா, குரலின் அடர்த்தியில் ருத்ர காளியின் சீற்றம்.

''எங்க?''

''கட்சியாபீஸுக்குப் போவம்.''

''பால்ச்சாமி இல்லியே...''

''வேற தோழர்கள் இருப்பாக, வாங்க.''

பத்தோடு பதினொன்றாக தலைமறைவாகப் புதைந்திருந்த பிரேமா, ஒன்றாக முதலில் நடந்தாள். பால்ச்சாமி சொல்லி யிருக்கிற அடையாளங்கள். தெருவின் முகவரி, மளமள வென்று நடந்தாள்.

குறுகலான தெரு. பாழடைந்த கட்டடம். முகப்பில் சிவப்பு போர்டில் வெள்ளையெழுத்துக்கள். இவளைத் தொடர்ந்து உள்ளே நுழைகிற பெண்கள்.

அங்கே -

நாற்பது பெண்கள் இருக்கும். பெரும் கூட்டம். சந்தைச் சளசளப்பாய் சப்தக்காடு. நடுவில் தங்கம்மா. ஒடிசலான தோற்றம். அதே இளைப்பு. பேச முடியாமல் பேசுகிற சப்தம். தொண்டைக்குள்ளேயே முதல் வார்த்தை கிசுகிசுப்பாகி விடுகிற குரல்.

தங்கம்மாவை ரொம்ப நாளைக்குப் பிறகு பார்க்கிறாள்.

இவள் காய்ச்சலில் கிடந்து எழுந்தபிறகு, ஒருநாள் தங்கம்மா வந்திருந்தார். பிரேமாவைப் பார்த்து நலம் விசாரித் தார். அப்போது, பிரேமாவுக்குள் கசப்பு. ஆழ்ந்த வெறுப்பு. எந்தப் பதிலும் சொல்லாமல், இறுக்கமாய் இருந்துவிட்ட பிரேமா.

போகும்போது... பால்ச்சாமியை மட்டும் தனியாக அழைத்த தங்கம்மா. அடங்கிய குரலில் அவனைக் கண்டித்த சப்தம்.

''உங்க ஒய்ஃப் அரண்டு போச்சு. எல்லாம் நீங்கதான் காரணம்.''

''இல்லேம்மா... நா... வந்து...''

''நீங்க நல்லதை நெனைச்சுத்தான் செய்ஞ்சீக. ஆனா முரட்டுத்தனமா - மூர்க்கமா செய்ஞ்சுட்டீக. வாலிபத் தீவிரம்னு சொல்றதா, ஆணாதிக்கக் கொணம்னு சொல்ற தான்னு தெரியலே.''

''இல்லேம்மா... நா அப்படியில்லே!''

''இல்லே பாலு, பெண்ணுக்குச் சுதந்தரம் குடுக்குறது நல்லதுதான். ஆனா, சொமையைத் தூக்கிக் குடுத்த மாதிரி யிருக்கக் கூடாது. விடுதலை குடுக்குறதா நெனைச்சுக்கிட்டு, கழுத்தைப் பிடிச்சு வெளியே தள்ளிரக் கூடாது. சரி சரி... பர வால்லே... இனிமேலாச்சும் மென்மையா டீல் பண்ணுங்க.''

போய் விட்டார்கள். எல்லாச் சப்தமும் பிரேமாவுக்குக் கேட்கத்தான் செய்தது. ஆனாலும் 'வேஷம்... பாவ்லா... தூண்டி விட்டுட்டு, இப்ப வந்து கருணை வேஷம் போட்டுப் போகுது' என்று கசப்புடன் பொருமிக் குமைந்தது, இப்போதும் நினைவில் உரசுகிறது.

தங்கம்மா பிரேமாவை பார்த்ததும் விசேஷ அக்கறையுடன் வந்தார். பக்கத்திற்கு வந்தார்.

''வாம்மா... பால்ச்சாமி ஒய்ஃப்தானே நீ? பிரேமா தானே?''

''ஆமாம்மா...''

''என்னம்மா வெஷயம்?''

தங்கம்மாவின் பார்வை, இவள் பின்னால் வந்த பெண்கள் மீது படர்ந்தது.

''ரேஷன் கார்டு பிரச்னைம்மா.''

''இங்க இவங்களுக்கும் இதுதான்... பிரச்னை...''

''நாங்க தாலுகாபீஸ் போயிருந்தோம்மா...''

''அப்படியா? வெரிகுட்.''

பாக்கியத்தம்மா குறுக்கிட்டு வேதனையும் புலம்பலுமாய் நடந்ததையெல்லாம் விவரித்தாள். 'பொம்பளை', 'ரூபாய் தந்து கார்டு வாங்கச் சொன்னது', 'பால்ச்சாமி மோர்ச்சாமி' எல்லாம் சொன்னாள்.

பிரேமா குறுக்கிட்டு ரொம்ப ஆக்ரோஷமாய்ச் சொன்னாள்.

''பால்ச்சாமி மோர்ச்சாமின்னு அந்தாளு சொன்னானே... அவனை சும்மா விடக் கூடாதும்மா...''

தங்கம்மா உள்பக்கமிருந்த தோழரிடம் கூறினார்.

''நாங்க மறியலுக்குப் போறோம். நீங்க கலெக்டருக்கும் எஸ்.பிக்கும் போன் பண்ணிச் சொல்லிருங்க.''

துப்பாக்கிச் சூடு வரைக்கும் போய்விடுமோ எனப் பயந்தாள் பிரேமா, உள்ளூர.

15

''பிரேமா, பால்ச்சாமி ஒம் புருஷன் மட்டுமில்லே. எங்களுக்கும் தோழர். கட்சி சார்பா தாசில்தாரை, கலெக்டரை அடிக்கடி பார்த்துப் பேசுறவரு. அவரை இழிவு படுத்துனா... ஒட்டு மொத்த இயக்கத்தையே இழிவு படுத்துன மாதிரிதான். அந்த ஆளைச் சும்மா விட மாட்டோம்மா...''

- என்ற தங்கம்மா பிரியத்துடன் ஒரு தாயைப் போல அவள் மேல் கையைப் போட்டார். பாசத்துடன் பார்த்தார்.

பெண்களை ஒட்டு மொத்தமாகப் பார்த்தார்.

''எல்லாரும் அவங்க அவங்க வீட்டுக்குப் போங்க. ரேஷன் கடைக்குப் போற மாதிரி... காலி டின், பை எடுத்துக்கிட்டு

உடனே தாலுகாபீஸ் வந்து சேருங்க. சீக்கிரம் வாங்க. லேட்டாயிர வேண்டாம்.''

எல்லாரும் புறப்பட்டனர். பிரேமாவும் புறப்பட்டாள். அவளை நிறுத்திய தங்கம்மா -

''நீ இரும்மா.''

''எதுக்கும்மா?''

''நாம ரெண்டு பேரும் சேர்ந்து, தாலுகாபீஸ் போவோம்.''

''தோழர், தாலுகாபீஸுக்கும் போன் பண்ணிச் சொல்லி ருங்க, திடீர் மறியல்னு. அப்படியே சிவில் சப்ளை தாசில்தாருக்கும் சொல்லிருங்க.''

பிரேமாவின் தோள்பட்டையில் அம்மாவின் உள்ளங்கை. மிருதுவான வருடல். மனசின் அடியாழம் வரைக்கும் மின் அதிர்வாகப் பரவுகிற ஓர் உணர்வு.

''பிரேமா, சாப்ட்டுட்டியாம்மா?''

''காலையிலேயே சாப்ட்டுட்டேம்மா.''

''காப்பி ஏதாச்சும் போட்டுத் தரட்டா?''

''ஒண்ணும் வேண்டாம்மா.''

''எனக்காகச் சரின்னு சொல்லும்மா. ஒன்னைச் 'சாக்கு' வைச்சு, நானும் ஒரு கிளாஸ் சாப்பிட்டுக்குவேன்.''

இது பொய்யான உபசரிப்பல்ல. விருந்தாளியை உபசரிக்கிற அந்நியத் தன்மையில்லை. அம்மா மகளிடம் சொல்வது போல ஓர் அந்நியோன்யம். உரிமையான பரிவு.

அலுவலகத்தின் ஒரு மூலையில் ஸ்டவ், தட்டு முட்டுச் சாமான்கள். தங்கம்மா ஹார்லிக்ஸ் கலக்கி எடுத்துக் கொண்டு வந்தார், இரண்டு கிளாஸ்களில்.

''சாப்புடும்மா. போராடுறதுக்கும் தெம்பு வேணும்லே?''

பிரேமாவுக்குள் பிரளயம். அவளைத் தலை குப்புறக் கவிழ்த்துகிற பிரளயம். அன்புப் பிரளயம்.

இப்படிப்பட்ட அம்மாவையா வெறுத்தோம்? தனக்கென எதுவும் வைத்துக் கொள்ளாமல், ஓய்வெடுக்க வேண்டிய முதுமை வயதையும், மிச்சமிருக்கும் உயிரையும் கூட அறிமுகமற்ற மக்கள் நலனுக்காக அர்ப்பணித்திருக்கிற இந்த அம்மாவையா? துன்புறுத்தப்படும் எல்லாப் பெண்களையும் தன் மகளாகக் கருதி, கசிந்துருகி, அவர்களது விமோசனத்திற்காக உயிரைக் கொடுத்து உளமாரப் போராடுகிற இந்த லோக மாதாவையா? மாதர் ரட்சகரையா?

அவளுக்குள் முள்ளாய்க் குத்தியழுத்துகிற குற்ற உணர்வு.

'ச்சேய்! இந்தம்மாவோட அருமையைச் சொல்ல அவரு எத்தனை தடவை வாயைத் தெறந்தாரு? வெறுத்துப் போற என்னோட மொகக்குறியைப் பாத்துட்டு, வாயைச் சுருக்கிக் கிட்டாரு? பொல்லாதவங்களைக் கொண்டாடுற முட்டாள் தனத்தை விட, நல்லவங்களைக் கொண்டாடாம இருக்குற மொராட்டுத்தனம்... ரொம்பக் கொடுமையானது...'

அவளுக்குள் ஏதேதோ நினைவுகள். உள் மன உளைச்சல்கள். அந்த அம்மாவின் அன்புப் பிரவாகத்தின் பெருஞ் சுழற்சியில் அவள் கசடுகளெல்லாம் கழன்று கரைய... அவள், அவளாக மாறுகிற அதிசயம்.

''போவமா பிரேமா?''

''ஆவுட்டும்மா.''

இரண்டு கிளாஸ்களையும் பிரேமாவே கழுவி வைத்தாள். புறப்பட்டனர்.

தாலுகாபீஸ் போனால், நிலைமையே பெரும் கலவர நிலவரமாயிருந்தது. போன பெண்கள் மட்டுமல்லர்... கூடுதலாகவும் வந்திருந்தனர். நூற்றுக்கும் மேலே. காலி டின்கள், பைகள் நிறைய நிரப்பப்பட்ட தெருப் புழுதி. தாலுகாபீஸின் வாசல்களை மறித்து டின்களும், புழுதிப் பைகளும், நாற்பதுக்கும் மேலான போலீஸ். துப்பாக்கிகளும் பூட்ஸுகளுமாய் பயங்கரமாய் நின்றனர்.

கோஷமிட்டுக் கொண்டே பெண்கள். சிவப்புச் சேலையும், வெள்ளை ஜாக்கெட்டுமாய் இருக்கிற ஏழெட்டுப் பெண்கள் கோஷம் கொடுத்துக் கொண்டிருந்தனர். தொடர்ந்து சகல பெண்களும்.

''விற்காதீர், விற்காதீர்.''

''குடும்ப அட்டைகளை விற்காதீர்!''

''அவமதிக்காதே, அவமதிக்காதே.''

''மக்கள் தலைவர்களை அவமதிக்காதே!''

''மாதர் தம்மை இழிவு செய்யும் மடமை தன்னைக் கொளுத்துவோம்.''

கோஷமிடுகிற பெண்களை உள்ளிருந்து வேடிக்கை பார்க்கிற ஊழியர்கள். கோஷத்தின் அடர்த்தியில், மொத்த பஜாரே எட்டிப் பார்த்தது.

பிரேமாவுக்குள் நடுக்கம்தான். ஆயுதம் தாங்கிய கான்ஸ்டபிள்களைப் பார்த்துப் பதறினாள். துப்பாக்கிச் சூடு வரைக்கும் போய் விடுமோ என்று நடுங்கினாள். அவளது உள் மனத்தைப் புரிந்து கொண்ட மாதிரி, தங்கம்மா பிரேமாவைப் பார்த்துப் புன்னகைத்தார். அவளது உள்ளங்கையைப் பற்றி மிருதுவாக அழுத்தி ஆறுதல் அளித்தார். ''பயப்படாதே. நா

இருக்கேன்'' என்று எவ்வளவோ மொழிகளைப் பேசுகிற மிருதுவான பற்றுதல்.

ஆனாலும்... பிரேமாவுக்குள் பயம். புதிய அனுபவம். புதிய உலகமாய்த் தோன்றுகிற சம்பவம். உள்ளூரப் பயந்தாள்.

ஆனால்... பயந்த மாதிரி எதுவும் நடக்கவில்லை.

சற்று நேரத்தில் காரில் வந்து இறங்கிய சப் - கலெக்டர். அலுவலக அறைக்குள் பேச்சு வார்த்தைக்கு அழைக்கப்பட்ட தங்கம்மாவும், பிரேமாவும்.

அதிகாரிகளுடன் கோபம் கோபமாக வாதிட்ட தங்கம்மா. கடைசியில் -

கிளார்க்கும், தாசில்தாரும் வருத்தம் தெரிவிக்க, சிவில் சப்ளை தாசில்தார் குடும்ப அட்டைகள் குளறுபடிகளை உடனடியாக நீக்கித் தருவதாக சத்தியம் செய்யாத குறையாக உத்தரவாதம் சொன்னார்.

பிரேமாவுக்கு பிரமிப்பாக இருந்தது. பயந்ததற்கு நேர் மாறாக, எல்லாம் சுமுகமாய் முடிந்து போன அதிசயம்.

அதுமட்டுமல்ல... பெண்கள் திரண்டு போராடுகிற போது, அதற்குக் கிடைக்கிற சக்தி, மக்கள் இயக்கத்திற்கு இருக்கிற சமூக மரியாதை... எல்லாமே ஆச்சர்யமாக இருந்தது.

இந்த அனுபவம், அவள் மனத்தோலை உரித்து அவளைப் புதுமைப்படுத்தி விட்டது. 'அடுப்பங்கரையே உலகம்' என்று, 'அஞ்சிக் கூசி ஒடுங்குவதே ஒழுக்கம்' என்று கூண்டுக்கிளியாக இருந்த பிரேமா, ஏற்கெனவே கதவைத் திறந்திருந்தாள். முளைத்திருந்த சிறகுகளைக் கோதிக் கொண்டு வெளியே நடந்திருந்தாள்.

இந்த அனுபவத்திற்குப் பிறகு, ஏற்பட்ட பலப்பல அனுபவங்கள், கற்ற கல்வி, ஞான வளர்ச்சி, ஆகாயத்தையே சிறகுகளாகக் கொண்டு, பிரபஞ்சம் முழுவதும் பறந்து திரிகிற சுதந்தர மனுஷியாகி விட்டாள்...

அலுவலகத்தின் முன்பு போட்டிருந்த மேடையில் துண்டுகளும், மாலைகளும் அணிவிக்கப்படுகின்றன, பால்ச்சாமிக்கு. கூட்டத்தை விலக்கிக் கொண்டு மாலையுடன் வந்தவள் பிரேமாதான். மாவட்டச் செயலாளர் மைக்கைப் பிடித்துப் பேசினார்.

''எத்தனை ஆட்சி மாற்றம் நிகழ்ந்தாலும் ஏறிக் கொண்டே போகும் விலைவாசி உயர்வு, தனது பயணத்தை நிறுத்திக் கொள்ளவேயில்லை. ஏழை மக்கள் வாங்கி உபயோகிக்கும் பொருளின் விலையெல்லாம் யானை விலை, குதிரை விலையாக ஏறிக் கொண்டே போகிறது. விலைவாசி உயர்வுக்கெதிராக நாடு பூராவும் நாம் நடத்திய மறியல் போராட்டத்தில் கலந்து கொண்டு சிறை சென்று திரும்பியிருக்கும் தோழர் பால்ச்சாமிக்கு... மாதர் சங்கக் கிளைச் செயலாளர் பிரேமா மலர் மாலையை... மாணிக்க மாலையாக அல்ல... மலர் மாலையாகவே அணிவித்து, பாராட்டிப் பேசுவார்.''

ரெட்டைச் சந்தோஷத்தில் கைதட்டலின் சப்தம் ஏக குஷியாகக் கிளம்பியது.

மாலையை இவள் அணிவிக்க, அந்த மாலையை அப்படியே கழற்றி அவள் கழுத்தில் பால்ச்சாமி போட... ஒரே சிரிப்பு, கூட்டுச் சிரிப்பொலி.

சிரிப்புச் சப்தம் அடங்கிய பிறகு... அவள் பேச ஆரம்பித்தாள். பால்ச்சாமி மனசுக்குள் பெருமிதம்.

சினிமாவுக்கு சைக்கிளில் ஏறுவதற்கு கூசிப் பதறிய அந்தப் பிரேமாவா, இது?

நாலு பேர் கூடுகிற இடத்தில் தலை காட்டப் பயந்தவளா? உண்ணாவிரதப் பந்தலில் உட்கார வேண்டிய கட்டாயத்தில், காய்ச்சலே வந்து மயங்கி விழுந்த அந்தக் கூண்டுப் பறவையா... இது?

இத்தனை பெரிய ஜனக்கூட்டத்தில் 'டாண் டாண்' என்று மணி கொண்டு அடித்த மாதிரி முழங்குகிற பிரபஞ்சப் பறவை.

பெருமிதம் ததும்பப் பார்க்கிற பால்ச்சாமியை பேச்சுக் கிடையில் கடைக்கண்ணால் பார்த்தாள். அவனது பரவச முகம்; பெருமிதமும் பூரிப்புமாக மலர்ந்திருக்கிற முகம்.

இப்படிப்பட்ட பூரணப் பெண்ணாக இவளை மாற்று வதற்காக அவன் எடுத்துக் கொண்ட முயற்சிகள். அதன் காயங்கள். மாயங்கள்.

அவளுக்குள்ளும் பொங்கித் ததும்பிய உணர்வுகள்.

அந்த வட்டாரம் முழுவதும் பரவி ஒலிக்கிற அவளது மனசு. ஆகாயச் சிறகுகளோடு பிரபஞ்சம் தழுவிப் பறக்கிற ஒரு வெற்றித் தத்துவத்தின் கீதமாய்த் தொடர்கிற அவளது முழக்கம்.

கங்கை

பாலாஜி ஆப்செட் பிரிண்டர்ஸ்
23633094 -23631794